# நம் உரத்தசிந்தனை

NAM URATHASINTHANAI

ஆண்டு 20 | இதழ் 11 | மே 2022 | தமிழ் மாத இதழ் | விலை ரூ.15/–
Volume 20 | Issue 11 | May 2022 | Tamil Monthly | Price Rs. 15/-





Everest Group
Tel : 17677784
Fax : 17677794
Mob.: 39935880
P.O. Box: 32849, Kingdom of Bahrain, E-mail: sales@everestelectrical.com
Everest Electrical WLL
www.everestelectrical.com
Everest Electrical WLL
Started its journey in 2006 from that day onwards, we are keep on upgrading us with the team of professionals who are trained in exclusive facilities, often based with the principals. It is proud to be one of the leading electrical solution provider to the Bahrain electrical industry. It is capable of supply, installation, testing and commissioning of renowned electrical products and solutions. It is specialized in Switchgear, Automation, Controls, Lighting, Cables, Cable Joints, Termination and Cable Management System and it is associated with world class brands like Siemens, LS, NCI, Cellpack, InterPlast, Eubiq, RR, Maximus, Tridonic, Siteco, Sylvaniya, Intra lighting, Dia light, MCI and many other renowned global brands.
SIEMENS
LS
TRIDONIC
siteco
Dialight
MCI
intra lighting
RR
RR KABEL
eubiq
SYLVANIA
C&S
OSRAM
DECODUCT
PRESTO PLAST
COMET
HAVELLS
ACE



# மதுரையில்
# வாசகர் வட்டம்
# தொடக்கம்...

**11.06.2022**

கவியரங்கம்
நூல் வெளியீடு
வாழ்த்தரங்கம்



## அடுத்த இதழ் –
## தேனி சிறப்பிதழ்

**12.06.2022**
தேனியில்
வெளியிடப்படுகிறது



இந்த இதழ்
**88**
பக்கங்கள்

பக்ரைன் இதழ் தயாரிப்பு
சொல்வேந்தர்
பொன் சங்கரபாண்டியன்



# எங்கே செல்லும் இந்தப் பாதை?

கடந்த ஒரு மாதத்தில் தொடர்ச்சியாக சில காணொலிகளை சமூக வலைதளங்களில் பார்க்க நேர்ந்த போது இதயம் அதிர்ச்சியால் உறைந்து போனது.

பள்ளி மாணவர்கள் வகுப்பறையிலேயே ஆசிரியரைத் தாக்குவதும், கேவலமான வார்த்தைகளால் ஆசிரியர்களைத் திட்டுவதும், ஆசிரியை முன் அசிங்கமாய் வகுப்பறையில் ஆடிப் பாடுவதும், வகுப்பறையில் உள்ள பொருட்களைக் கொலை வெறியுடன் தாக்குவதுபோன்ற காட்சிகளைப் பார்த்தபோது... இவர்கள் மாணவர்களா? இல்லை பேட்டை ரவுடிகளா? என்று கேட்கத் தோன்றுகிறது.

பள்ளி மாணவர்களுக்கு உரிய இலக்கணங்கள் எதுவுமே இல்லாத இந்த விலங்குகளை எப்படி பள்ளிக்குள் அனுமதிக்கிறார்கள்? பெற்றோர்களும் எப்படி இப்படிப்பட்டவர்களை இத்தனை ஒழுங்கீனமாய் வளர்க்கிறார்கள்? என்று நினைக்கிற போது தார்மீக கோபம் கொப்பளிக்கிறது



மாணவிகளின் நிலை எழுதவே விரல் கூசுகிறது. பள்ளிச் சீருடையில் குடித்துக் கும்மாளமிடுவதும், அதைக் கொஞ்சம் கூட கூச்சமோ, பயமோ, பொறுப்புணர்வோ இல்லாமல் சிரிக்க சிரிக்க வீடியோ எடுத்து உலகம் முழுக்க பெண்மையை சிரிப்பாய் சிரிக்க வைப்பதும் சீரழிவின் உச்சம்.

வகுப்பறையிலேயே மாணவியின் மடியில் மாணவன் படுத்திருப்பது, மாணவியை அணைப்பது, மாணவிக்கு மாணவன் தாலி கட்டுவது போன்ற காட்சிகள் சினிமாவில் கூட இன்று வரை வந்ததில்லை. இப்படிப்பட்ட மாணவ மாணவிகளால் கல்வித்துறைக் களங்கப்பட்டு நிற்கிறது. தமிழினம் அவமானத்தால் தலை குனிகிறது.

அரசுப் பள்ளிகளில் மட்டும்தான் இவ்வாறு நடக்கின்றதா என்றால் பல தனியார் பள்ளிகளிலும் நடக்கின்றன. ஆனால்







பணபலத்தால், அதிகார பலத்தால் செய்திகள் வெளியே வருவதில்லை என்பதே உண்மை.

மாணவ சமுதாயம் இப்படி மட்டமான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதற்கானக் காரணங்கள் என்ன ?

எல்லோரையுமே குடிகாரர்களாகவும், கொலை வெறியர்களாகவும் மட்டுமே சித்தரிக்கும் காட்சி ஊடகங்கள், விளம்பரங்கள், இவற்றைத் தடை செய்யாத உளுத்துப் போன உப்புமா சட்டங்கள், மாணவர்களைக் குறிவைத்துத் தயாரிக்கப்படும் போதைப் பொருட்கள், அவற்றை மாணவர்களிடையே கொண்டு சேர்க்கும் விற்பனையாளர்கள் எல்லாம் முக்கியமான குற்றவாளிகள்.

மனித உரிமை சட்டத்துக்குப் பயந்து கண்டிக்கவும், தண்டிக்கவும் தயங்கும் ஆசிரியர்கள், பெயரைக் காப்பாற்றி வருமானத்தைத் தக்க வைக்க நடவடிக்கை எடுக்காத பொறுப்பற்ற பள்ளி நிர்வாகிகள், தட்டிக் கேட்கவும், தட்டிக் கொடுக்கவும், அன்பு காட்டவும் அக்கறை செலுத்தவும் நேரம் ஒதுக்காதப் பெற்றோர்கள் இவர்களும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட வேண்டியவர்களே.

என்றைக்குப் பள்ளிகளில் இறை வணக்கம், நீதி போதனை, உடற்பயிற்சி வகுப்புகள், கலை கலாச்சார நிகழ்வுகள் காணாமல் போனதோ அன்றைக்கே மாணவ சமுதாயத்தின் ஆரோக்கியமான எதிர்காலமும் காணாமல் போனது.

அடிப்பது குடிப்பது ஒழுக்கம் தவறி நடப்பது எல்லாம் அறியாமல் செய்கிற தவறுகளல்ல... தெரிந்தே செய்கின்ற குற்றங்கள் என்பதால்... இவற்றையெல்லாம் சீரமைப்பதற்கு முன் அரசு அவசர அறுவை சிகிச்சையொன்றை செய்ய வேண்டும்.

மனித உரிமை, மனச்சிதைவு, உளவியல் சோதனை போன்ற அறிவுஜீவி அறிவுரைகளை அப்பால் வைத்து விட்டு இப்படி நடந்து கொண்ட ஒவ்வொரு மாணவன் மற்றும் மாணவியையும் இந்த ஆண்டு தேர்வு எழுதத் தடை விதிப்பதோடு... இனி இது போன்று தொடர்ந்தால் இந்தியாவில் எந்த மூலையிலும் எந்தப் பள்ளியிலும் பயில அனுமதி கிடையாது என்ற அதிரடி சட்டத்தை இந்தக் கல்வியாண்டிலேயே கொண்டு வர வேண்டும். காரணம்

**கல்விக் கூடங்களைக் கட்டமைப்பதற்கு முன், கல்வித் திட்டங்களையும் கல்விக்கான சட்டங்களையும் கட்டமைப்பது மட்டும்தான் எங்கோ செல்லும் மாணவ சமுதாயத்தை சரியான பாதையில் பயணிக்கச் செய்தற்கான உரத்தசிந்தனையாக இருக்கும்.**

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றி!
- மகாகவி



# நம் உரத்தசிந்தனை

தன்னம்பிக்கையூட்டும் தமிழ் மாத இதழ்

**திருவள்ளுவர் ஆண்டு - 2053**
**ஆண்டு-20 மே 2022 இதழ்-11**



*நிர்வாக ஆசிரியர்*
**தொலைப்பேசி மீரான்**

*பதிப்பாசிரியர்*
ஓவியர் **மணி**

**ஆசிரியர்: உதயம்ராம்**

*உதவி-ஆசிரியர்கள்*

**பத்மினி பட்டாபிராமன்**
**முனைவர் பாலசாண்டில்யன்**
**துளசி பட்**
**அப்துல் சலாம்**
**டி.ஆர்.சத்யமூர்த்தி**

*நிர்வாகக்குழு*

**கணேஷ் கிருஷ்ணன்**
Padram **ரமேஷ்**
ஓவியர் **காணிக்கைராஜ்**
ஓவியர் **ஸ்ரீகாந்த்**

*வடிவமைப்பு* - **கங்காமோகன்**

*நிருபர்கள்*

விஞ்ஞானி **சு.ராஜு** (ஹைதராபாத்)
**வதிலை பிரதாபன்** (மும்பை)
**எஸ்.மாரியப்பன்** (தேனி)
**ப.சேது மாதவன்** (திருச்சி)
**பழ.ஈஸ்வரமூர்த்தி** (ஈரோடு)
**ந.சண்முகம்** (திருவண்ணாமலை)
**தஞ்சை தாமு** (தஞ்சாவூர்)
**ஆர்.சிவானந்தம்** (கோவில்பட்டி)
பாப்பாக்குடி **செல்வமணி** (திருநெல்வேலி)
**வெ.செந்தில்குமார்** (ஈரோடு)
**கு.பெரியசாமி** (நாமக்கல்)
**சுந்தர.பழனியப்பன்** (கடலூர்)


# நம் உரத்தசிந்தனை



நீங்களும் படியுங்க...

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 200/- |
| 2 ஆண்டுச் சந்தா | ரூ. 400/- |
| 5 ஆண்டுச் சந்தா | ரூ.1000/- |
| வாழ்நாள் உறுப்பினர் | ரூ.4000/- |
| புரவலர் உறுப்பினர் | ரூ.8000/- |

## வங்கி மூலம் சந்தா செலுத்தலாம்

இந்தியாவிலுள்ள எந்த இந்தியன் வங்கிக் கிளையின் மூலமும் நீங்கள் சந்தா செலுத்தலாம். வங்கிக் கிளைக்குச் சென்று கீழ்க்கண்ட கணக்கில் சந்தாவைச் செலுத்தலாம்.

பெயர் : **நம் உரத்தசிந்தனை**
வங்கி : **இந்தியன் வங்கி**
வங்கிக்கிளை : **திருவல்லிக்கேணி, சென்னை-5.**
கணக்கு எண் : **401056844** (SB)
IFSC Code : IDIB000T055

சந்தாவைச் செலுத்தியபின் மறக்காமல், அலுவலகத்திற்குத் தபால் மூலமோ அலைப்பேசி மூலமோ தகவல் தெரிவிக்கவும்.


அலுவலக முகவரி - 6, வீரசவார்கர் தெரு, இரமணா நகர், பெரம்பூர், சென்னை-600011.
Cell : **94440 11105, 94449 08282, 94450 89592.** email : urathasinthanai@gmail.com

# விளக்கு, நான்... ஜோதிப் பிழம்பு நீ...

கொடூர உலகத்தில்
கொடூரங்கள் எடுக்கும்
ஆயுதங்கள் முன் நான்
பல நேரங்களில் நிராயுதபாணியாக...

என் ஒற்றை ஆயுதம்
நீ தான் இறைவா...
அன்பே சிவமாமே...
அன்பே என் ஆயுதம்...


பல நேரங்களில் என் ஆயுதமே
எனக்கு பகையாய்...
என் பகையும்
என் ஆயுதம் நீயாய்...

பித்தன் உன்னை எண்ணி
பித்தனாய் நான் திரிகையில்
அன்பாயுதம் தனை என்
கையில் கொடுத்து தன்னைத்
தானே செதுக்கும் சிற்பி தன்
புத்தி சிதைத்து பித்தன் ஆக்கி
உன்னைச் செதுக்கும் என்னை
சிதைக்கும் நோயா
கொடும் பேயா,
அதுவும் நீயா இறைவா?!

ஜெயிப்பும் தோற்பும்
வாழ்வும் சாவும் நீயான பின்
நான் என் செய்ய இறைவா?!
கண்ணீரும் கண்ணும் கருத்தும்
வலியும் சகலமும் நீ ஆனபின்...
நான் உன் கைப்பாவை

விளக்கு, நான்... ஜோதிப் பிழம்பு நீ.
நான் எரிவதும் அணைவதும்
என் மூச்சுக் காற்று, உன் இஷ்டம்...
உன்னைச் சரணடைந்தேன்...

– **மணிபாலா**, 99440 20923





# பஹ்ரைனில் பார்க்க வேண்டிய இடங்கள்



**பார்பர் கோயில்**

பார்பர் கோயில் என்பது பஹ்ரைனின் பார்பர் கிராமத்தில் அமைந்துள்ள ஒரு தொல்பொருள் தளமாகும். பார்பர் கோயில் தில்முன் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படும் மூன்று பார்பர் கோயில்களில் மிகச் சமீபத்தியது. 1954 இல் டேனிஷ் தொல்பொருள் குழுவால் அவை மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் இரண்டு கோயில்கள் அந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டன,

இவை கி.மு. 3000க்கு முந்தைய பழமையானவை என வரலாறு கூறுகிறது. இந்தக் கோயில்கள் ஜித்தா தீவில் இருந்து செதுக்கப்பட்டதாக நம்பப்படும் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டது.

**பஹ்ரைன் கோட்டை**

இது பஹ்ரைன் கோட்டை அல்லது போர்த்துகீசிய கோட்டை என்றும் அழைக்கப்படுகிறது, இது கிமு 2300 முதல் கி.பி 18 ஆம் நூற்றாண்டு வரையிலான பல்வேறு ஆக்கிரமிப்பாளர்களால் உருவாக்கப்பட்டது. இது ஒரு காலத்தில் தில்முன் நாகரிகத்தின் தலைநகராக இருந்தது. இந்த தளத்தில் முதல் அகழ்வாராய்ச்சி டேனிஷ் தொல்பொருள் ஆய்வு மூலம் 1950 – 1960ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டது. 1987ம் ஆண்டு முதல் பஹ்ரைன் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தொல்பொருள் கண்டுபிடிப்புகள், இப்பகுதியின் மிக முக்கியமான பண்டைய நாகரிகமான தில்முன் பேரரசில் தொடங்கி நகர்ப்புற கட்டமைப்புகளின் ஏழு நாகரிகங்களை வெளிப்படுத்தியுள்ளன.

**பக்ரைன் பார்க்கலாமா!**



**பக்ரைன் சவூதி பாலம் (கிங் ஃபஹத் பாலம்)**

வரலாற்று சிறப்பு மிக்க இந்த பாலம் சவூதி அரேபியாவின் கோபார் மற்றும் பஹ்ரைனின் அல் ஜஸ்ராவை இணைக்கும் 25 கிமீ (15.5 மைல்) நீளமான தொடர் பாலமாகும். இந்த தொடர் பாலம் 536 கான்கிரீட் தூண்களில் தாங்கியிருக்கின்றன, இந்த பாலம் முழுக்க முழுக்க கடலுக்கு மேலேயே கட்டப்பட்டுள்ளது. 12.5கிலோமீட்டர் பஹ்ரைன் எல்லையிலும் 12.5 கிலோமீட்டர் சவூதி அரேபியா எல்லையிலும் அமைந்துள்ளது. இந்தப் பாலத்தில் செல்லும் ஒவ்வொரு வண்டிகளும் 2.50தினார் (சுமார் 500ரூபாய்) கட்டணம் செலுத்தவேண்டும். மிகுந்த சவால்களுடன் கட்டப்பட்ட இந்த உலக சிறப்பு மிக்க பாலம் 26ம்

தேதி நவம்பர் மாதம் 1986ம் வருடம் திறக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான சிற்றுந்துகள் முதல் கனரக வாகனங்கள் வரை இந்தப் பாலத்தில் பயணம் செய்கின்றன.

### அல் ஃபதேஹ் கிராண்ட் மசூதி

இந்த மசூதி உலகின் மிகப்பெரிய மசூதிகளில் ஒன்றாகும், இது 6,500 சதுர மீட்டர்களை உள்ளடக்கியது மற்றும் ஒரே நேரத்தில் 7,000 க்கும் மேற்பட்ட வழிபாட்டாளர்களுக்கு இடமளிக்கும் திறன் கொண்டது. இந்த மசூதி 1987 இல் மறைந்த 'ஷேக் இஷா பின் சல்மான் அல் கலீஃபா'வால் கட்டப்பட்டது. 2006 இல், அல்ஃபதே மசூதி பஹ்ரைனின் தேசிய நூலகத்தின் தளமாக மாறியது. வழிபாட்டுத் தலமாக மட்டுமல்லாமல், பஹ்ரைனில் உள்ள முதன்மையான சுற்றுலாத் தலங்களில் மசூதியும் ஒன்றாகும்.

### தில்முன் புதைகுழிகள் (Burial Mounds)

கிமு 2200 மற்றும் கி.பி 1750க்கு இடையில் கட்டப்பட்ட தில்முன் புதைகுழிகள், தீவின் மேற்குப் பகுதியில் உள்ள 21 தொல்பொருள் தளங்களை உள்ளடக்கியது. இந்த ஆறு தளங்கள் பல ஆயிரம் அறைகளைக் கொண்ட புதைகுழி வயல்களாகும். மொத்தத்தில் சுமார் 11,774 புதைகுழிகள் உள்ளன, இந்த குழிகள் ஒரு உருளை வடிவ குறைந்த கோபுரங்கள். தில்முன் புதைகுழிகள், அவற்றின் எண்ணிக்கை, அடர்த்தி மற்றும் அளவு ஆகியவற்றில் மட்டுமல்லாமல், கட்டுமானத்தின் வகையிலும், அவற்றின் அல்கோவ்


பார்பர் கோயில்


பஹ்ரைன் கோட்டை


கிங் ஃபஹத் பாலம்


அல் ஃபதேஹ் கிராண்ட் மசூதி


தில்முன் புதைகுழிகள்



Tree of Life



தேசிய அருங்காட்சியகம்

பொருத்தப்பட்ட புதைகுழிகள் போன்ற விவரங்களிலும் உலகளாவிய தனித்துவமான பண்புகளை விளக்குகின்றன.

இந்தப் புதைகுழிகளில் புதைக்கப் பட்டவரின் சமூக நிலையைப் பொறுத்து, இந்த சவக்கிடங்கு பொன் பொருள் போன்ற விலை மதிக்க முடியாத பரிசுகளால் நிரப்பப்பட்டது. இதுவரை ஆயிரம் ஆண்டு மழை வெயில் சூறாவளி நிலையிலும் தன்னிலை மாறாமல் உள்ளது ஆச்சரியமான விஷயம்.

## Tree of Life

பஹ்ரைனில் உள்ள ட்ரீ ஆஃப் லைஃப் (ஷஜரத்அல்ஹயாத்) 9.75 மீட்டர் (32 அடி) உயரமுள்ள ப்ரோசோபிஸ் சினேரியா மரமாகும்.

இது 400 ஆண்டுகளுக்கும் மேலானது. இது பஹ்ரைனின் மிக உயரமான இடமான ஜெபல் துகானிலிருந்து 2 கிலோ மீட்டர் (1.2 மைல்) தொலைவில் உள்ள அரேபிய பாலைவனத்தின் தரிசு பகுதியில் உள்ள ஒரு மலையில் உள்ளது.

இந்த மொட்டை பாலைவனத்தில் இந்த ஒரே ஒரு மரம் எப்படி தனியாக 400 ஆண்டுகளாக உயிர் வாழும் என்று தெரியவில்லை. பஹ்ரைனில் இந்தப் பகுதியில் ஆண்டு முழுவதும் மழை இல்லை. அதன் வேர்கள் 50 மீட்டர் ஆழத்தில் உள்ளன, இது தண்ணீரை அடைய போதுமானதாக இருக்கலாம். இது ஒரு அதிசய மரம், 2009 ஆம் ஆண்டில், இயற்கையின் New 7 Wonders பட்டியலில் இந்த மரம் பரிந்துரைக்கப்பட்டது, ஆனால் அது பட்டியலில் சேரவில்லை.

## தேசிய அருங்காட்சியகம்

27,800 சதுர மீட்டர் பரப்பளவில் பரந்து விரிந்து கிடக்கும் பஹ்ரைன் தேசிய அருங்காட்சியகம், பஹ்ரைனின் வளமான வரலாற்றை பிரதிபலிக்கும் பல்வேறு கலைப்பொருட்களைக் கொண்ட நாட்டின் மிகப்பெரிய பொது அருங்காட்சியகமாகும்.

## முதல் எண்ணெய் கிணறு

பாரசீக வளைகுடாவின் அரேபிய பகுதியில் உள்ள முதல் எண்ணெய் கிணறு பஹ்ரைனில் ஜெபல் துகானுக்கு கீழே அமைந்துள்ளது.

இது 1929இல் கனடாவில்



முதல் எண்ணெய் கிணறு

கலிபோர்னியாவின் ஸ்டாண்டர்ட் ஆயில் நிறுவனத்தால் நிறுவப்பட்ட பஹ்ரைன் பெட்ரோலியம் நிறுவனத்தால் (BAPCO) கண்டு பிடிக்கப்பட்டு இயக்கப்பட்டது.

1931ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி இந்தக் கிணற்றில் இருந்து எண்ணெய் முதன்முதலில் வெளியேறியது, இறுதியாக 1932ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் தேதி காலை கிணற்றில் எண்ணெய் வீசத் தொடங்கியது. ஆரம்ப எண்ணெய் ஓட்ட விகிதம் ஒரு நாளைக்கு 9,600 பீப்பாய்கள். வளைகுடா பகுதியில் எத்தனையோ பெரிய நாடுகள் இருந்தாலும் இந்த குட்டி நாட்டில் தான் முதல் எண்ணெய் கிணறு கண்டு பிடிக்கப்பட்டது பெருமைக்குரிய விஷயம் ஆகும்.




**காமிஸ் மசூதி (Masgid al-Hamīs)**

பஹ்ரைனில் உள்ள முதல் மசூதியாக நம்பப்படுகிறது, இது ‘உமையாத் கலீஃபா மிமி உமர்’ காலத்தில் கட்டப்பட்டது. இந்த மசூதி, தளத்தில் காணப்படும் கல்வெட்டுகளின்படி, அதன் அடித்தளம் கிபி 692 இல் அமைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

– கா.பொன்சங்கரபாண்டியன்




நம் உரத்தசிந்தனையின் புரவலர் மெய்ரூஸ்வெல்ட்டைப் பற்றி நடுவூர் சிவா எழுதியுள்ள பட்டுக்கோட்டையாரின் பட்டு மனசு நூல் நீதியரசர் வள்ளிநாயகம் தலைமையில் வெளியிடப்பட்டது. நீதியரசர் திரு ராஜேஸ்வரன் நூலை வெளியிட பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி முதற் பிரதியினைப் பெற்றுக் கொண்டார். மக்கள் கவிஞர் அறக்கட்டளை சார்பில் விருதுகள் வழங்கப்பட்டன. டாக்டர் சுதாசேஷயன் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார். விழாவில் கலைமாமணி ஏர்வாடி யார், முனைவர் இராம.குருநாதன். எழுத்தாளர் பெ.கி.பிரபாகரன் உட்பட பலரும் வாழ்த்துரை வழங்கினர்.




# பக்ரைனின் தேசிய கீதம்

தேசிய கீதம், ஒரு நாட்டின் பிற தேசிய கீதங்களைப் போலவே, நாடு மற்றும் அதன் மக்களின் பாரம்பரியம், வரலாறு மற்றும் நம்பிக்கைகளை பிரதிபலிக்கிறது. எனவே, அந்த நாட்டின் குடி மக்களிடையே தேசபக்தி உணர்வுகளைத் தூண்ட உதவுகிறது மற்றும் அவர்களது நாட்டின் பெருமை, அழகு மற்றும் வளமான பாரம்பரியத்தை அவர்களுக்கு நினைவூட்டுகிறது.

பஹ்ரைனின் தேசிய கீதம் மற்ற நாடுகளை விட தனித்துவமானது மற்றும் வேறுபட்டது, ஏனெனில் இந்த நாடு மட்டுமே புதிய சொற்களையும் வாக்கியங்களையும் ஏற்றுக்கொண்டு தேசிய கீதத்தை 2002ல் மாற்றியுள்ளது. இது அவர்களின் தேசிய மொழியான அரபு மொழியில் எழுதப்பட்டுள்ளது.

**பக்ரைன் பார்க்கலாமா!**



இந்த கீதம் முதலில் 1942இல் வரவேற்பு போன்ற உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் இசைக்கப்பட்டது. தேசிய கீதத்தை ஏற்றுக்கொண்ட முதல் அரபு நாடு பஹ்ரைன் ஆகும்.

காவல்துறை இசைக்குழுவின் தலைவர்கள் அடுத்தடுத்த ஆண்டுகளில் இசையில் பல மாற்றங்களையும் செய்தனர். மிக முக்கியமாக 1971 ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி பஹ்ரைன் பிரிட்டிஷ் இடமிருந்து சுதந்திரம் பெற்ற ஒரு வருடத்திற்குப் பிறகு, அது இரண்டு முறை இசைக்கப்பட்டது.

1985ஆம் ஆண்டில், காவல் இசைக்குழுவின் முன்னாள் தலைவர் 'கர்னல் முகமது சுட்கி

– சொல்வேந்தர் **சந்திரன்,**
பட்டய கணக்கு மேலாளர்
கல்வித் தலைவர், செந்தமிழ் சொல்வேந்தர் பேரவை
chandranaca@gmail.com



*அய்யாஷ்' கீதத்திற்கான பாடல்களை எழுதினார். இது 2002 வரை பயன்படுத்தப்பட்டது. அந்த ஆண்டு, நாட்டின் ஆட்சியாளர் 'ஷேக் ஹமாத் பின் இசா அல் கலீஃபா'வை பிரகடனப்படுத்திய அரசியலமைப்பு திருத்தங்களுக்குப் பிறகு, ராயல் நீதிமன்றத்தின் அமைச்சர் 'காலித் பின் அஹ்மத் அல் கலீஃபா' அவர்களால் பாடல் வரிகள் மாற்றப்பட்டன.*

*இசைக்குழு தலைவர் மேஜர் ஜெனரல் 'முபாரக் நஜ்ம் அல்நஜ்ம்' இராணுவ இசைக்குழு ஏற்பாட்டிற்கு பொருத்தமான மாற்றங்களைச் செய்தார்.*

*இந்த ஆர்கெஸ்ட்ரா பதிப்பை பஹ்ரைன் இசையமைப்பாளர் 'அஹ்மத் அல்ஜுமைரி' ஏற்பாடு செய்து லண்டனில் உள்ள லண்டன் பில்ஹார்மோனிக் ஆர்கெஸ்ட்ராவில் பதிவு செய்தார்.*




**தேசிய கீதத்தின் பொருள்**

எங்கள் பஹ்ரைன் எங்கள் ராஜா நல்லிணக்கத்தின் சின்னம்.

அதன் அரசியலமைப்பு உயர் அந்தஸ்தும் கொண்டது.

அதன் சாசனம் ஷரியா (Sharia), அரபுவாதம் (Arabism) மற்றும் மதிப்புகளின் (Values) வழியாகும்

பஹ்ரைன் ராஜ்ஜியம் நீடூழி வாழ்க! பிரபுக்களின் நாடு (country of nobles) அமைதியின் தொட்டில் (cradle of peace)

*மரியாதையைக் குறிக்கும் வகையில், பஹ்ரைன் தேசிய கீதம் இந்திய தேசிய கீதத்துடன் அனைத்து இந்திய சமூகக் கூட்டங்களிலும் பாடப்படுகின்றது.*

*இசை மற்றும் ரிதமுடன் பஹ்ரைன் தேசிய கீதத்தைத் கேளுங்கள், அது ஒரு பெரிய அனுபவமாக இருக்கும்.*

## இலக்கியப்பீட விருது



இலக்கிய பீடம் மாத இதழின் வெள்ளி விழாவில் பேராசிரியர் முனைவர் இராம.குருநாதனுக்கு சிவசங்கரி விருதும், முனைவர் அர.அகிலாவுக்கு மாம்பலம் ஆர்.சந்திரசேகர் வழங்கும் விக்கிரமன் விருதும் வழங்கப்பட்டது. மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் துணைத் தலைவர் இ.சுந்தரமூர்த்தி விருதுகளை வழங்கினார்.



# ஒளிப்படக் கவிதைப் போட்டி

இளமை வாழ்க்கை
இமயம் அளவு இன்பமடா – உனது
இதயச் சிரிப்பில் துன்பம் தூரம் ஓடுமடா!
நீலவானம் பரந்து இருக்க
திசைகள் எட்டும் திறந்து இருக்க
நம்பிக்கை சிறகை விரித்து
முட்களின் பாதையில் பயணம் தொடங்கு.
புன்னகையோடு நடக்கட்டும்
உனது கால்கள் நாளை
காலம் சூட்டும் மாலையில் உயரட்டும்
உனது தோள்கள்!

– **சீ.பாஸ்கர்**, 99411 47699

மழையோ வெயிலோ மனம் தளரோம்
அலைவோம் திரிவோம் அயர்ந்து விடோம்
வயல்வெளியிலும், வரப்புவழியிலும்,
புயலாய் நடப்போம் பசிதாகம் அறியோம்
கல்லும் முள்ளும் முல்லை விரிப்பாகும்
கரையாத செல்வம் எங்கள் சிரிப்பாகும்
களங்கம் புரியாது கவலை தெரியாது
உலகம் எங்கள் கால்களின் கீழே!

– **ஆ.விநாயக சுந்தரி** 97914 25249

கூடைய தலையிலே கவிழ்த்துக்கிட்டோம்
கூட்டாளி ஒன்னா கூடிக் கிட்டும்
ஆடைய பாதியா அணிஞ்சிக் கிட்டோம்
ஆத்தோரம் ஆட்டம் போட்டுக் கிட்டோம்
காடை கௌதாரி போல எங்கும்
கலகலப் பாக பறந்து வந்தோம்
கோடை வெயிலு என்ன செய்யும் எங்க
கொண்டாட்டம் பார்த்து ஓடி விடுமே!

– **சொ.சரவணபவா**, 97512 23623

விடுமுறை வந்தது பள்ளிக்கு
விடுதலை ஆனது கல்விக்கு
படுத்திய கொரோனா போனதுவே
பழகிய நண்பரும் சேர்ந்திட்டோம்
உடுத்திய உடைகளைக் களைந்திட்டோம்
ஊற்றிடும் வெயிலினை மறந்திட்டோம்

– **கருமலைத்தமிழாழன்**, 94434 58550

அந்தநாள் குதூகலம்
இந்தநாள் குழந்தைகட்கில்லை
சுதந்திரமாய் மழையில் நனையும்
சுதந்திரம் அவர்களுக்கில்லை
எந்திரம்போல் இருந்தபடி
செல்பேசி விளையாடல் மட்டுமே
பம்பரம் கோலி குண்டு கடி மாங்காய்
சில்லாங்கல் ஓடி ஒளிந்து பிடித்தல்
கிட்டிப் புள் ஐஸ் பாய் என எல்லாம்
இழந்தன இக்காலக் குழந்தைகள்.

– **டி.கே.ஹரிஹரன்**, 98416 13494

கவலைகள் என்னவென்று கண்டதில்லை
யாரிடமும் வஞ்சகம் பகிர்ந்ததில்லை
சிரிப்பதற்கும், அழுவதற்கும்
தயங்கியதில்லை
தாய், தந்தை சொல் தட்டியதில்லை
இப்போது நினைத்தாலும் நினைவெல்லாம்
பூக்கள் மலரும் மழலைக்காலம்
மீண்டும் கிடைக்காத மாயக்காலம்

– **மீ.யூசுப் ஜாகிர்**, 70102 19221

## ரூ.100/- பரிசுபெறும் கவிதைகள்



*பரிசு வழங்குபவர்:*

**எழுத்தாளர் அரிமா ஈஸ்வரதாஸ்**
துணைத் தலைவர்,
உரத்தசிந்தனை தேனி கிளை

மகிழ்ச்சித் துள்ளலில் புது வஞ்சகம் இல்லை,
பொறாமைப் பொய்கள் ஓரத்தில்கூட வரவில்லை,
நாளையத்தலைமுறையே, நாள்தோறும் நன்றாய்ச் சிரி,
வயிற்றுக்குச் சோறோ உடம்புக்குச் சட்டையோ,
மூவரும் அதைச் சட்டைசெய்யவே இல்லை,
வாய்விட்டுச் சிரித்தால் கொரோனா நொறுங்கும்.

– **பொன்னியின் செல்வன்**, 94437 93257

மழை வருவதறிந்து மயில்கள்தாம் ஆடுமா?
மனது குதூகலித்தால் வாராதோ குதியாட்டம்?
அரிதாரம் அலங்காரம் ஆடலுக்கு அவசியமா?
வெற்றுடம்பு போதாதோ வேகமுடன் கூத்தாட?
ஏழ்மையிலும் எழுந்தாட தொலையாதோ துயரே?
கள்ளமில்லா நெஞ்சமோ களிப்புக்குக் காரணம்?
உழைப்பு ஓங்கினால் உருவாகுமே எதிர்காலம்!
வறுமையின் வாட்டத்தை மகிழ்ச்சியாய் மாற்றியே!

– **இரா.இரவிக்குமார்**, 94455 73378

மழையிங்கு பெய்யுது
மனசெல்லாம் பொங்குது
மழையிலாடச் சொல்லுது
மற்றதெல்லாம் மறக்குது
மண் செழுமை கொள்ளுது
மரங்களெல்லாம் துளிர்க்குது
பயிர்பச்சை விளையுது
பசியைப் போக்கி வைக்குது.

– பொதிகை **செல்வராசன்**, 94454 06677

கட்டவிழ்த்த குறும்புகள்,
கொட்டமடிக்கும் நேரம்,
மொட்டுவிட்ட அரும்புகளை
தொட்டுச் சென்றது ஈரம்,
குறு நகையினை தாங்காது
கூடைகளும் சரியும்,
கும்மாளம் குதிபோட்டு
குதூகலமாய் விரியும்,

– **பு.யாழினி**, 70949 14329

## ஒளிப்படக் கவிதைப் போட்டி

**இந்தப் படத்திற்குப் பொருத்தமான கவிதைகளை எட்டு வரிகளுக்குள் அஞ்சல் அட்டையில் அல்லது**
urathasinthanai@gmail.com
**என்ற முகவரிக்கு அலைபேசி எண்ணுடன் எழுதி அனுப்பவும். தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு கவிதைக்கும் ரூ.100/- பரிசு. கவிதைகள் வந்துசேர கடைசிநாள்**
**28.05.2022.**






இறைவன் ஒருவன்தான். அவனுக்கு இணையாக, துணையாக யாருமில்லை. இறைவன் என்பவன் தனித்தவன். இறைவனை யாரும் பெற்றெடுக்கவும் இல்லை, இறைவனும் யாரையும் பெற்றெடுக்கவும் இல்லை.

நபி (ஸல்) அவர்கள்தான் இறைவன் அனுப்பி வைத்த இறுதித்தூதர் என்பதை ஏற்றுக் கொண்டேன். இதைத் தவிர்த்து இஸ்லாம் கூறும் ஏனைய கடமைகளான தொழுகை, நோன்பு, 'ஜக்காத்' எனும் தான தர்மங்கள், 'ஹஜ்' எனும் புனித யாத்திரைகளை நிறைவேற்றி உள்ளேன். இப்படியெல்லாம் இருக்கின்றபோது இறைவனிடத்தில் எதற்காக பாவ மன்னிப்பு கேட்க வேண்டும் எனும் கேள்வி எழலாம்.

இப்படிக் கேட்பவர்கள் மேற்படி சொல்லப்பட்ட கடமைகளை முழுமையாகச் செய்தோமா? இறையச்சத்துடன் செய்து முடித்தோமா? அண்டை வீட்டாரோடு சண்டை சச்சரவுகள் இன்றி அன்புடன் பழகினோமா? அண்டை வீட்டார் பசித்திருக்க நாம் புசித்திருக்கிறோமா? அனைவர்களும் ஒரு



வயிற்றிலிருந்து பிறந்தவர்கள் தான். ஆகையால் அனைவர்களோடும் ச கோ த ர த் து வ த் து ட ன் சமத்துவத்துடன் பழகினோமா? 'ஜக்காத்' எனும் தான தர்மங்களை முறைப்படி செய்கிறோமா? வட்டி எனும் மாய வலையில் சிக்காமல் இருக்கிறோமா? கற்பழிப்பு வன்கொடுமை செய்யாமல் இருக்கிறோமா? லஞ்சம், லாவண்யம், ஊழல் போன்றவற்றில் ஈடுபடாமல் இருக்கிறோமா? பொய், புறம் பேசாமல் இருக்கிறோமா? பொறுமை சகிப்புத்தன்மைகளோடு இருக்கிறோமா? என்பது போன்ற துணைக்கேள்விகளைக் கேட்டு தங்களுக்குத் தாங்களே என்றைக்காவது உரத்து சிந்தனை செய்திருக்கிறோமா?

ஐந்தறிவு கொண்ட பொம்மைக் குரங்குகளில் ஒன்று வாயை பொத்திக் கொண்டும், இன்னொன்று கண்களை மூடிக்கொண்டும், மூன்றாவது காதுகளை மூடிக்கொண்டும், நமக்குப் போதனை சொல்வது போல் உட்கார்ந்திருக்கின்றன, யாருக்கு யார் போதனை செ ய் கி றா ர் க ள்

பார்த்தீர்களா? நாம் என்றைக்காவது தீயவைகளைப் பார்க்காமல், தீய வார்த்தைகளைப் பேசாமல், கேட்காமல், இருந்திருக்கிறோமா?

இவைகளுக்கெல்லாம் நாம் உயிரோடு இருக்கின்ற போதே இறைவனிடத்தில் பாவ மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லையெனில் நரகம்தான்.

(இன்னும் அவர்கள்) பொறுமை யாளர்களாகவும், உண்மை பேசுபவர்களாகவும், (அல்லாஹுவுக்கு முற்றிலும்) வழிபடுபவர்களாகவும், (தான தர்மங்களில் பொருளைச்) செலவு செய்பவர்களாகவும், ஸஹர் இரவின் கடைசி நேரங்களில் பாவ மன்னிப்புத் தேடுபவர்களாகவும் இருப்பார்கள். (திருக்குரான் 2:17)

நிச்சயமாக அல்லாஹ் பாவங்களை விட்டும் மீள்பவர்களை நேசிக்கிறான். பரிசுத்தமானவர்களையும் நேசிக்கிறான். (திருக்குரான் 2:222)

நாம் செய்கின்ற பாவ காரியங்களுக்குப் 'பாவ மன்னிப்பு' என்னும் பரிகாரம் தேடாமல் இருப்போமேயானால் இறைவன் நினைத்தால் இந்தப் பூமியிலேயே



நான்கு பேருக்கு மத்தியில் அசிங்கப்படுத்தி விடுவான். அதன்பிறகு "என்ன தவறு செய்தேன், அதுதான் எனக்கும் புரியவில்லை. வந்து பிறந்து விட்டேன். ஆனால் வாழத் தெரியவில்லை" என்று புலம்ப வேண்டிய நிலைக்கு ஆளாவோம்.

அனைத்துப் பாவச் செயல்களிலிருந்தும் தங்களைத் தாங்களே தவிர்த்துக் கொள்ளுங்கள். இறைவனிடம் பாவ மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுங்கள். அப்போது தான் மறுமையில் சொர்க்கத்தின் வாசனையை நுகர முடியும்.

– தொலைப்பேசி **மீரான்,**
**94449 08282**

---

# வெண்பா வேந்தர் விருது



**ந**ம் உரத்தசிந்தனையில் 2020–2021 வெளிவந்த வெண்பாக்களிலிருந்து சிறந்த வெண்பாவை எழுதிய கோவை பத்மநாபன் அவர்களுக்கு முனைவர் அமுதா பாலகிருஷ்ணன் நிறுவிய 'வெண்பா வேந்தர்' விருதினை கோவை வசந்தவாசல் கவிமன்றத்தின் தலைவர் கவிஞர் நம்பிக்கை நாகராஜன் வழங்கினார்.



# பக்ரைனில் 45 நாட்கள்!

பக்ரைனில் மருத்துவர்களாக பணியாற்றும் மகன், மருமகள் பேரனைப் பார்க்க நானும் என் மனைவியும் பக்ரைன் சென்று, கடந்த 2019 ஜூலை ஆகஸ்ட்டில் 45 நாட்கள் தங்கினோம்.

‘பளிச்’ என்று தெருக்கள் அழுத்தமாகப் பெருக்கி, நீர் தெளித்து துடைத்துவிட்டது போல சாலைகள் ஒரே மாதிரியான வண்ண அட்டைப் பெட்டிகளை அடுக்கி வைத்தாற்போன்ற அழகான அடுக்கு மாடி குடியிருப்புகள்... எங்கும் சுத்தம் எதிலும் சுத்தம் என உள்ளத்தை ஈர்த்தது பக்ரைன்.

சவுதி அரேபியா – பாக்ரைன் எல்லைக்கு வாகனங்கள் மணிக்கு 100 கி.மீ வேகத்துக்கு மேல்தான் செல்ல வேண்டும் என்ற அறிவிப்பு வியக்க வைத்தது.

## பக்ரைன் பார்க்கலாமா!



நிறைய மருத்துவமனைகள் இடம்பெற்று, நமது இந்திய குறிப்பாக தென்னிந்திய மருத்துவர்களுக்கு அதிக சம்பளத்துடன் பணிபுரிய வாய்ப்பளிக்கிறது பக்ரைன். அங்கே பல நிறுவனங்களில் நம் மக்கள்தான் சிறப்பு நிலையில் இருந்து பெருமை சேர்க்கிறார்கள்.

ஊரைவிட்டு சில கி.மீ தூரத்தில் மணற்பாங்கான பரந்த வெளியில் எண்ணெய்க் கிணறுகள் தனித்தனியாக இயங்கி வருகிறது.

பாலைவனம் போன்ற தண்ணீரே இல்லாத அப்பகுதியில் ஒரேயொரு மரம் (Life Tree) மட்டும் பசுமையான கிளை மற்றும் இலைகளோடு அழகுடன் தனித்து வளர்ந்திருப்பதை ஏராளமானோர் வந்து கண்டு ரசிக்கின்றனர். அந்த மரத்தின் வயது 100 ஆண்டுகளுக்கு மேல் என்கிறார்கள்.

புதிதாக ரிலீஸ் ஆகும் தமிழ் சினிமாவை பக்ரைன் தியேட்டரில் எவ்வித சிரமுமின்றி பார்க்கலாம். முதல் காட்சிக்கே 20 பேர் கூட அரங்கில் இல்லை. சொகுசாக வசதியாக விரும்பும் இடத்தில் அமர்ந்து சினிமா காணலாம்.

கோழி, ஆடு, மீன் இறைச்சி விற்பனையகம் அவ்வூரில் அதிகமாக உள்ளது. உயிரோடும் உண்டு. பதப்படுத்தப்பட்டதும் உண்டு. அந்த மார்க்கெட்டில் மட்டும் மூக்கை முட்டும் அளவுக்கு கவுச்சி வாடை அடிக்கிறது.

பக்ரைன் தமிழ்ச்சங்கம் பல்லாண்டு காலமாக இயங்கி கலை நிகழ்ச்சி, பட்டிமன்றம், இலக்கியப் போட்டிகள் நடத்திநம் இனிய தமிழ் வளர்ச்சிக்காகத் தொண்டாற்றி வருகிறது.


பேரனுடன்...


மியூசியம் வாசலில் மனைவியுடன்

கரிய நிறத்தில் கடலலை கொண்ட கடற்கரையில் மாலை வேளைகளில் நிறைய மக்கள் ஆறிலிருந்து எழுபது வரை திரண்டு தற்காலிகக் கடைகளில் நொறுக்குத்தீனி தின்கிறார்கள். ஒரே கும்மாளம், கொண்டாட்டம் தான்!

மிருகக்காட்சி சாலையில் ஒட்டகங்கள் எலும்பும் தோலுமாக பரிதாபமாக நிற்கின்றன.

ஒரு மினிமார்ட்டுக்கு பேரனைத் தூக்கிக் கொண்டு போயிருந்த போது அங்கே நீண்ட வரிசை காணப்பட்டது. கடைக்காரர் சமிக்ஞை செய்தார். நான் எல்லோரையும் கடந்து போய், பொருள் வாங்கினேன். “அவர் மட்டும் ஸ்பெஷலா..?” என வரிசையில் நின்ற ஒரு வெள்ளைக்காரர் கேட்க, “குழந்தையோடு ரொம்ப நேரம் நிற்பது கஷ்டம்... அதனால் நான்தான் வரச்சொன்னேன்” என கடைக்காரர் காரணம் கூறிய பிறகு அமைதியானார் அவர்.

அவரவர்கள் தங்கள் பாதையில் போக்குவரத்து விதியைப் பின்பற்றி சரியாக வாகனத்தை இயக்குகிறார்கள். பக்ரைனில் சாலை விபத்து நிகழ்வது மிக அபூர்வம்.

தெருக்களில் நடப்போர் எதிரில் வருவோரைக் கண்டு புன்முறுவலிக்கிறார்கள் அவசியமின்றி பேச்சு வார்த்தையே கிடையாது. "எங்கும் அமைதி



பாலைவனத்தில் பச்சை மரம்



எண்ணெய் கிணறு முன்...

எதிலும் ஒரு ஒழுங்கு.." இதுவே நாங்கள் மூக்கில் விரலை வைத்து அதிசயித்த விஷயங்களுள் ஒன்று!

பக்ரைன் நாடு மன்னராட்சி (Kingdom of Bahrain) கட்டுப்பாட்டில் உள்ளது. ஆங்காங்கே ராஜா, இளவரசர், அடுத்த வாரிசு என்று நான்கு பேரின் வண்ண ஒளிப்படத்தோடு பதாகைகள் தொங்குகின்றன.

---

**சோ** அவர்கள் எழுதிய தொடர்கதை 'வந்தே மாதரம்'. நாம் அனைவரும் படித்த சார்லஸ் டிக்கன்ஸ் அவர்களின் Tale of two cities - நாவல் காதலிக்காக, அவள் கணவனுக்கு பதிலாக ஆள் மாறாட்டம் செய்து தூக்கு மேடை செல்லும் சிட்னி கார்ட்டன் தியாகத்தை மறக்க முடியுமா? அந்த நாவலின் தமிழ்ச் சூழல் தழுவலே இந்த நாவல்.

சோ, தாம் தொடங்கி நடத்திய 'துக்ளக்' இதழில் எழுபதுகளில் இதனைத் தொடராக வெளியிட்டார். பின்னர், மேடை நாடகமாக அரங்கேற்றினார். எண்பதுகளின் இறுதியில் அன்றைய தூர்தர்ஷனில் (இன்றைய பொதிகையில்) சோ நடித்து, தொடராக 'வந்தே மாதரம்' ஒளிபரப்பானது.


**– மதுரகவி ஸ்ரீனிவாசன், 98413 76382**

**வந்தே மாதரம்**






## தனிமையின் தடயங்கள்




விலை ரூ 300/– | மிருதன்பாலா
மிருதன் பாலா பதிப்பகம் | 93452 03789


வித்தியாசமான அளவு, வித்தியாசமான சிந்தனை என்று பார்த்தவுடனேயே ‘அடடே’ என்று சொல்ல வைக்கும் கவிதைத் தொகுதி இது. செல்வி வெ.பா. ஐஸ்வர்யாவின் அட்டைப் படமும், மதுரை பிரேம் நசீரின் ஓவியங்களும், தரமான அச்சுக்கோர்ப்பும் ‘தனிமையின் தடயங்கள்’ நூலை தனித்து நின்று ஜெயிக்க வைத்திருக்கிறது.

பூட்டன் காலத்து வேர்கள் / பாட்டன் காலத்தின் நிழல்கள் / அப்பன் தந்தான் பழங்கள் / நான் செய்த கொடை / மகவுக்கு வெறும் விறகா? இந்த சுய அலசல் மிருதன் பாலாவின் சிந்தனைக்கு ஒரு சோறு பதம்

கனவின் ஊர்வலம் நான் / உணர்வுகளின் உற்சாகம் நீ – இப்படி யார் இன்று தன் துணையைப் பாராட்டுகிறார்கள்?

வேகம் குறை / விவேகம் விழை / ஆசை குறை அனைத்திலும் நிறை / தன்னிலும் பிறனை நேசி / நான் அகற்று / நன்னிலம் பேண் – இது மிருதன் பாலாவின் புதிய ஆத்திசூடி. நிஜங்களுடன் நிதர்சனமாய் வெளிப்படும் தனிமையின் தடயங்கள் கவிதை நூல்... தரமான தனித்தன்மை பெற்ற ஞான அனுபவம் என்றால் மிகையல்லை.

---




## யாப்பு விளக்கம்

விலை ரூ 650/– | புலவர் ப.எழில்வாணன்
தமிழ்வாணன் பதிப்பகம், கரூர் | 94433 77464


மரபுடன் தமிழ்மணத்துடன், ஓசை நயத்துடன், இலக்கண முறையுடன், தமிழிலக்கியம் பயிலாத, ஆனால் மரபுக் கவிதை எழுத முயற்சிக்கும் எவரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் இந்நூலைப் படைத்திருக்கிறார் ஆசிரியர்.

மக்களிடையே வரவேற்பைப் பெற்ற பாக்களை எடுத்துக் கூறியும், தாமே பல எடுத்துக் காட்டுப் பாடல்களை எழுதியிருப்பதும் தனிச் சிறப்பு. இக்காலத்தில் எழுதப்படுகிற புதுப்பா, துளிப்பா, திரைப்பாக்களுக்கெல்லாம் யாப்பு எழுதி அதன் கட்டமைப்புகளை வரையறை செய்துள்ளார். 50 ஆண்டுகளாக மொழியாய்வில் ஈடுபாடும் , யாப்பிலக்கண ஆய்வும் கொண்டவர் புலவர் ப.எழில்வாணன். இலக்கியத்திற்குத் தந்திருக்கும் மேற்கொடை இந் நூல் என்று சொன்னால் மிகையாகாது. இந்த நூல் அனைத்துப் பள்ளிகள் கல்லூரிகளின் நூலகங்களில் இருக்க வேண்டிய பாடநூல்.

# கூகுள் பாட்டி!

ஐஷ்வர்யன்
99400 69890

ஓவியம்:
காணிக்கைராஜ்
73589 13680



*விமான நிலையத்திலிருந்து வீடுவந்து சேர்ந்து.. முழுசாய் கதவைத் திறக்கு முன்னரே.. ஓடிப்போய் சோபாவில் மல்லாக்க விழுந்து 'ஓ' வென அலறத் தொடங்கினாள், 8 வயது உத்ரா.*

*தலைப் பிரசவத்திற்காக வீடு வந்த அந்தக் குடும்பத்தின் மூத்த மகள் சித்ரா இப்படி திடுதிப்பென மூன்று மாத குழந்தை நயனாவோடு ஊருக்குப் புறப்பட்டுப் போனதை எவராலுமே தாங்கிக் கொள்ள முடியவில்லை.*

*'ஏய்' உத்ரா.. ஏர்போர்ட்ல பண்ணுன கலாட்டா பத்தாதுன்னு இங்கேயுமா? 'எனக்கு பாப்பா வேணும்.. பாப்பா வேணும்.. இப்பவே வேணும்..*

*'நம்ம கண் முன்னாலதானே பாப்பா ஃப்ளைட் ஏறிப்போச்சுது..*

இப்ப பாப்பா வேணும்னா எப்படி? அறைஞ்சேன்னா..”

மிருணா கோபத்தோடு மகளை நெருங்குகையில் மகன் மனோஜ் ஆத்திரத்தோடு குறுக்கிட்டான்.

“எனக்கே பாப்பாவை மிஸ் பண்றதை நினைச்சு.. கத்தணும்போல இருக்கு. இதுல சின்ன பொண்ணு தங்கச்சியை அடிச்சு என்ன பிரயோஜனம்? அதைவிட அக்காவையும் பாப்பாவையும் இன்னும் ரெண்டு மாசம் கழிச்சு அனுப்பி இருக்கலாம்லே..” என்றான் மகன் மனோஜ்.

“அதெப்பிடிடா முடியும்? நமக்கே மூணு மாச குழந்தை மேலே இவ்வளவு பாசம் பொங்கிச்சுன்னா.. தன் குழந்தையைப் பார்க்கற ஏக்கம் மாமாவுக்கு இருக்காதா? அதான் அக்கா போய்ட்டா”

“ரஷ்யா பார்டர்ல குளிர் ரொம்பவும் கடுமையா இருக்கறதால.. டெலிவரி முடிஞ்சு ஒரு வருஷம் வரை சித்ராவும் குழந்தையும் நம்ம கூடவே இருக்கட்டும்னு.. மாப்பிள்ளை. ஆரம்பத்துல சொன்னது... நம்ம எல்லார் மைண்ட்லயும் செட்டாயிடுச்சு. திடீர்னு மாப்பிள்ளை மனசு மாறி.. விடுமுறைக்கு ஊர் வந்திருக்கிற நண்பர் குடும்பத்தோடு சித்ராவையும் பாப்பாவையும் உடனே அனுப்பி வைச்சிடுங்கன்னு போன வாரம் சொன்னதும் எல்லா கனவும் கலைஞ்சு போச்சே அந்த கோபம்தான்.. இவங்களுக்கு”

“உண்மைதாங்க” என மனைவி மிருணா ஆமோதிக்க... சஞ்சீவ். “அந்த குட்டி பாப்பா பொக்கைவாய்



**கி.ஆ.பெ.விசுவநாதம் நினைவு சிறுகதைப் போட்டி ரூ.1000/– மூன்றாம் பரிசு பெற்ற கதை**

சிரிப்பும் குண்டு கண் பார்வையும் கண்ணுலேயே நிக்குது” என்றார்.

“அதனாலத்தானே நீங்க கூட எப்பவும்போல ராத்திரி வரைக்கும் கம்பெனியைக் கட்டிக்கிட்டு அழாம.. டாண்ணு ஆறு மணிக்கே வீடு வந்தீங்க...”

“நீ மட்டும் என்னவாம்? கார்ல வர்றச்சே எத்தனை தடவை கண்ணீரைத் துடைச்சே! ஆனாலும் பொறந்து மூணுமாசமான குழந்தை இந்த அளவு மனசை கொள்ளையடிக்கும்னு நான் எதிர்பார்க்கலை.”

கணவரை குறுகுறுப்புடன் பார்த்தவளாக “நான் நம்ப மாட்டேன். நம்ம மனோஜ்.. உத்ரா எப்படி அந்த குழந்தையை ஒரு உயிருள்ள பொம்மையா பார்த்தாங்களோ அப்படித்தான் நீங்களும்! இதுல பாசம் கீசம்னு எதுக்கு பெரிய வார்த்தை போடுறீங்க...” என முகத்திலடித்தாற்போல் மிருணா சொல்ல சஞ்சீவ் திடுக்கிட்டார்.

“வாட் நான்சென்ஸ்... பசங்க முன்னால இப்படித்தான் பேசறதா?”

“மகளோட மகள் விஷயத்துல இவ்வளவு எமோஷனலா பொங்கி வழியுற நீங்க.. நேரடி உறவான உங்க அம்மாவை மட்டும் எப்படிங்க மறந்தீங்க?”

"எனக்கு அம்மா மேலே கோபம்.. நான் எவ்வளவோ தடுத்தும் கேட்காம கிராமத்துக்குப் போய் தனியா இருக்கறாளேங்கிற கோபம்"

"அதுக்குனு மாசக்கணக்கா வருஷக் கணக்கா அம்மாவை பார்க்காம இருப்பீங்களா?"

சஞ்சீவ் மவுனமானார்.

"ஆமாம்பா.. அக்கா வந்ததோட நயனாவும் பொறந்து... நம்ம வீடே நிறைஞ்சிருந்தப்போ நான் கூட பாட்டியை ரொம்ப மிஸ் பண்ணினேன்." மகன் மனோஜ் சொல்லி முடிக்கையில் குறுக்கிட்டாள் மிருணா

"இப்போ இவ்வளவு பேசுற நீ.. பாட்டி இருந்தப்போ.. தினம் அவங்க அறைக்குப் போய் விசாரிச்சிருப்பியா? கிட்டே போய் பாட்டியைப் பார்க்கறதுமில்லை.. அவங்க பேசறதை முழுசா கேக்கறதுமில்லை.. இத்தனைக்கும் பொறந்ததுலேர்ந்து உன்னை முழுக்க பார்த்துக்கிட்டது அவங்கதான்" – என்றாள் அழுத்தமான குரலில்!

"அய்யோ அதெல்லாம் எனக்குத் தெரியும். ஆனா வயசாக ஆக பாட்டி காலையிலே சொன்னதை மத்யானமே மறந்துட்டு.. சொன்னதையே திரும்ப திரும்பச் சொல்லிக்கிட்டு இருப்பாங்க. சரியான போரும்மா."

"வயசானா மறதி வரத்தான் செய்யும். சின்ன வயசுலே தூங்கறப்போ பாட்டிகிட்டே நீ கதை கேட்கையிலே.. அவங்க ஏற்கனவே சொன்னதுல உனக்கு பிடிச்ச கதைகளைத்தான் திரும்ப திரும்பச் சொல்லச் சொல்லி பாடாய்ப் படுத்துவே. அப்போல்லாம் அவங்க உன்மேலே சலிச்சுக்கிட்டு' இந்த மனோஜ் ஒ போர்'னு சொல்லலியேடா"

"ஐம் சாரிம்மா. ஆமா தங்கச்சி உத்ரா டிவிலே கார்ட்டூன் சேனல் பார்க்கணும்னு பாட்டியோட மல்லுக்கட்டுவாளே.. அதுமட்டும் சரியா?"

"அதுவும் தப்புத்தான். இத்தனைக்கும் அவ ஸ்கூல்ல இருந்து வந்ததுமே ரிமோட்டை அவ கைல கொடுத்துட்டு பாட்டி உள்ளே போய்டுவாங்கதான். ஆனா ஆறு மணிலேர்ந்து அவங்க சீரியல் பார்க்கிறப்போ உத்ரா அடிக்கடி வந்து ரிமோட்டை பிடுங்கி சானல்



**எ**ழுத்தாளர் ஐஷ்வர்யன் – பி.டெக்., படித்துவிட்டு முழுநேர எழுத்தாளராக மாறியிருப்பவர். கலைமகள், தேவி, ஆனந்தவிகடன், மல்லிகை மகள் போன்ற பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வருபவர். நூற்றுக்கும் அதிகமான சிறுகதைகள் அதில் முப்பதுக்கும் அதிகம் பரிசுக்கதைகள்! பத்துக்கும் மேலான புதினங்கள். ஜனனி; ஸ்லம்டாக் மில்லியனர்; ஈகோ வரமா சாபமா? அபூர்வராகங்கள் கே.பி. திரைக்கதை – ஒருவிரலில் உலகை ஜெயித்தவர் என விகடன் பிரசுரங்களாக ஆறு நூல்கள் எழுதியிருப்பவர். இலக்கிய தி, அன்னம் விருது, இலக்கிய சிந்தனைப் பரிசு, கம்பன் கழகம் வழங்கிய எழுத்தாளர் விருது போன்ற விருதுகள் பெற்றிருப்பவர்.

மாத்துவாளா. அது பெரியவங்களுக்கு எத்தனை எரிச்சல் தரும் தெரியுமா? ஒரு ஸ்டேஜ்ல பெரியவங்க வசதி சொகுசை விட, மரியாதையையே எதிர்பார்ப்பாங்க.”

“நீ சொல்றது உண்மைதான் மிருணா. ஆனா அதே மரியாதையை அவங்க எனக்கும் குடுக்கணுமில்லே.. எத்தனை தடவை பசங்க முன்னாலேயே என்கிட்டே கோபம்காட்டி இருக்காங்க?” என்றார் சஞ்சீவ்!

“மனசாட்சியைத் தொட்டு சொல்லுங்க.. உங்க கிட்டே அவங்க எதுக்கு கோபப்பட்டாங்கன்னு சொஞ்சம் யோசிச்சு பாருங்க. தினமும் நீங்க சிகரெட் பிடிக்கிறதுக்கும், சனிக்கிழமை ட்ரிங்ஸ் பண்றதுக்கும்தானே?”

உறுமினார்.. “பிள்ளங்க முன்னால வச்சுத்தான் இதைப் பேசணுமா?”



“பேச வேண்டிய நேரம் வந்துட்டுதுங்க. உங்களை கண்டிக்க அம்மா இல்லாததுனால உங்க கிட்டே ஏற்பட்டிருக்கிற மாற்றத்தை கொஞ்சம் நினைச்சு பாருங்க. அது பசங்களுக்கே தெரிஞ்சுருக்கு. “ஆபிஸ்லேர்ந்து சீக்கிரமே வந்து பேத்தியை கொஞ்சுற அப்பா. எட்டு மணிக்குப் பிறகு மாடிக்கு போய்டுறாரே?”ன்னு உங்க பொண்ணு சித்ராவே என்கிட்ட கேட்டப்போ..” பாட்டி இல்லாத தைர்யத்துல அப்பா தினமுமே குடிக்க ஆரம்பிச்சுட்டார்”னு இந்த இரண்டு பசங்களுமே பதில் சொன்னதை நானே கேட்டிருக்கேன்”

“ஓ என் பேரை இப்படி வேற டேமேஜ் பண்றாங்களா?”

“இது டேமேஜ் இல்லை. அன்பு.. கவலை... அக்கறை. உங்கம்மான்னா எத்தனை அதிரடியா உங்களை கரெக்ட் பண்ணிடுவாங்க தெரியுமா? காலையிலே நீங்க பிரேக் ஃபாஸ்ட் சாப்பிடாம கிளம்பிடுவீங்களோன்னு கண்கொத்திப்பாம்பா காத்திருந்து.. உங்களை சாப்பிட வச்சதும் அவங்கதான். சனிக்கிழமை ராத்திரியானா “இந்த ஒருநாளோட நிறுத்திக்க. வாரநாள்ல தொடங்கினா ‘மூணுபிள்ளைகளுக்கு அப்பா’னு பார்க்காம அறைஞ்சிருவேன்’னு உங்களை குடிக்காம தடுத்ததும் அவங்கதான்”

ஆமோதிப்பது போல தலை குனிந்தார்.

‘‘உங்களை மட்டுமில்லே மொத்த குடும்பத்தையுமே அதிரடி அன்புங்கிற கயிறால அவங்க கட்டிப் போட்டிருந்தாங்க. அந்த அதிகாரம் எரிச்சல் தந்தாலும் உள்ளபடிக்கு அது நமக்கு நன்மையாத்தான் அமைஞ்சுதுங்க.

“டிவி பார்த்தது போதும், போன் நோண்டினது போதும், வெளியே போய் ஓடியாடி விளையாடுங்கிற பாட்டி தொணதொணப்புக்காக விளையாடப் போனதால்... உங்கம்மா இருக்கிற வரைக்கும் நோய் நொடி இல்லாம மனோஜ் ஆரோக்கியமாவே இருந்தான்.

இவனோட எக்ஸாம் டைம்ல

கேபிள் டிவியை கட் பண்ணினதோட போனையும் புடுங்கிக்கிட்ட தாலத்தான்.. பைசா செலவில்லாம கவர்ன்மெண்ட் காலேஜ்ல சேர்க்க முடிஞ்சுது. இப்போ அவங்க போனப்பிறகு. அரியர்ஸா குவிஞ்சுகிட்டு இருக்குது...”



“அம்..மா, என்னை மட்டும் குறை சொல்லு. உத்ராவை விட்டுரு”

“அவளும் உன்னை மாதிரித்தான். பாட்டி இருக்கிற வரைக்கும் மூணாம் ரேங்க்லாம் எடுத்த அவளோட படிப்பு.. இப்போ கார்ட்டூன் சேனல் கேலிச்சித்திரமாவே ஆயிடுச்சு. இன்னைக்கு மட்டும் ஏர்போர்ட்ல பாட்டியும் இருந்திருந்தா... அப்படி நூறு பேர் பார்க்க தரையிலே உருண்டு புரண்டு உத்ரா மானத்தை வாங்கி இருப்பாளா? அவங்க ஒருமுறை முறைச்சா போதாதா?

“அந்த மிரட்டலை நீ பண்ண வேண்டியதுதானே?”

“அது முழு பலன் தராதுங்க. ஸ்கூல் பசங்க டீச்சரைவிட பிரின்ஸிக்குத்தான் அதிகமா பயப்படுவாங்க. மரியாதை குடுப்பாங்க. அதுமாதிரி சொல்லும் செயலும் ஒண்ணா வாழுற உங்கம்மா மாதிரி பெரியவங்களோடு வாழ்ந்து வாழ்ந்துதான் நாம.. அவங்களா உருமாற முடியும். ஆயிரம் ஓட்டைகளை நமக்குள்ளே வச்சுக்கிட்டு நம்மளால நம்ம பசங்களுக்கு ரோல் மாடலா நிக்கவே முடியாதுங்க.”

“தேட்ஸ் ட்ரூ”

“உங்கம்மாவுக்கு பயந்தே காலையிலே அஞ்சு மணிக்கு எழுந்திருச்சு ஒரு குடும்பத்தலைவியா நடந்துகிட்ட நான்... அவங்க போனப்பறம் உங்களோட சேர்ந்து ஏழு மணிக்கு எழுந்திருக்க ஆரம்பிச்சா.. என் பிள்ளைங்க எப்படி என்னை மதிக்கும்? என் தப்பு எனக்கே இப்ப புரியறதாலத்தான் ஒவ்வொரு நாளும் உங்கம்மாவை ஒரு தேவதை போலவே நினைச்சுக்கிறேன்.

சித்ரா பிரசவ சமயத்துல ஓரோர் நிமிஷமுமே உங்கம்மாவை மிஸ் பண்ணினேன். எனக்கு அம்மா இல்லாததால் என் மூணு பிரசவங்களுக்கும் உங்கம்மாதான் துணையா இருந்தாங்க. இப்போது நயனா பொறந்தப்போ ஓரோர் விஷயத்திலேயும் எனக்கு ஆயிரம் சந்தேகம் வந்தது. கேட்டு தெரிஞ்சுக்க உங்கம்மா பக்கத்துல இல்லாம என்ன பாடு பட்டேன் தெரியுமா? அப்போதான் புரிஞ்சுது.. இன்னைக்கு உங்களுக்கெல்லாம் எந்தத் தகவல், உதவி தேவைப்பட்டாலும் சட்டுனு கைகொடுக்கிற ‘கூகுள்’ மாதிரி.. நம்ம எல்லாருக்குமே ஃப்ரண்டா.. ஆசானா.. வழிகாட்டியா உங்கம்மா இருந்திருக்காங்கன்னு. ‘நா உணர்ந்துட்டேன் என் தப்பையும் பெரியவங்க அருமையையும். நீங்க?”



சஞ்சீவியை முந்திக்கொண்டு உத்ரா சொன்னாள்.

“நானும்மா. இனி பாட்டி வந்தா.. டிவிக்காக சண்டை போட மாட்டேம்மா”

மனோஜும் வழிமொழிந்தான்.

"நானும் தாம்மா. இன்ஃபாக்ட் ஒரோர் எக்ஸாம் டைம்லயும் பாட்டியோட அட்வைஸ் ஞாபகம் வரத்தான் செய்யுது. அதுமாதிரி என்னை மாத்திக்கவும் நினைப்பேன். ஆனா முடியாமப்போகுது.."

"அது சுயமா எல்லாருக்கும் முடியாதுடா.. அதுக்காகத் தானடா கடவுள் மனஉறுதியுள்ள பெரியவங்களை நமக்கு தந்திருக்கான். அதை புரிஞ்சுக்காம அவங்களை நாம தொலைச்சிடற தாலத்தான் ஓரோர் குடும்பமும் தடுமாறி தத்தளிக்குது. இப்போல்லாம் எல்லார் கிட்டேயும் காசு பணம் நிறையவே இருக்குது. ஆனா சந்தோஷமும் மனநிறைவும் குறைஞ்சுகிட்டே போகுது"



"நீ சொல்றதுல உள்ள நியாயம் தெளிவா புரியுது.. மிருணா. இப்ப எங்களை என்ன பண்ண சொல்றே?"

"வீட்டு பெரியவங்களை உள்ளங்கையிலே வச்சு தாங்கணும்னு சொல்றேன். அப்படி தாங்கறதுனால நமக்குத்தாங்க புண்ணியத்துக்கு புண்ணியம்.. நன்மைக்கு நன்மை! எப்படி புதுசா பிறந்த குழந்தையை போட்டி போட்டு கொஞ்சி அதையும் சந்தோஷப்படுத்தி நாமளும் சந்தோஷம் அனுபவிச்சோமா... அதே மாதிரி அத்தையைக் கூட்டிட்டு வந்து அவங்களை நல்லபடி நடத்தி அவங்களை சந்தோஷப்படுத்துவோம். நாமளும் சந்தோஷப்படுவோம். ஆனா அவங்க வர்றதுக்கு முன்னால ஒரு முக்கிய விஷயத்தை புரிஞ்சுக்கணும். எப்படி நயனாங்கிற சின்ன குழந்தைக்காக நம்ம தூக்கம், நேரம், வேலை, சொகுசு எதைப்பத்தியும் கவலைப்படாம நம்மளை நாமே மாத்திக்கிட்டோமோ அதே அன்போட.. பாசத்தோட.. கடமை உணர்ச்சியோட இந்த எழுபது வயது குழந்தைக்காக நம்மை நாமே மாத்திக்கத் தயாராகணும்"

"சரி மம்மி"

"அதுசரி இத்தனை நாளைக்கப்பறமா நான் போய் கூப்பிட்டா அம்மா வருவாங்களா?"

"வரமாட்டாங்க. பார்த்ததுமே முகத்தை திருப்பிக்கிட்டு.. கதவைக்கூட சாத்திக்கலாம். ஆனா எல்லாம் ரெண்டு நிமிஷம்தான். நீங்க கிட்டே போய் மன்னிப்பு கூட கேட்கவேண்டாம் ஜஸ்ட் 'அம்மா நீ இல்லாம என் மனசுக்கு என்னமோ மாதிரி இருக்கு. என் கூட வந்திரும்மா'ன்னு அவங்க கையைப் பிடிச்சுப் பாருங்க.. அடுத்த நிமிஷமே கிளம்பிடுவாங்க"

"நிஜமாத்தான் சொல்றியா?"

"பாட்டி வந்திருவாங்களாம்மா"

"கண்டிப்பா. ஏன்னா சூரியன் இன்னைக்கும் கிழக்குலத்தான் உதிக்குது. அதுமாதிரி மாறாத ஒரு விஷயம்தான்.. " பிள்ளைமனம் கல்லு பெத்த மனம் பித்து'ங்பிறது. அதனால கண்டிப்பா அத்தை வருவாங்க"

"ஹை பாட்டி மறுபடி வரப்போறாங்க... ஹைய்யா" என்று சந்தோஷத்தில் குதித்தாள் உத்ரா. ■




# பக்ரைன் பார்க்கலாம் வாங்க!

– சொல்வேந்தர் நா.மருதுபாண்டியன்
maruthu6575@gmail.com

**பா**ருக்குள்ள சிறந்த நாடு! மிகச் சிறிய நாடு!! வளைகுடா நாடுகளில் ஒன்றான பஹ்ரைன் (அ) பக்ரைன் என்றழைக்கப்படும் நாடு.

கி.மு. 6000 ஆண்டுகளுக்கு முன்பு அரேபிய தீபகற்பத்திலிருந்து துண்டான தீவை பிரதான நிலப்பரப்பாகக் கொண்டது. ஆசியாவில் மூன்றாவது சிறிய நாடாக திகழ்கிறது. சுமார் ஐம்பது இயற்கையான தீவுகளையும் 33 உருவாக்கப்பட்ட தீவுகளையும் உள்ளடக்கிய தீவுக்கூட்டமே பஹ்ரைன். மொத்தம் 760 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன் கத்தார் நாட்டிற்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையில் அமைந்துள்ளது.

சவூதி அரேபியாவுடன் 25 கிலோமீட்டர் நீள கடல் பாலத்தால் இணைக்கப்பட்டு உள்ளது. அரபு மொழியில் இரண்டு கடல்கள் என்ற பொருள்பட (பஹ்ர் என்றால் கடல் + அய்ன் என்றால் இரண்டு) அழைக்கப்படுகிறது.

**பக்ரைன் பார்க்கலாமா!**



கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முந்தைய 'தில்முன்' நாகரீகம் தோன்றிய இடமாக அறியப் பெறுகிறது.

பண்டைய மெசபடோமியாவையும் (தெற்கு ஈராக்) சிந்து சமவெளியையும் (இன்றைய வட இந்தியா மற்றும் பாகிஸ்தான்) இணைக்கும் வழியாக இருந்ததால், அக்காலம் தொட்டே பல பேரரசுகளின் வர்த்தக மையமாக திகழ்ந்துள்ளது இந்த சிறு தீவு.

அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் பல்வேறு கால இடைவெளிகளில் அசிரீயர்களும், பாபிலோனியர்களும், ஆர்க்கிமேனியர்களும், பார்த்தியர்களும் மற்றும் கிரேக்கர்களும் இந்தத் தீவில் ஆதிக்கம் செலுத்தி வந்ததாக வரலாற்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தில்முன் நாகரீக காலத்தில் தில்முன் என்றழைக்கப்பட்ட இந்தத் தீவு பின்பு கிரேக்கர்கள் காலத்தில் தீவு என்று பொருள்படும் 'டைலஸ்' என்று அழைக்கப்பட்டது. முஹம்மது நபிகள் காலத்தில் இஸ்லாம் அரேபிய தேசங்களில் வளர்ச்சியடைந்த காலகட்டத்தில் பல அரேபிய பழங்குடிகளால் மாறிமாறி ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது.

பஹ்ரைன் செந்தமிழ் சொல்வேந்தர் பேரவையின் தலைவராகவும், பஹ்ரைன் – குவைத் தமிழ் சொல்வேந்தர் மன்றங்களின் தலைமை ஒருங்கிணைப்பாளராகவும், டி.எம்.பில்டர்ஸ் நிறுவலனத்தின் பொது மேலாளராகவும் இருக்கிறார். சிறந்த பேச்சாளர் மற்றும் எழுத்தாளர்.



17ஆம் நூற்றாண்டின் இறுதியில் இப்பொழுது ஆண்டு கொண்டிருக்கும் அல்கலிஃபா வம்சத்தவர் வசம் வந்தது. 18ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர்களும் பிரிட்டிஷ்காரர்களும் இத்தீவில் காலனி ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கின்றனர்.

கி.பி 1820ல் பிரிட்டிஷ் அரசாங்கம் தற்பொழுதுள்ள அல்–கலிஃபா வம்சத்தவரை பஹ்ரைன் நாட்டின் ஆட்சியாளர்களாக அங்கீகரித்தது. உலகின் மற்ற நாடுகளில் செய்தது போலவே இங்கும் கி.பி 1860களில் பிரிட்டிஷ் தனது எதேச்சதிகாரத்தை செலுத்தத் தொடங்கியது. அல் கலீபா குடும்ப ஆட்சியையும் பஹ்ரைன் நாட்டின் பாதுகாப்பையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அப்பொழுது இந்நாட்டின் நிர்வாகம் பிரிட்டிஷ் – இந்திய அரசாங்கத்தின் கீழ் இருந்தது. இந்தக் காலகட்டத்தில் இந்திய நாட்டு நாணயமே இங்கும் பயன்பாட்டில் இருந்திருக்கிறது.

1971, ஆகஸ்ட் 15ம் தேதி பஹ்ரைன் பிரிட்டிஷிடமிருந்து விடுதலை அடைந்தது. ‘ஷேக் இஷா பின் சல்மான் அல் கலிஃபா’ அவர்கள் சுதந்திர பஹ்ரைனின் அமீராக பொறுப்பேற்றார். அவருடைய சகோதரர் ‘ஷேக் கலீபா பின் சல்மான் அல் கலிஃபா’ பிரதம அமைச்சராக இருந்தார். பஹ்ரைன் பல்துறைகளிலும் வளர்ச்சியடைய தொடங்கியது.



25 கிலோமீட்டர் நீள கடல் பாலம்

# பக்ரைன்




கி.பி 1999, மார்ச் 6ம் தேதி அமீராக இருந்த ஷேக் இஷா பின் சல்மான் அல் கலிஃபா மறைந்ததையடுத்து அவரது மகன் மாட்சிமை மிக்க ‘ஷேக் ஹம்மாத் பின் இஷா அல் கலிஃபா’ அவர்கள் அரியணை ஏறினார். ஆட்சிக்கு வந்ததும் பாராளுமன்ற தேர்தல் முறையை ஏற்படுத்தினார். அதில் பெண்களும் வாக்களிக்கும் உரிமை வழங்கினார். இவர் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் சாசனத்தை வகுத்து அதன் ஒரு பாகமாக பஹ்ரைன் மாகாணமாக இருந்ததை பஹ்ரைன் மன்னராட்சி இராச்சியமாக அறிவித்தார். அன்று முதல் ‘பஹ்ரைன் அமீர்’ என்றழைக்கும் முறை மாறி மன்னர் என்று அழைக்கப்படுகிறார். இன்றுவரை அவரே பஹ்ரைன் நாட்டின் மன்னராக அரியணையை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்.



**ஷேக் ஹம்மாத் பின் இஷா அல் கலிஃபா**

### பொருளாதாரம்

இந்தத் தீவில் விளையும் முத்துக்களால் இந்நாடு பிரசித்தி பெற்று விளங்கியது. கிரேக்க மன்னன் அலெக்சாண்டரின் காலத்தில் இந்த தீவிற்கு வந்த அவனது தளபதிகளில் ஒருவரான அட்மிரல் நீர்ச்சஸ் என்பவர் இந்தத் தீவு முழுவதும் பஞ்சு மரங்கள் மிகுந்து பசுமையாக காணப்பட்டதாக குறிப்பிட்டுள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். விலை மலிவான ஆடைகள் தயாரிக்கப்பட்டு அரபு தேசங்களில் வர்த்தகம் செய்துள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

19ஆம் நூற்றாண்டின் வரலாற்று ஆசிரியர்கள், உலகின் முதன்மையான முத்து வர்த்தக நாடாக பஹ்ரைனை குறிப்பிட்டுள்ளனர். 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முத்துக்களுக்கான வர்த்தகம் முக்கியத்துவம் குறைந்து கொண்டே வந்த காலகட்டத்தில் இங்கு எண்ணெய் வளம் கண்டு பிடிக்கப்பட்டது.

வளைகுடா பகுதியின் முதல் எண்ணெய்க் கிணறு பஹ்ரைனில் ‘ஜபல் அல் துகான்’ என்னும் இடத்தில் தோண்டப்பட்டது. வளைகுடா நாடுகளில் எண்ணெய் வளப் பொருளாதாரத்தில் முதல் நிலை வகிக்கும் நாடாக பஹ்ரைன் திகழ்ந்து வருகிறது. மனித வள மேம்பாட்டு குறியீட்டில் பஹ்ரைன் உயர்ந்த இடத்தில் இருக்கிறது. நாட்டின் பொருளாதாரம் தனி நபர் சதவிகிதம் $27,538 என்ற அளவில் இருக்கிறது. இந்நாட்டின் நாணயம் பஹ்ரைன் ‘தினார்’ என்றழைக்கப்படுகிறது. இன்றைய தேதியில் ஒரு தினாருக்கு சமமான இந்திய ருபாய் மதிப்பு தோராயமாக ரூ.200/– ஆகும்.

### மக்கள்தொகை

பஹ்ரைனின் மொத்த மக்கள் தொகை 17.84 இலட்சங்கள்.

இதில் 52 சதவிகிதத்திற்கு மேல் வெளிநாட்டவர்கள்தாம். இங்குள்ள இந்தியர்கள் 3.27 இலட்சம் பேர். இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த 43000 தமிழர்கள் இங்கு இருக்கிறார்கள். இந்தியர்கள் பெரும்பாலும் கட்டுமான துறையில் பணிபுரிகிறார்கள்.

உணவு மற்றும் சில்லறை வர்த்தக துறையிலும் இந்தியர்கள் அதிகம் காணப்படுகிறார்கள் அதிலும் குறிப்பாக மலையாளிகள் சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களாக இருக்கின்றனர்.

**மொழி மற்றும் கலாச்சாரம்**

இங்கு 'அரபு' ஆட்சி மொழியாகும். இங்குள்ள 'அரபு' பேசும் மக்களில் 85% பேர் பேசும் அரபு 'பஹரானி' என்றும் 15% பேர் பேசும் அரபு செம்மையான 'வளைகுடா அரபு' என்றும் கூறப்படுகிறது. பஹ்ரானி அரபு பார்சிய கலப்புடன் கூடிய வட்டார வழக்கு மொழியாக இருக்கிறது. இதைப் பேசுபவர்கள் ஈரானிய கலாச்சாரத்தை பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள்.

மக்கள்தொகையில் பாதிக்கு மேல் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் வர்த்தக ரீதியாக இரண்டாவது அலுவல் மொழியாக இருப்பது ஆங்கிலம்.

இங்கு பரவலாக பேசப்படும் மற்றொரு பொது பேச்சு மொழியாக ஹிந்தி இருக்கிறது. இந்தியர்கள் மட்டுமின்றி அரேபியர்களும் மற்றும் உள்ள பல நாட்டவரும் ஹிந்தி ஓரளவு பேசுகின்றனர்.

இந்தத் தீவில் பேசப்படும் மற்ற மொழிகளென்றால் தமிழ். தெலுங்கு, வங்காளம், பஞ்சாபி, உருது, பிலிப்பைன், பார்சி ஆகிய மொழிகளாகும். ஒவ்வொரு மொழிக் குழுவினரும் அவரவர் கலாச்சாரத்தைத் தங்கள் மண்ணில் பின்பற்றுவதைப் போலவே இங்கும் பின்பற்றி வருகின்றனர்.

இங்கு வெளிநாட்டவர்களுக்கான சமூக அமைப்புகள் ஏராளமாக செயல்பட்டு வருகின்றன. அதில்



பக்ரைனில் உள்ள இந்திய பள்ளி

தமிழ் அமைப்புகள் சிறப்பாக செயல்படுகின்றன. அதிலும் குறிப்பாக சாதி மற்றும் சமயம் சாராமல் இந்த அமைப்புகள் செயல்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

'டோஸ்ட்மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனல்' என்ற அமைப்பின் மூலம் செயல்படும் மன்றங்களில் ஆங்கிலம் மற்றும் அரபுக்கு அடுத்தபடியாக மொழி சார்ந்த மன்றம் அமையப்பெற்றது தமிழுக்குத்தான் என்பது பெருமையோடு நினைவு கூறவேண்டிய விசயம்.

இந்தத் தீவில் மட்டும் மூன்று தமிழ் சொல்வேந்தர் மன்றங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இவை பேச்சாற்றலையும் தலைமைத்துவ பண்புகளை பயிற்சியாகவும் நடத்தி வருகின்றன. பஹ்ரைனில் முதல் தமிழ் சொல்வேந்தர் மன்றம் செந்தமிழ் சொல்வேந்தர் பேரவை 2018ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன் 2021–2022க்கான தலைவராக நான் செயல்பட்டு வருகிறேன்.

**"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"** – என்ற பாரதியின் வரிகளை நெஞ்சில் சுமந்து கொண்டு பிழைக்கும் இடத்தில் கலையையும் கலாச்சாரத்தையும் பரிவர்த்தனை செய்து கொண்டிருக்கிறோம் என நெஞ்சு நிமிர்த்தி சொல்கிறோம்.

கொரோனா பெருந்தொற்று காலத்திலே எங்களின் சொல்வேந்தர் மன்றங்கள் இணைய காணொளி சந்திப்புகள் மூலம் உரத்த சிந்தனை போன்ற உலகளாவிய இலக்கிய சேவை அமைப்புகளுடன் இணைந்து ஆற்றிய தமிழ்ப்பணியே இதற்கு சான்று.


பக்ரைன் சிறப்பிதழக்கு
நல்வாழ்த்துகள்



எழுத்தாளர்
**மாலா உத்தண்டராமன்**
நெய்வேலி
**94438 76491**




# இந்த மாத ஹைக்கூ கவிஞர்

திருச்சியைச் சேர்ந்த ஜி.சண்முகக்குமார் பிரபல வார மாத இதழ்களில் தொடர்ந்து கவிதைகள், நகைச்சுவைத் துணுக்குகள் எழுதி வருபவர். திருச்சியில் இயங்கிவரும் இலக்கிய அமைப்பு களோடு தொடர்பில் இருப்பவர். ஏற்கெனவே இருமுறை 'நம் உரத்தசிந்தனை'யின் ஹைக்கூ கவிஞர் பகுதியில் இடம் பிடித்திருப்பவர். தொடர்புக்கு: **93859 44816**





அறுவடை முடிந்ததும்
அனாதை ஆனது
சோளக்காட்டு பொம்மை



பள்ளி விடுமுறை
ஓய்வெடுத்தது
பள்ளிக்கூடம் மணி!

விளை நிலத்தை விற்றபின்
வந்து வந்து போகின்றது
அறுவடை கனவு?

எல்லையில்
காவல் தெய்வமிருந்தும்
தொடர்கிறது திருட்டுகள்!



தினம் தினம்
அடிதடி சண்டைகள்
சமத்துவபுரம்!



வலைக்கு தப்பிய மீன்
மகிழ்ச்சியில் துள்ளி நீந்தியது
கண்ணாடித் தொட்டிக்குள்!



ஏனிந்த
தற்கொலை முயற்சி?
தாவி குதிக்கும் அருவி

**இந்தப் பகுதியில் மாதந்தோறும் ஒரு ஹைக்கூ கவிஞரைப் பற்றிய அறிமுகமும் அவர் எழுதிய ஹைக்கூ கவிதைகளும் இடம்பெறும். இதற்கான பரிசுத் தொகை ரூ.200/– வழங்குபவர் 'கல்வி வள்ளல்' தி.நெ.முத்துகுமாரசாமி**



# பக்ரைன் பண்பாடு



பக்ரைனின் குறிக்கோள் ‘பக்ரைநுணா’. இதன் பொருள் ‘நம் பக்ரைன்’ என்பதாகும்.

பக்ரைனின் தலைநகரம் மனாமா, இது முடியாட்சி நாடாகும். இந்நாட்டின் மன்னர் ஹம்மாத் பின் இஷா அல் கலீபா. தலைமை அமைச்சர் – பட்டத்து இளவரசர் சல்மான் பின் இஷா அல் கலீபா.

இந்த நாட்டின் பொருளாதாரம் என்பது எண்ணெய் மற்றும் எரிவாயுவை பெரிதும் சார்ந்துள்ளது. இந்த நாட்டில் அதிகம் ஏற்றுமதி செய்யப்படும் இரண்டாவது பெரிய பொருள் அலுமினியம் ஆகும். இந்த நாட்டின் நாணயம் உலகத்திலேயே இரண்டாவது மிக உயர்ந்த மதிப்புள்ள நாணயம் ஆகும். இதை “பக்ரைனில் தினார்” என்று அழைப்பார்கள். இந்நாடு உலகத்தின் பத்தாவது சுதந்திரமான பொருளாதார நாடாகும்.

இன்றும் இந்த நாட்டின் நாணயங்களை ரூபாய் என்று அழைக்கும் வழக்கம் உள்ளது. ஏனென்றால் இந்த நாட்டின் ‘‘தினார்’’ அறிமுகம் ஆவதற்கு முன்னால் பல ஆண்டுகளாக இந்திய நாட்டின் ரூபாய் நோட்டுகள் தான் இந்த நாட்டின் பிரதான பணமாக புழங்கப்பட்டு வந்தது.

பக்ரைன் நாட்டில் உள்ள எல்லா குடிமக்களுக்கும் இந்த அரசாங்கம் இலவசமாக கல்வி அளிக்கிறது. இந்த நாட்டின் முக்கிய மொழியான அரபிக் மொழியில் இந்தப் பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் ஒரு ஆண்கள் மற்றும் பெண்கள் பள்ளிக்கூடங்கள் இலவசமாக நிறுவப்பட்டுள்ளன. இந்த நாட்டில் தமிழ் அமைப்புகளாலும் மற்றும் தமிழ் மேல் பாசம் கொண்டவர்களும் இணைந்து இலவச தமிழ் கல்வி வகுப்புகள் வாரக்கடைசியில் நடத்தப்படுகின்றது.

இங்குள்ள கணிசமான தொகையில் இருக்கும் மக்கள் பூர்வீகமாக இந்த மண்ணில் பிறந்த பஹ்ரைனி மக்கள் ஆவர். ஆனால் நாளடைவில் அருகிலுள்ள மற்ற அரபு தேசங்கள் ஆன பாலஸ்தீன், லெபனான், எகிப்து, சவுதி அரேபியா, ஓமன், ஏமன், சிரியா போன்ற நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்து இந்த பக்ரைன் தேசத்தில் குடியேறிய

## பக்ரைன் பார்க்கலாமா!



மக்கள் நிறைய உள்ளனர். இதில் பெரும்பாலானோர் இந்த நாட்டின் குடியுரிமை பெற்றவர்கள். மேலும் ஈரான், பாகிஸ்தான், இந்தியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் இருந்தும் பெரும்பாலான மக்கள் இங்கே வசிக்கிறார்கள்.



அலுமினிய தொழிற்சாலை

தொழிலாளர்களில் ஐந்தில் மூன்று பங்கு வெளிநாட்டில் இருந்து இங்கு வந்து வேலை செய்பவர்கள். இந்த பக்ரைன் நாட்டில் ஏறக்குறைய 2 லட்சம் தமிழர்கள் பணி காரணமாக இங்கே வசிக்கிறார்கள்.

அரபு மொழி பக்ரைன் நாட்டின் அதிகாரப் பூர்வமான மொழி ஆகும். ஆங்கிலம் பரவலாக பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும் அனைத்து பள்ளிகளிலும் குறிப்பாக தனியார் பள்ளிகளில் கட்டாய இரண்டாம் மொழியாக ஆங்கிலம் உள்ளது. பாரசீக மொழியும் இங்கே பயன்படுத்தப்படுகிறது இது பெரும்பாலும் வீட்டிற்கு உள்ளே குடும்பத்தினருடன் பேசும் மொழியாக இருக்கிறது. மற்ற மொழிகளான உருது இந்தி மற்றும் தகலாக் உட்பட இந்த நாட்டில் பல மொழிகள் வெளிநாட்டு மக்களால் மட்டுமே பேசப்படுகிறது.

பக்ரைன் தொழிலாளர்களின் உரிமை, கல்வி, பெண்ணுரிமை, பண்பாடு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், பொருளாதாரம், விளையாட்டு, கலை மற்றும் இலக்கியம் போன்றவற்றில் சிறந்து விளங்கி மற்ற நாடுகளுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

வெளிநாட்டினர் பாதுகாப்பாக மற்றும் மகிழ்ச்சியாக வசிப்பதற்கு தகுதியான ஒரு நாடாக உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட நாடு இந்த பக்ரைன் நாடு.

பக்ரைனின் அரசு பள்ளி



**– விக்னேஷ்,**
கட்டிட பொறியாளர்,
கீகல்ஃப் கன்ஸ்டரக்ஷன்



# கோவா
# உலகத்திரைப்பட விழா 2021

## (IFFI GOA 2021) பகுதி-3 SWEET DISASTER

SWEET DISASTER/Germany/2021

Director-Laura Lehmus/Screenplay-Ruth Tomus/ Cast:- Friederike Kempter, Lena Urzendowsky.

FRIDA என்ற ஒரு 40 வயது பெண் அவள் ஒரு ஓவிய சிகிச்சையாளர் (Painting Therapist) அவளுக்கு விமானப்படை கேப்டன் ஒருவருடன் தொடர்பு ஏற்படுகிறது, அதன் காரணமாக அவள் கர்ப்பம் அடைகிறாள், அவர்கள் இருவரும் மிகவும் காதல் வயப்பட்டு ஒரு மலை உச்சிக்குச் செல்கின்றனர். அங்கு இருவரும் பூமியில் கவிழ்ந்து படுத்தபடி வானில் பறப்பது போல் கற்பனை செய்வது நம்மையும் காதல் வயப்பட வைக்கும் காட்சி.

அந்த captainக்கு பழைய காதலி இருக்கிறாள் என்றும் அதை frida கண்டுபிடிப்பது கதையின் திருப்பம்.

FRIDA குடியிருக்கும் அபார்ட்மெண்ட்டுக்கு கீழே பெரிய பள்ளம் தோண்டும் வேலை நடக்கிறது. அங்கு வெடி வைக்கப்பட அந்த அதிர்வு கேட்டு கோபத்துடன் 'கட கட'வென வேகமாக வீட்டிற்கு வெளியே FRIDA வந்துவிடுகிறாள். அவள் கோபத்துடன் கதவை சாத்த அது மூடிக்கொள்கிறது. சாவி இரண்டாவது மாடியில் உள்ள அவள் அறையில் இருக்கிறது. எப்படி மீண்டும் வீட்டின் உள்ளே செல்வது என்று அறியாமல் தவிக்கிறாள்.

அப்போது அவள் வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டில் வசிக்கும் சிறுவன் வருகிறான்.

அவன் எப்போதும் ஒரு droneஉடன் spy camவை இணைத்து பறக்கவிட்டபடி இருப்பவன். அவன் காலில் சிறிய மானிட்டர் ஒன்று இருக்கும் அதன் screen™ I am working என்ற எழுத்து தெரியும்.. fridaவின் தவிப்பை அறிந்த அவன், தன் கையில் உள்ள remote மூலம் droneஐ operate செய்து அவன் அறையின் உள்ளே பறக்கவிட்டு சாவியை எடுத்து வந்து கொடுகிறான்.

இருவரும் நண்பர்கள் ஆகின்றனர். மற்றொரு நாள், அதே முறையில் அவள் சந்தேகப்படும் காதலனையும் அந்த சிறுவனின் Drone Camera மூலம் trace செய்து.. காதலனுக்கு மற்றொரு பெண்ணுடன் உறவு இருப்பதை கண்டுபிடிப்பாள்.

FRIDAவின் வயிற்றில் காதலனின் குழந்தை வளர்கிறது... தந்தையாக

ஆயிரம் பலூன்கள் பறக்க காதலன் ஓடிவந்து கட்டி அணைப்பது போல் கற்பனை செய்வாள் அது நடக்காமல் போக விரக்தியுடன் நடப்பாள். ஆனால் கருவை கலக்க சம்மதிக்கமாட்டாள். 40 வயதில் கர்ப்பிணி ஆனதால் அவள் உடல் சம்பந்தப்பட்ட பல பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது.



திரைப்பட இயக்குநர்

**வி.பிரபாகர்**

72999 55533

அவள் வேலை செய்யும் மழலையர் பள்ளியில் அவள் கர்ப்பம் அடைந்ததை மறைத்து விட்டதாக குற்றம்சாட்டி வேலையை விட்டு வெளியே அனுப்பி விடுவார்கள்...

அவளின் குடியிருப்பு அருகில் முதுமை அடைந்த பெண்மணிகள் 5 பேர் ஒரு மேசையைச் சுற்றி அமர்ந்து சீட்டுக்கட்டு ஆடிக்கொண்டு இருப்பார்கள், அங்கு செல்லும் fridaவும், சிறுவனும் அந்த மூதாட்டிகளுடன் நண்பர்கள் ஆகிவிடுவார்கள்.

நடுத்தர வயது பெண் என்பதால், டாக்டர் எச்சரிக்கையுடன், அவளுக்கு கரு தரித்த காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய மருத்துவம், உடற்பயிற்சி மற்றும் உணவு சம்பத்தப்பட்ட அனைத்து ஆலோசனைகளையும் வழங்குகிறார். அவளும் மிகவும் சிரத்தையுடன் அனைத்தையும் கடைப் பிடிக்கிறாள்.




சீட்டுக்கட்டு சிஸ்டர்ஸ் ஆன மூதாட்டிகள் 5 பேரும் முதலில் Fridaவிடம் வெறுப்பாக பேசினாலும் அவளுக்கு பிரசவ வலி எடுத்ததும் மிகவும் ரிஸ்க் எடுத்து அவளை மருத்துவமனையில் சேர்க்கின்றனர். அவளுக்கு அழகான குழந்தை பிறக்கிறது. மூதாட்டிகள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர்.





இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தர் அவர்களுடன் கட்டுரையாளர்...



ஏ.வி.எம். சண்முகம் அவர்களுடன் கட்டுரையாளர்...

கர்ப்பிணி ஆன பின்பு, அவளுக்கு மீண்டும் ஒருவனுடன் நட்பு ஏற்படுகிறது, அவளுடைய புதிய நண்பன் ஒரு ஸ்கூல் வேன் டிரைவர். குழந்தைகளை அதிகம் நேசிப்பவன், அவனுடைய குணாதிசயம், குழந்தைகளுக்கு அவன் பரிசுப் பொருட்கள் கொடுத்து அழைத்துச் செல்வதும், இனிமையான பேச்சு... அனைத்தும் அவளைக் கவர நட்புடன் பழகுகிறாள்.

மருத்துவமனையில் அவளுக்குக் குழந்தை பிறந்ததும், அவனிடமிருந்து அவளுக்கு Phone call வரும், தாய் ஆனதற்கு வாழ்த்து சொல்வான்... அவள் இதயம் நெகிழும், நட்பு காதலாக மாறும். அவன் Fridaவின் மனம் கவர்ந்த காதலனாகிவிட்டான் என suggestiveஆகச் சொல்லி திரைப்படத்தை இயக்குநர் நிறைவு செய்திருப்பார்.

இது ஒரு இளம் பெண்ணை சுற்றி பின்னப்பட்ட அழகான திரைக்கதை... அழகியலுடன் படமாக்கப் பட்ட ஒரு நல்ல திரைப்படம் SWEET DISASTER.

IFFI52 திரைப்பட விழாவில் சாதனையாளர்களின் நினவாக சில திரைப்படங்கள் திரையிடப்பட்டன. அதில் முக்கியமாக இயக்குநர் சத்யஜித்ரே அவர்களின் 'SEEMABADDHA' இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தர் அவர்களின் 'தண்ணீர் தண்ணீர்' மற்றும் 'அவர்கள்', இயக்குநர் புட்டண்ணா கனகல் அவர்களின் 'கதா சங்கமா', இயக்குநர் கே.விஸ்வநாத் அவர்களின் 'சாகர சங்கமம்' ஆகிய சிறந்த திரைப்படங்களை இளைய தலைமுறைக் கலைஞர்கள் மீண்டும் காணும் அரிய வாய்ப்பு கிடைத்தது.

இந்தியாவின் பல மாநிலங் களில் உள்ள திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கான MASTER CLASSES தொடர்ந்து நடைபெற்றது. அதில் ஏவிஎம் நிறுவன திரைப் படக் கல்லூரி மாணவர்கள் மிகவும் ஆர்வமாகக் கலந்து கொண்டனர்.

அவர்களுடன் தயாரிப்பாளர் திரு ஏவிஎம் சண்முகம் அவர்களும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொண்டது சிறப்பாக அமைந்தது.

**– மேலும் சில படங்கள் அடுத்த இதழில்...**

# நெல்லையைத் தேடி வந்த டெல்லி...



அகவை 90ஐ நெருங்கிய எனக்கு 16.04.2022 வாழ்வில் மறக்க இயலாத நன்னாள். திரு டெல்லிகணேஷ் அவர்கள் என் வீட்டிற்கு வருவார் என்று நினைத்துக் கூட பார்க்கவில்லை. பலமுறை பழகியதுபோல் டெல்லியார் மிக அந்நியோன்னியமாக அளவளாவினார்.

" 'ஏணி கோணி, தோணி' என்றோர் முதுமொழி, அதற்கிணங்க நமக்கு 'தோணி'யாக உதயம்ராம் அமைந்திருக்கிறார்" என்றேன். மகிழ்ந்தார். பாரதி பாடல்களை என்னோடு பாடி வீட்டிலிருந்தோரை வியப்பிலாழ்த்தினார்.

தான் எழுதிய 'பிள்ளையார் சுழி' நூலை கையொப்பமிட்டுக் கொடுத்தார். நான் அதற்குரியத் தொகையை தந்தபோது "எழுத்தாளன் டெல்லிகணேஷை நெல்லை வாழ்த்தியதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்று பணிவுடன் பாராட்டினார். நெல்லை மாவட்டத்துக்காரர்களான நானும், உதயம்ராமும் டெல்லிகணேஷும் சந்தித்தது நெல்லை அல்வா போன்று இனித்தது. தாமிரபரணியாய் அன்பு பெருக்கெடுத்து ஓடியது.

– நெல்லை **ஆ.சுப்பிரமணியன்**, 94886 06328

---

# சாதனைப் பெண்மணி விருது



'லட்சியம்' கல்வி அறக்கட்டளையின் சார்பில் நடைபெற்ற விழாவில் வேதாத்திரி மகரிஷியின் மனவளக் கலை யோக பயிற்சிகளை அரசாங்க பள்ளி மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் யோகா பேராசிரியை திருமதி சுபா ரவிஷங்கருக்கு 'சிறந்த சாதனை பெண்மணி'க்கான விருதினை ஆதம்பாக்கம் IWC பிரசிடெண்ட் திருமதி. மாலதி குருராஜன் வழங்கினார்.

# வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன்

## (1906–1988)



தமிழ்ப் பேரறிஞர் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணாக்கராகத் திகழ்ந்த உ.வே. சாமிநாதய்யரின் முதன்மை மாணாக்கராகத் திகழ்ந்து, தமிழ் பயின்று தமிழ் வளர்த்தவர் சிலேடைப் பேச்சில் வல்லவர் 'வாசீக கலாநிதி'ப் பட்டம் பெற்றவர் தான் கி.வா. ஜகந்நாதன்.

சேலம் மாவட்டம் மோகனூரில் வாசுதேவ அய்யர் – பார்வதி அம்மையார் தம்பதியினர்க்கு 1906ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் நாளன்று மகனாகப் பிறந்தார்.

'வாங்கல்' என்னும் ஊரிலுள்ள பள்ளியில் சேர்ந்து திருவாசகம், திருப்புகழ், கந்தர் அலங்காரம். கந்தர் அனுபூதி போன்ற பக்தி இலக்கியங்களைப் படித்தார்.

அவ்வூரிலே எட்டாம் வகுப்பு வரை படித்து அதன் பிறகு கிருஷ்ண ராஜபுரம் உயர்நிலைப் பள்ளியில் படித்தார். அங்கு பல இலக்கிய நூல்களைப் படித்து செய்யுட்களைத் தாமே இயற்றும் திறனைப் பெற்றார்.

இவர் இயற்றிய கவிதைகள் கற்பகம், ஆத்மசக்தி, பராசக்தி, லட்சுமி, ஆகிய பத்திரிக்கைகளில் வெளிவந்தன.

1927ஆம் ஆண்டு முதல் 1930ஆம் ஆண்டு வரை தமிழ் இலக்கணம், இலக்கியங்கள் போன்றவற்றை உ.வே. சாவிடம் ஆழமாகக் கற்றுணர்ந்தார்.

சில காலம் திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர், மீண்டும் உ.வே. சாவிடம் தமிழ்க் கற்று வரும் வேளையில் அரசுப் பள்ளியில் பணி கிடைத்த போதும், அதனை ஏற்கவில்லை.

இதற்கு பதிலாக பத்திரிக்கைகளில் படைப்புகளைப் படைக்க விரும்பினார்.

1932ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட 'கலைமகள்' என்னும் பத்திரிக்கையில் பணியாற்ற கி.வா.ஜ.வை, உ.வே.சா சிபாரிசு செய்தார்.

## தமிழ் வளர்த்த சான்றோர்கள் 22

**லோகமணி ஏகநந்தன்**
**89739 06571**





*பத்திரிக்கையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். சில ஆண்டுகளில் கலைமகள் பத்திரிக்கையின் ஆசிரியரானார். அச்சமயத்தில் கி.வா.ஜ.வின் வளர்ச்சியில் அக்கறை காட்டி வந்த உ.வே. சாவிற்கு எண்பது வயதானவுடன் உடல்நிலை மிகவும் பாதித்தது. அப்போது அவருடனேயே இருந்து கி.வா.ஜ. பணிவிடைகள் செய்து வந்தார்.*

*1942ஆம் ஆண்டில் உ.வே. சா. காலமானார் தன்னுடைய தமிழாசான் காலமானதால் தாங்கொணாத் துயருக்கு ஆளானார்.*

*ஆனாலும் தமிழாசான் சொன்னபடி பல்லாண்டுகளாக சேகரித்த பழமொழிகளைத் தமிழ்ப் பழமொழிகள் என்ற தலைப்பின் கீழ் 1988ஆம் ஆண்டு நூலாக வெளியிட்டார்.*

*இந்நூலில் 21, 549 பழமொழிகள் தொகுக்கப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.*


*தமிழறிஞரான இவர் கலைமகள், ஆனந்தவிகடன், தினமணி, சுதேச மித்திரன், பாரதமணி, லோகோபகாரி போன்ற இதழ்களில் சிறு கதைகளை எழுதி வந்தார். நாளடைவில் அச்சிறுகதைகளைத் தொகுத்து நூல்களாக வெளிட்டார்.*

*இவரது தமிழ்ப் பணியைப் பாராட்டி, காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் 'வாகீச கலாநிதி' பட்டம் மற்றும் 'திருமுருகாற்றுப்படை*












அரசு’ என்ற பட்டத்தினையும் வழங்கினார்.

சென்னை மாநிலத் தமிழ்ச் சங்கம், ‘தமிழ்ப் பெரும்புலவர்’ என்ற பட்டம் வழங்கியது. மதுரை ஞானசம்ந்தர் மடம். ‘திருநெறித்ததவமணி’ என்ற பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது.

கி.வா.ஜ. அவர்கள் தமிழகத்தில் மட்டுமின்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பா, பர்மா, அமெரிக்கா என உலகின் பல நாடுகளுக்கும் சென்று தமிழ்ச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்.

சுமார் எழுபத்தைந்து நூல்கள் வரை எழுதியுள்ளார் ‘என் ஆசிரியப் பிரான்’ எனும் தலைப்பில் உ.வே. சாமிநாதய்யரின் வாழ்க்கை வரலாற்றினையும் எழுதியுள்ளார்.

‘தமிழ்த் தாத்தா’ உ.வே.சா அவர்களின் வழிகாட்டுதலின் படி தமது சொற்பொழிவு களாலும், சிலேடைப் பேச்சுக்களாலும் தமிழ் மக்களை மகிழ்வித்து வந்தார்

உ.வே.சாவின் தலைமையின்கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த அலமேலு எனும் பெண்ணை மணமுடித்தார். மூன்று ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தை என நான்கு குழந்தைகள் பிறந்து கி.வா.ஜ.வின் வழிகாட்டுதலின் பேரில் தந்தையைப் போல தமிழுக்குப் பாடுபட்டு வந்தனர்.

தமிழுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் தமிழை வளர்க்கும் எண்ணத்தோடும் வாழ்ந்து வந்த கி.வா.ஜ. அவர்கள் 1988ஆம் ஆண்டு நவம்பர் நான்காம் நாளில் காலமானார்.






## ‘மாசிலா – விஜயா விருது’ – 2021
# இலக்கியச் சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழா


**14.05.2022 சனிக்கிழமை / மாலை 5 மணி முதல்**

**ஆந்திரா சேம்பர் ஆஃப் காமர்ஸ்**
23, 3வது குறுக்குத் தெரு, கிழக்கு சி.ஐ.டி நகர், நந்தனம், சென்னை–35.

தலைமையேற்று விருது வழங்கிச் சிறப்பிப்பவர்
**மாண்புமிகு நீதியரசர் டாக்டர் தி. நெ. வள்ளிநாயகம்**

---

வெற்றியாளர்கள் :
சிறுகதைத் தொகுப்பு - கோ.அருண் பாண்டியன்
குறுநாவல்- சாம்பவி சங்கர்
ஆய்வுக் கட்டுரைகள்-வையவன்.வித்யாசாகர்
கவிதை நூல்-பாவலர் ஆ.சின்னச்சாமி








நிகழ்ச்சி நிரல்

தமிழ்த் தாய் வாழ்த்து
வரவேற்புரை - டாக்டர் திருஞானசம்பந்தன்
மாசிலா விஜயா விருது பற்றி :
டாக்டர் விஜயலட்சுமி மாசிலாமணி
விருந்தினர் சிறப்பு - டாக்டர் மாசிலாமணி



விருது வழங்கும் விழா
முதன்மை உரை :
மாண்புமிகு நீதியரசர் டாக்டர். தி.நெ.வள்ளிநாயகம்
(நீதிபதி,லோக் அதாலத் சென்னை உயர்நீதிமன்றம்)
தலைவர், சைபர் கிரைம் & செக்யூரிட்டி, நியூ டெல்லி.



வாழ்த்து உரை:
கலைமாமணி கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன்
(ஆசிரியர்கலைமகள்)

ஏற்புரை : கோ.அருண் பாண்டியன்
நன்றி நவிலல்

தேர்வுக்குழு :
தேசியத் தலைவர் கோ. பெரியண்ணன், அ.இ.த.எ.சங்கம்,
முனைவர் இதயகீதம் இராமானுஜன்,செயலாளர், அ.இ.த.எ.சங்கம்,
முனைவர் குமரிச்செழியன், தலைவர்,பாரதி கலைக் கழகம்,
கவிமாமணி வாசல் எழிலன், பாரதி கலைக் கழகம்,
கவிஞர் ரமா ராஜகோபாலன் அவர்கள்



அனைவரையும் அன்புடன் அழைப்போர்
**டாக்டர் மாசிலாமணி – டாக்டர் விஜயலட்சுமி மாசிலாமணி**
**மற்றும் ‘தென்றல்’ குடும்பத்தினர்**


ST. THOMAS INN
Business Class Hotel
5/16, Butt Lane, Butt Road, St. Thomas Mount,
(Next to Jumma Majid), Chennai – 600016. INDIA
Email: st.thomasinnchennai@gmail.com
Ph: 044-4856 1377 | M: +9181241 80409
M: +91 9003399489
A/C & Non A/C Rooms Available
Free WiFi | Tour Package | Car Parking
Excellent Service


RS INTERNATIONAL RESTAURANT WLL
UMM AL HASSAM BAHARAIN
RADHA'S
பாரம்பரிய தமிழ் உணவகம்
TRADITIONAL TAMIL RESTAURANT
Radhas Chicken Briyani
Kozhli Varutha Kari
Kozhli Milagu Rasam
Rasam
White Rice
Raitha
Ginger Panagam
Porcha Kozhli
Sweet
Egg
OUR DELIVERY PARTNERS
FATAFAT
notlab
Talabat
ahlan


இந்தியப் பேனாநண்பர் பேரவை
Indian Penpals' League
முனைவர் பொன் சங்கர பாண்டியன்
அமைப்பாளர்
பஹ்ரைன் கிளை
அன்பு, நட்பு, மனிதநேயச் சிந்தனைகளை
கருவாகக்கொண்டு சாதி, சமய, அரசியல்
பேதங்களை அகற்றி இதயங்களை வளப்படுத்தும்
இனியதோர் நட்புலகம்
இந்தியப் பேனாநண்பர் பேரவை
INDIAN PENPALS' LEAGUE
103, Starview Apts.,
V.N. Purav Marg,
Chembur,
Mumbai-400 071.
iplmumbai12395@gmail.com
9892035187
தொடர்புக்கு: +973 33308881


DISTRICT 20
9 DIVISIONS | 37 AREAS
TOASTMASTERS INTERNATIONAL
1924
TM MARUTHU
PANDIAN NARAYANAN
Bahrain & Kuwait Tamil Clubs
Chief coordinator (2021-2022)
district20toastmasters
General Manager
TMBC
تي ام بيلدرز للمقاولات ذ.م.م
Tm Builders Contracting W.L.L.
tmbuilders.bh@gmail.com
marthu6575@gmail.com
BAHRAIN
EGYPT
IRAQ
KUWAIT



## கவிராசன் இலக்கியக் கழகம் நடத்தும்
# ‘விருத்தப்பா போட்டி 2022’

புதுக்கோட்டை, கவிராசன் இலக்கியக் கழகத்தின் தலைவராக இருந்த கவித்தென்றல் நா.கண்ணன் நினைவாக நடத்தப்படும் கவிதைப் போட்டி.

**மொத்தப் பரிசு ரூ.6000/–** தலைப்பு: **நல்லதையே நாள்தோறும் நாடு**

❖ இந்தத் தலைப்பில், ஆசிரிய விருத்தம் ஒன்றை, நான்கு அடிகளில் (அறுசீர் / எழுசீர் / எண்சீர்) எழுதி, அஞ்சல்–அட்டை மூலமோ அல்லது urathasinthanai@gmail.com மின்னஞ்சலுக்கோ **மே 31**க்குள் எங்களுக்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டுகிறோம்.


❖ சிறந்த 10 கவிதைகள் தேர்வு செய்யப்பட்டு, தலா **200/– ரூபாய்** பரிசுடன், ‘நம் உரத்தசிந்தனை’ ஜுலை மாத இதழில் பிரசுரமாகும்.

❖ இந்த 10 கவிதைகளிலிருந்து, வாசகர்கள் மற்றும் நடுவரால் தேர்வு செய்யப்படும் 2 கவிதைகளை எழுதியவர்களுக்கு, **‘விருத்தப்பா வேந்தர்’** என்ற விருதும் தலா **2000/– ரூபாய்** பரிசும் வழங்கப்படும்.



# புலவர் பாண்டியன் விருது

‘தபம்ஸ்’ குழுமத்தின் தலைவர் முனைவர் பா.மேகநாதனின் தந்தையார் புலவர் பாண்டியன் நினைவாக நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கானப் பரிசளிப்பு விழா, ஒசூர் ஜேசிஸ் கிளப் சார்பில் ஒசூரில் நடைபெற்றது. உதயம்ராம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரைப்பட இயக்குநர் ராசி அழகப்பன் மாணவர்களுக்குப் பரிசுகளையும் விருதுகளையும் வழங்கினார். நிகழ்ச்சியில் ‘தபம்ஸ்’ மேகநாதன், பெங்களூரு, ‘சிம்பொனி ஏ.ஐ.சம்மிட்’ நிறுவனத்தின் தலைவர் கோபாலகிருஷ்ணன் ஜேசி நவீன், ஜே.சி.லோகேஷ், ஜேசி விஜய் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




# புத்திரிகையின் வளர்ச்சிக்கு வாரி வழங்கிய உள்ளங்களுக்கு நன்றி!

## வாழ்நாள் உறுப்பினர் கட்டணம்





**கி.முருகேசன்**, சென்னை – ரூ. 4000/–

**வி.சேகர்**, மோரே தமிழ் சங்கம் – ரூ. 4000/–

முனைவர் **சந்திரகலா**, hvcc – ரூ. 4000/–

## நன்கொடை

த.அனந்தராமன், துறையூர் – ரூ. 500/–

நெல்லை அ.சுப்பிரமணியன் – ரூ. 500/–

விஜயலட்சுமி மாசிலாமணி, சென்னை – ரூ. 500/–

## ஐந்தாண்டு சந்தாவாக ரூ.1000/– வழங்கியோர்

சென்னையைச் சேர்ந்த... ரெங்கபார்வதி, அரங்கநாரணன், டாக்டர் எம்.விஜயலட்சுமி, எழுத்தாளர் ஐஸ்வர்யன், முனைவர் பா.மேகநாதன்... தனலட்சுமி பாஸ்கரன், திருச்சி, விஜயராஜி, புதுச்சேரி, ஆர்.ஹரிகோபி, நியூடெல்லி, இராமபாண்டியன், தேனி, மகாதேவன், மதுரை...

பட்டியல் தொடரும்...





**ச**ங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றத்தின் சார்பில் தமிழ் நாடக மேதை அவ்வை டி.கே.சண்முகம் 110வது பிறந்த நாள் விழா நடைபெற்றது. இவ்விழாவில் 'நம் உரத்தசிந்தனை' மாத இதழின் நிர்வாக ஆசிரியர் தொலைப்பேசி மீரானுக்கு மகாகவி பாரதியார் விருதும், 'கவிச்செல்வம்' விருதும் வழங்கப்பட்டது. நீதியரசர் அரங்கமகாதேவன் விருதினை வழங்கினார்.

நிகழ்ச்சியில் நல்லி குப்புசாமி செட்டியார்அரிமாமணிலால், டி.கே.எஸ் கலைவாணன், உட்பட பலரும் பங்கேற்றனர்.

# திரைகடல் ஓடி வாழ்க்கையினைத் தொலைத்த தமிழர்கள்

– சு.பேரின்செல்வம்,
பஹ்ரைன்



இராமநாதபுரத்தில் பிறந்த இவர், 16 வருடங்களுக்கு மேலாக மத்திய கிழக்கு நாடுகளில் இயந்திர பொறியாளராக பணியாற்றியவர். தற்போது BSTS - BMP Project–ல் தரக்கட்டுப்பாடு மேலாளராக இருப்பவர்.

தான் பெற்ற கடன், அல்லது குடும்ப சூழலுக்காக முதன்முதலாக விமானம் ஏறிய விளிம்பு நிலை மனிதர்களின் நிலைதான் இந்த கட்டுரை.

70–80களில் மத்திய கிழக்கு நாடுகளில் பரவலான முன்னேற்றங்கள் ஏற்பட்டன. அனைத்து விதமான துறை சார்ந்த வல்லுனர்களின் அத்தியாவசியம் தேவைப்பட்ட காலம் அது.

அதிகப்படியான மலையாளி தொழிலாளர்களும் சிறிதே தமிழக தொழிலாளர்களும் வந்திறங்கிய காலம் அது. அனைவருமே வளர்ச்சி நோக்கிய தனித்திறன் இல்லாத மக்களே.

**பக்ரைன் பார்க்கலாமா!**



மத்திய கிழக்கு நாடுகளின் அசுர வளர்ச்சிக்கு ஏற்ப திறமை உள்ளவர்களும் சேர்ந்தே வளர்ந்தது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு நாடுகளின் முக்கியமான பதவி, தொழில்களில் அவர்களின் பங்களிப்பு இருந்ததைக் கண்கூடாக காணலாம்.

70–80களின் தனித்திறன் அற்றவர்களின் வருமானம் சொற்பமே ஆயினும் இந்திய ரூபாயிலான மதிப்பு மிக அதிகம். அந்த சமயங்களில் இந்தியாவில் சரியாக முதலீடு செய்தவர்கள் இன்றைய செல்வந்தர்களாக இருப்பதைக் காணலாம்.

2005க்கு பின்பான தொழிலாளர் சட்டங்களுக்குப் பின்பு நிறைய



பாதுகாப்பான சட்டங்கள் தொழிலாளர்களுக்கு உதவின.

எழுதப் படிக்கத் தெரியாத மக்களின் வாரிசுகள் நல்ல நிலைகளில் இன்று தொடர்வது மகிழ்ச்சி கரமானது. பரம்பரை தொழில்களை தவிர்த்து எல்லா விதமான Engineering திறன்களில் தொடர்வது வரவேற்கத்தக்கது. இருந்தாலும் இன்னும் தனித்திறன் அற்ற தமிழக தொழிலாளர்களின் நிலை இன்னும் பரிதாபமாகவே உள்ளது.

பல நிறுவனங்களில் எந்த விதமான சேவை கட்டணங்கள் அனுமதிக்காத போதும், ஏஜென்டுகளின் அளவில்லாத சேவை கட்டணங்கள் இன்றும் தொடர்கிறது. தனித்திறன் அற்றோரும், படித்த இளைஞர்களும் இதில் அடங்கும்.

ஒரு லட்சம் ரூபாய் சேவை கட்டணம் செலுத்தி, 12,000/– சம்பளத்திற்கு வரும் இளைஞர்களின் வாழ்க்கையில் கேள்வி குறி மட்டுமே மிச்சம்.


porta cabin

இருபது வயதுகளில் வளைகுடாவிற்கு பணம் கொழிக்கும் கனவுகளுடன் வந்து, அதிகமான வெயில் மற்றும் குளிருடன் பயணித்து, ஒவ்வாத உணவுகள் உண்டு, மிக சில வருடங்களிலேயே கசந்துபோகும் வாழ்க்கை இங்கு பலருக்குண்டு.

ஈசல் கூட ஒரு நாளைய வாழ்வில் சாலை விளக்கின் உயரத்தைத் தொட்டுவிட்டுத்தான் மரணிக்கும். அந்த உயரம் கூட தாண்டாத தமிழர்கள் இங்கு பலர் உண்டு.

பல உயர மாடி கட்டிடங்களை உயர்த்திய மக்கள் தங்கள் வீடுகளில் இன்றும் நட்சத்திரங்களை எண்ணிக்


BAPCO Modernaization Program

கொண்டுதான் உறங்குகிறார்கள்.

பெரும்பலான Project வாழ்விடங்கள் porta cabin–ல் இடுக்கமான வாழ்க்கை. கால் திடமாக ஊன்றி கழிவிறக்க முடியாத வன்முறை தினமும் காலையில் துவங்கி விடுகிறது. இன்னும் மோசமான ஒட்டக மேய்ப்பாளர்களின் வாழ்வு ஒட்டகமாகவே வாழ்கிறார்கள். அவர்களின் தனிமை கூட்டமாக வாழும் ஒட்டகத்தினை விட கொடுமையான தண்டனையே.

தற்பொழுது பக்ரைனின் மிகப்பெரிய project BAPCO Modernaization Program $4.7 பில்லியன் மதிப்பிலான திட்டம். கிட்டதட்ட 25 ஆயிரம் ஆட்கள் பணியில் அமர்த்தபட்டு உள்ளனர், 90% ஆட்கள் இந்திய மக்கள்.

இந்தத் திட்டத்தில் பணி செய்பவர்களுக்கான ஏஜென்ட் களுக்கான சேவை பணம், சரியான நேரத்திற்கான சம்பளம், குறைந்தபட்ச தங்கும் வசதிகள், உணவுகள் போன்ற அடிப்படை தேவைகள் மாதம் தோறும் owners மூலம் நேரடி கள ஆய்வுகள் நடைபெறுகின்றன, இது மிகவும்வரவேற்கதக்கது.

இருப்பினும் இந்தத் திட்டத்திலும் நிறைய ஏமாற்று வேலைகளும் நடை பெறுகின்றன.

தன்முனைப்புடன் வாழும் சில நல்ல உள்ளங்கள், மற்றும் சில தமிழ் சங்கங்கள் உதவிக்கரங்கள் நீட்டுகின்றன. இவர்கள் கீழ் நிலையிலுள்ள தமிழர்களை உயர்த்த முயற்சிப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

தமிழ்நாட்டில் குறைந்தபட்ச கூலியாக மாதம் 12000/– பெறும் மக்கள் வெளிநாட்டு மோகத்தில் இதனினும் குறைவான சம்பளத்தினை நாடுவது முரண்.

இவர்களின் வாழ்வு மேம்பட குறைந்தபட்ச மாத வருமானத்தை அரசு வரையறுக்க வேண்டும். நல்ல நிலையிலுள்ள இந்தியர்கள் ஒரு முறையாவது ஒட்டக மேய்ப்பவர்களுடன் சில மணி நேரங்களை அவர்களுடன் செலவிட்டால் மனிதம் இன்னும் உயிர்ப்புடன் இருக்கும்.



அரேபிய முக்கிய உணவு BBQ எனப்படும் சுட்ட கறியின் தணல்கள் சாப்பிடும் வரை நீளுவதை போல, மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்பவர்களின் வாழ்க்கை முழுவதும் அந்த தணல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.



# ஸ்ரீ சாரததா சக்தி பீடம்



(An ISO 9001-2008 Certified Organisation Reg. No. CCPL/QMS/D1744)
72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்.
(வழி) தாம்பரம், சென்னை–600 063. போன்: 2276 2299,
செல்: 88070 00510, 88070 00518, சிட்டி ஆபீஸ் நெ.7/4, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 600 033, போன்: 2371 4942.

## ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர் வணக்கம்.

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 30 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 150 மாணவர்கள் தங்கிப் படித்து வருகின்றனர். மேலும் கூடுவாஞ்சேரியில் உள்ள எங்களது குருகுலத்தில் 30 மாணவிகள் தங்கிப் படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்புச் செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது, ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| காலை சிற்றுண்டி (150 பேருக்கு) | ரூ. 1,000 |
| மதிய உணவு | ரூ. 2,000 |
| இரவு சிற்றுண்டி | ரூ. 1,000 |
| இனிப்பு மற்றும் பால் வழங்குதல் | ரூ. 1,000 |
| ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்குக் கல்வி உதவித் தொகை | ரூ. 1,000 |
| ஒரு மாணவனுக்குப் பராமரிப்புச் செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி) | ரூ. 12,000 |
| உயர் கல்வி வைப்புத்தொகை (Education Endowment) | ரூ. 1,000 |

**நன்கொடைகளுக்கு 80ஜி பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு**

மேலும் தங்களின் பிறந்தநாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகைநாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்ற நாட்களில் மாணவர்கள் சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் ("SHIRI SARADHA SAKTHI PEETAM") என்ற பெயருக்கு, Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்குமுபடி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.

11ஆம் ஆண்டில்

# வெண்பா விருந்து–7

மாதந்தோறும் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த வெண்பாக்களில் இருந்து மிகச்சிறந்த 2 வெண்பாக்களுக்கான பரிசுத் தொகை ரூ.2000/– மற்றும் ‘வெண்பா வேந்தர்’ விருது வழங்கப்படும்.
பரிசினை வழங்குபவர் முனைவர் அமுதா பாலகிருஷ்ணன்



## கோடை வெயிலோ கொடிது




**ரூ. 200/- பரிசு**

**உண்ண வழியில்லை உற்றார் துணையில்லை
எண்ணிப் புலம்புகிறார் எந்நாளும் – கண்மணியே
ஆடை தனக்கின்றி அல்லலுறும் ஏழைக்குக்
கோடை வெயிலோ கொடிது.**

- **வ.ஆனையப்பன்**, 94866 94750



மூக்கில் குருதி முதுகினில் கொப்புளங்கள்
தாக்கிடும் நாவறட்சி தாகத்தால் – தூக்கிவந்து
கூடை குளிர்நிலவைக் கொட்டிடினும் தீய்க்கின்ற
கோடை வெயிலோ கொடிது.

– **கருமலைத்தமிழாழன்**, 94434 58550



மனத்துக் கினிது மழைபொழியும் காலம்;
வனத்துக் கழகு வசந்தம்;– கனத்ததொரு
வாடைக் குளிருயிரின் வாதை வலிதெனினும்
கோடை வெயிலோ கொடிது.

– **கே.பி.பத்மநாபன்**, 94881 53283

அன்பினிது பண்பினி(து) ஆன்ற அறிவினிது
மன்பதையில் மாந்தன்தன் மாண்பினிது– வன்மமொடு
வாடை மதக்காழ்ப்பால் வந்துற்ற சூழ்ச்சியெனும்
கோடை வெயிலோ கொடிது.

– **பூவரசி மறைமலை**, 81444 15956



கொடிய வெயிலிற் குடையெனவாம் வேம்பின்
நெடிய நிழலே இனிது – படியுமழல்
ஆடை யரண்கடந் தங்கமுழு துங்கனலாம்
கோடை வெயிலோ கொடிது.

– **பா.பொன்வேலப்பன்**, 89253 88781

வெண்பா அனுப்புவோர் கவனத்திற்கு:

*ஒருவர் ஒரேயொரு நேரிசை வெண்பாவை மட்டும் அஞ்சல் அட்டை / urathasinthanai@gmail.com என்ற முகவரிக்கு அலைப்பேசி எண்ணுடன் எழுதி அனுப்பவும்.

**ரூ. 200/- பரிசு**

**கு**ளங்கள் வறளும்! குளிர்காற்று நீங்கும்!
வளங்கள் குறைந்துமனம் வாடும் – உளமேவும்
ஆடை சுமையாகும்! அல்லல் தருகின்ற
கோடை வெயிலோ கொடிது.

– **எம்.ஆர்.ஜெயந்தி**, 94865 43763



**ஊ**ட்டி, கொடைக்கானல் ஊட்டி வரும்குளிர்
வாட்டிடும் வெம்மையை வீழ்த்திடுமே!– நாட்டோரே!
வாடை வருத்தும் வறுமையிவை யாவினும்
கோடை வெயிலோ கொடிது.

– **இரா.பாஸ்கரன்**, 94437 99764



**நா**டு வளம்பெற நாளெல்லாம் உண்டியின்றிப்
பாடுபடும் ஏழை, படுத்துறங்க – வீடுமின்றி
ஆடையின்றி வாழும் அவலத்தை நோக்குங்கால்
கோடை வெயிலோ கொடிது.

– **ஆ.சின்னச்சாமி**, 94425 05277

**சி**த்திரையில் ஆதவனின் செஞ்சுடர் வெம்மையால்
இத்தரை, நீர், காற்றும் எரிதழலாய்– எத்திக்கும்
சூடேறும் கேடதனால் வெஞ்சினத்தார் போல்கொளுத்தும்
கோடை வெயிலோ கொடிது.

– **ந.ஞானசேகரன்**, 94437 14386



**பா**தங்கள் சூடேறிப் பாய்கதிரில் சோர்வடைய
ஏதங்கள் தோன்றிட ஏரிகுளம் – ஓதமின்றி
வாட விளையும் வயற்காடு காய்ந்துலரக்
கோடை வெயிலோ கொடிது.

– **பு.கு.சுப்பிரமணியன்**, 94437 55781

*அடுத்த மாதத்திற்கான ஈற்றடி:*

**மாணாக்கர் பேணுவீர் மாண்பு**



கவிதைத் தேர்வு
மற்றும் ஈற்றடி
கடலூர் **மணிமாறன்**
**94431 44372**

சிறுகதை

# எதிர்பார்ப்பு

பிரேமாவின் காலை நேரம் பரபரப்புடன் துவங்கியது, அலுவலகம் நுழையும் போழுது அலைபேசி சிணுங்கி "எஸ்.எம்.எஸ்" என்றது. படிப்பதா, வேண்டாமா என்ற அவசரத்துடன் திரையை பார்த்தாள். ஆதித்தின் விசா நேர்முகத் தேர்விற்கு அமெரிக்க தூதரகத்திலிருந்து அழைப்பு வந்திருந்தது.

அதித்யா பிரேமாவின் அருமை மகன். பன்னிரன்டாம் வகுப்பு மாணவன். அவன் பள்ளியில் தயாரித்த அறிவியல் மாடல் இயந்திரம் உலக கண்காட்சிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. அதன் சார்பாக விசா விண்ணப்பித்து பள்ளியின் சார்பாக பயணிக்கக் காத்திருக்கிறான்.

மனக்கண்ணில் அவனின் முதலாம் வகுப்பு சுற்றுலா பயணம் ஞாபகம் வந்தது. இன்றும் வியர்த்து கண்கள் பனிக்க அவன் போகமாட்டேன் என்று அடம்பிடித்து அழுதது கண்முன் விரிந்தது.

முதலாம் வகுப்பில் வண்டலூர் மிருகக் காட்சி சாலைக்குச் செல்ல சுற்றுலா அறிக்கை வந்தது முதலே அழ அரம்பித்தான். "நான் போக மாட்டேன், நீயும் வா" என்றான்.

பிரேமாவின் கணவர் அப்புசாமி "அவன் கண்டிப்பாக போக வேண்டும். உன் சேலையைப் பிடித்து கொண்டே வாழமுடியாது." என்று கண்டிப்பாக உத்திரவிட்டார்.

பிரேமா இருதலை கொள்ளியானாள். ஆதித்தின் பிஞ்சு முக கலவரம் மனதை உருக்கி கண்களில் வழிய வைத்தது. பிரம்ம பிரயர்த்தனமாய் தயார் செய்யும் பொழுது மீண்டும் மீண்டும் "நீயும் வாயேன்" என்று மழலையில் கெஞ்சினான்.

"அம்மாவை பள்ளியில் சேர்த்துக்க மாட்டாங்க பட்டு" என்று கொஞ்சினாள். "அப்படின்னா நீ உன்



வண்டியில் பஸ் பின்னாடியே வருவாயா?" என்று தனது கடைசி முயற்சியையும் செய்தான். படபடப்புடன் அவனை பள்ளி பஸ்ஸில் ஏற்றும் பொழுது பிரேமா சுவாசிக்க தவித்து மூச்சை ஆழமாக இழுத்து சுவாசித்தாள்.

பல மணி நேர காத்திருப்பிற்கு பின் மதியம் மூன்று மணிக்கு ஆதித் வீடு திரும்பினான்.

"என்ன பார்த்தாய்" என்று கேட்டாள். "குரங்கு, குருவி, மயில்" என திரும்பத் திரும்ப சொன்னான். செல்லமாய் பொத்தி பொத்தி வளர்த்த மகனின் முதல் தனிப் பயணம். அதன் பின் உல்லாச பயணம் என்பதும் அவனை சமாதானப்படுத்தி அனுப்பவதும் தொடர்கதையானது.

இன்று கடல் கடந்து பயணிக்கும் சூழல். பிரேமா கலவரத்துடன் சாயங்காலம் வரை காத்திருந்தாள். ஆகித் இதை எவ்வாறு சமாளிப்பான் என்று குழம்பினாள். தானும் அவனுடன் செல்ல எவ்வளவு செலவு ஆகும் என்று கணக்கிட்டு பார்த்தாள். தன் கணவரிடம் அனுமதி பெற்று அவனுடன் எவ்வாறேனும் பயணிக்க முடிவு செய்தாள்.

சாயங்காலம் வீட்டிற்குள் நுழையும் போதே ஆதித் குதூகலத்துடன் ஓடி வந்து "அம்மா விசா இன்டர்வியூ நாளைக்கு இருக்கு. நீ மறந்திடாமல் அலாரம் வைத்து எழுப்பி விடு" என்றான். மேலும் பரபரப்பாக அப்பாவிடம் அறிக்கையில் ஒப்பந்த கையெப்பம் பெற்றுக் கொண்டான்.

"உனக்கு என்னென்ன கிப்ட் வேணும்னு சொல்லு நான் உனக்கு வாங்கிட்டு வருகிறேன்." என்று என்னிடம் கேட்டான்.

"நீ வந்தாதான் போவேன்" என்று அடம்பிடித்தவன் இன்று "நீயும் வாயேன்" என்று உதட்டளவிலாவது அழைப்பான் என்ற எதிர்பார்ப்பு நொடியில் உடைந்து போனது.

ஆனால் அதனை வெளிக் காட்டாது, "நீதான் வேண்டும் டா செல்லம்" என்று மனதில் கூச்சிலிட்டு வெளியில் உதடு களில் புன்முறுவல் பூத்தாள் பிரேமா.

**– முனைவர் சந்திரகலா (எ) கடலரசி,**
**97908 64448**



**H**anon Systems (Visteon Automotive) நிறுவனத்தில், பர்சேஸ் பிரிவில் பொது மேலாளராக 10 ஆண்டுகள், கார்களுக்கான கண்ணாடி தயாரிக்கும் (Asahi Glass India Ltd.,) நிறுவனத்தில் தலைமைப் பொறுப்பு, ஆட்டோமொபைல் ஒயரிங் நிறுவனமான மதர்சன் சுமி சிஸ்டத்தில் உயர் பதவி, இப்படி ஆட்டோமொபைல் துறையின் எல்லாப் பிரிவுகளிலும் உயர் பதவிகளை நிர்வகித்து வருபவர் சந்திரகலா.

அண்மையில் அமெரிக்காவிலுள்ள உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டம் பெற்ற இவருடைய முதல் சிறுகதை இது என்பது குறிப்பிடத்தக்கது.

# பக்ரைன் நாட்டில் நடைபெறும் கலை பாரம்பரிய விழாக்கள்

– சொல்வேந்தர் **பாலமுருகன்**
balabarathi1976@yahoo.com




வளைகுடா நாடுகளில் வெளி நாட்டினர் உள்நாட்டினரோடு நட்பாய் இணைந்து மகிழ்ச்சியாக வாழும் நாடுகளில் முதல் இடம் பிடித்த நாடு எதுவென்றால் அது பக்ரைன் நாடுதான்.

இந்த நாடு மேற்கு ஆசிய நாடுகளிலுள்ள சிறிய தீவு, இது பரப்பளவில் சிறிய நாடு, மக்கள் தொகையில் சிறிய நாடு. ஆனால் சக மனிதர்களை மதிப்பதில் மிகப்பெரிய மனம் படைத்த மக்களைக் கொண்ட நாடு. 'வந்தாரை வாழ வைக்கும் தமிழகம்' போன்று வந்தாரை வசதியாக, மகிழ்ச்சியாக, மன நிறைவோடு வாழ வைக்கும் நாடு நாங்கள் வாழும் பக்ரைன் நாடு.

இந்த நாட்டில் வாழும் நாங்கள் இந்த மண்ணின் மைந்தர்களின் கலை மற்றும் கலாச்சார விழாக்களின் மகிழ்ச்சியை முழுமையாய் அனுபவிக்கிறோம்.

**பக்ரைன் பார்க்கலாமா!**



இந்த நாட்டில் நடைபெறும் ஒவ்வொரு விழாவும் இந்த நாட்டின் கலையை, கலாச்சாரத்தை, பண்பாட்டை இங்கு வாழும் எங்களுக்கும், இந்த நாட்டிற்கு ஆசையோடு வரும் சுற்றுலா பயணிகளுக்கும் முழுமையாய் உணர்த்துகின்றன.

இஸ்லாமிய புது வருடமான முஹர்ரம் பண்டிகை அனைத்து மக்களையும் ஒருங்கிணைத்து மிக புனிதமான விழாவாகக் கொண்டாப்படுகிறது.

'ஆஷூரா' என்பது இந்த மண்ணின் மைந்தர்களில் 'ஷியா' பிரிவு முஹமதியர்களின் துக்க தினமாக அனுசரிக்கப்படுகிறது. ஆனாலும் இந்த மக்கள் ஆஷூரா நிகழ்ச்சிகளில் உணவு கொடுத்து உபசரித்து தங்கள் பழக்க வழக்கங்களை புரிந்து கொள்ள வாய்ப்பு வழங்குகிறார்கள்.

இஸ்லாம் சகோதரர்களின் புனித நோன்பு அனுசரிக்கும் மாதமான ரம்ஜான் மாதம் முழுவதும் சூரிய மறைவிற்கு பின்பு 'இப்தார்' நிகழ்ச்சியில் மத பேதமின்றி அனைவரும் உள்ளன்போடு கலந்து கொள்கிறார்கள்.

ரம்ஜான் புனித மாதத்தின் நிறைவாக 'ஈதுல் பிதர்' திருவிழா ஷியா மற்றும் சன்னி பிரிவு முஹமதியர்களை ஒருங்கிணைத்து மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படுகிறது. இந்தத்



பொங்கல் திருவிழா



நெல்லை மாவட்டத்தின் மின் மற்றும் மின்னணுவியல் பொறியியல் பட்டதாரியான இவர் பக்ரைனில் எவரெஸ்ட் எலக்ட்ரிகல் மற்றும் அல் முபீத் எலக்ட்ரிகல்ஸ் நிறுவனங்களின் தலைவராகவும், நிர்வாக இயக்குனராகவும் இருப்பவர். பக்ரைன் முத்தமிழ் சொல்வேந்தர் மன்றத்தின் தலைவராக இருப்பவர்.

திருவிழாவை அனைவரும் ஒன்றாய் குடும்பமாய் இணைந்து கொண்டாடுகின்றனர்.

இந்த நாடு இஸ்லாமிய நாடாக இருந்த போதும் இங்கு வாழும் அனைத்து வெளிநாட்டினரும் தங்கள் கலை கலாச்சார பண்பாட்டு விழாக்களை எந்தவித கட்டுப்பாடும் இன்றி முழுமையாய் கொண்டாட அனுமதிக்கிறது. பக்ரைன் நாட்டு மக்களும் எந்தவித பாகுபாடும் இன்றி மன மகிழ்ச்சியோடு மற்ற நாட்டு மக்களின் கலை கலாச்சார பண்பாட்டு விழாக்களில் கலந்து கொள்கிறார்கள்.

நம் தமிழ் சமூகம் தமிழர்களின் அத்தனை கலை கலாச்சார பண்பாட்டு விழாக்களையும் முழு மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தை பொங்கல் திருவிழா தமிழ் அமைப்புகளால் கோலமிட்டு, குலவையோடு பொங்கலிட்டு, மதிய பாரம்பரிய உணவு பகிர்தலோடு, சிலம்பாட்டம், கயிறு இழுத்தல், கபடி, உறியடித்தல் உள்ளிட்ட நம் பாரம்பரிய விளையாட்டுகளோடும், இரவு கலை நிகழ்ச்சிகளோடும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இந்த விழா இந்த நாட்டில் வாழும்



பக்ரைன் தினம்

அத்தனை தமிழர்களும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் வாய்ப்பை வழங்குகிறது.


ரம்ஜான் கொண்டாட்டம்

வளைகுடா நாடுகளிலேயே பக்ரைன் நாட்டில் மட்டும்தான் தொழிலாளர் தினமான மே 1 தேதி விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டு தொழிலாளர் திருவிழாவாக மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நாட்டின் கட்டமைப்பில், வளர்ச்சியில் பங்கு கொண்ட இந்திய, குறிப்பாக தமிழ் தொழிலாள தோழர்களுக்கு நன்றி சொல்லும் விதமாய் நம் தமிழ் அமைப்புகள் பக்ரைன் நாட்டின் தொழிலாளர் அமைச்சகத்தோடு இணைந்து மிகச் சிறப்பான தொழிலாளர் திருவிழாவாகக் கொண்டாடுகிறோம்.


தொழிலாள தோழர்களுக்கு காலை சிற்றுண்டியோடு தொடங்கி பக்ரைன் நாட்டின் சிறந்த மருத்துவர்களின் துணையோடு சிறப்பு மருத்துவ முகாம் நடத்தி மதியம் அறுசுவை உணவு படைத்து, மாலை கலை நிகழ்ச்சிகளோடு இரவு விருந்து பரிமாறி நம் தோழர்களை மன மகிழ்வோடும் மன நிறைவோடும் அனுப்பி வைப்போம்.

பக்ரைன் நாட்டை எங்கள் இரண்டாம் தாய் நாடாக எண்ணி கொண்டு வாழ்வதில் எங்களுக்கெல்லாம் மிக்க மகிழ்ச்சி. பக்ரைன் நாடும், நாட்டு மன்னரும் மக்களும் அனைத்து வித வளங்களோடும் என்றென்றும் மகிழ்ச்சியாய் வாழ எல்லாம் வல்ல இறைவனை மனமாற வேண்டுகிறோம்.

## சாதனைப் பெண்மணி விருது



இலக்கிய பீடம் மாத இதழின் வெள்ளி விழா மலரை, மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் துணைத் தலைவர் இ.சுந்தரமூர்த்தி தலைமையில், டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் வெளியிட, ஆடிட்டர் என்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். நிகழ்ச்சியில் மாம்பலம் அ.சந்திரசேகர், கவிஞர் கார்முகிலோன், கண்ணன் விக்கிரமன் மற்றும் பலர் பங்கேற்றனர்.



“உன் எதிரியை கொன்னு ஆத்துல போடுறதுக்கு முன் எதுக்கு இஞ்ச் டேப்பால அளந்தே...?”

“ஆத்துல போட்டாலும் அளந்து போடு”ன்னு சொல்லுவாங்க எஜமான்...! அதான்...”

**- ம.விருதுராஜா**, 70106 05613

ஒவ்வொரு ஜோக்குக்கும் **ரூ.100/–** பரிசு

*வழங்குபவர்:* **மாரியம்மாள் – ஜெயராமன்**



*ஓவியம்:* **ஸ்ரீகாந்த்**

வாழ்க்கையில் நான் ரொம்ப அடிபட்டவன் டாக்டர்

பிறகு ஏன் ஒரு பேண்டேஜ் போட்டுக்க கூட என்கிட்ட வரல?

**- சி.ஆர்.ஹரிஹரன்**, 83308 50998



கல்யாணம் ஆன புதுசுல என் கணவர் என் மேல பைத்தியமா இருந்தாரு..”

“இப்போ...?”

“ ‘பைத்தியமா’ இருக்காரு..”

**- ஆர்.பிரசன்னா**, 90432 82401



தொடர்ந்து எனக்கு வயிற்றுவலியாய் இருக்கிறதே ஊழ்வினைக் கோளாறா?

“நீங்க தினமும் குடிக்கிற கூழ்வினைக் கோளாறு!”

**- மன்மதன்**, 88703 29191



இந்த ஹோட்டல்லே சாப்பாடு இவ்வளவு மோசமா இருக்கு..

நான் சொன்னேனே..... இங்கே சாப்பாடு ஹோம்லியா இருக்கும்னு

**- டி.கே.ஹரிஹரன்**, 98416 13494

# 32 ஆண்டுகள் கணவரின் ஆஸ்தியுடன் வாழ்ந்த லட்சுமிபாய் செண்பகராமன்

"ஜெய்ஹிந்த்" செண்பகராமனை பலருக்குத் தெருந்திருக்கும் ஆனால் அவர் மனைவி இலட்சுமியின் சிறப்புகள் பற்றி எல்லோருக்கும் தெரியப்படுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

ரஷ்ய நாட்டிலிருந்து இந்தியா வந்திருந்த ஒரு ரஷ்யப் பெண்மணி தனக்கு மகப்பேறு இல்லாததால் இந்திய கலாச்சாரத்தைப் பெரிதும் பாராட்டி, ஒரு இந்தியச் சிறுமியை தத்தெடுத்துக் கொண்டு ரஷ்யா செல்ல விரும்பினார். அதன்படி மணிப்பூர் சிசு சம்ரக்ஷண ஆசிரமத்தில் வளர்ந்து வந்த லட்சுமி என்ற 12 வயது அநாதைச் சிறுமியின் சிறப்பான நடவடிக்கைகளைக் கவனித்து அச்சிறுமியை முறைப்படி சுவீகாரம் எடுத்துக் கொண்டு தாய்நாடு திரும்பினார்.



அப்போது முதல் உலகப்போர் துவக்கக் கட்டத்தில் இருந்ததால் ரஷ்யா, ஜெர்மனி எல்லையில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் ரஷ்யப் பெண்மணியின் மீது தவறுதலாக துப்பாக்கிக் குண்டு பாய்ந்து அங்கேயே மரணமடைந்தார்.

அப்போது அங்கே அழுது கொண்டிருந்த சிறுமியை, ஜெர்மனி வீரர்கள் பெர்லின் அழைத்து வந்தனர். அப்போது காமா அம்மையார் ஜெர்மனி, பிரான்ஸ் ஆதரவோடு பல சமூகத் தொண்டு ஆற்றிக் கொண்டிருந்தமையால் ஜெர்மன் அதிகாரிகள் அந்த இந்தியச் சிறுமியை காமா அம்மையாரிடம் ஒப்படைத்தனர். அன்று முதல் காமா அம்மையார் லட்சுமியை தன் மகள் போல் பேணி காத்து பாசத்துடன் வளர்த்து வந்தார்.

லட்சுமிபாய் ஜெர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலி ஆகிய மொழிகளைக் கற்று அம்மொழிகளில் கவிதைகள் எழுதும் அளவிற்கு பாண்டித்தியம் பெற்றார். காமா அம்மையார் லட்சுமிபாயை தன்னுடைய அந்தரங்க உதவியாளரைப் போல அவர் செல்லும் எல்லா இடங்களுக்கும் அழைத்து சென்று வந்தார்.

எனவே லட்சுமிபாய் இந்திய நாட்டின் விடுதலைக்கு, ஜெர்மனி, பிரான்ஸ் நாடுகளில் உள்ள விடுதலை வீரர்கள் நடத்தும் அத்தனை போராட்ட விவரங்களையும் நன்கு அறிந்து வைத்திருந்தார்.

அந்தச் சமயத்தில் லட்சுமிபாய் அவர்கள் நமது செண்பகராமனது

சிறப்புச் சொற்பொழிவான “வேதகால பெண்கள்” என்ற பேச்சை கேட்டதோடு இந்திய விடுதலைக்காக அவர் ஆற்றிக் கொண்டிருந்த வீரதீரச் செயல்கள் அனைத்தையும் காமா அம்மையார் மூலம் தெரிந்து கொண்டு அவர் மீது காதல் வயப்பட்டார்.




செண்பகராமன் தான் மணந்தால் பெருமையும், பண்பும் நிறைந்த பாரத தேசத்துப் பெண்ணையே மணப்பேன் என்ற உறுதியுடன் இருந்தார். ஆக இந்திய உடையுடன், அழகுடன், இந்தியப் பெண்களுக்குரிய நாணத்துடன் லட்சுமியபாயை பார்த்த செண்பகராமனின் மனம் இந்த பெண்தான் நான் இதுநாள் வரை காத்திருந்த இந்தியப் பெண்ணோ எனறு அலை பாய்ந்தது.

காமா அம்மையார் மூலம் லட்சுமிபாய் பால்ய வரலாற்றை அறிந்து, அவர் மீது பெருகிய இரக்கம், காதலாகவும் மலர்ந்தது.

இந்திய விடுதலைக்காக செண்பகராமனுடன் தானும் ஈடுபட விருப்பத்தைத் தெரிவித்து ஜெர்மனியில் அவர் பிரச்சாரங்கள் செய்யும் இடங்களில் எல்லாம் லட்சுமிபாயும் தொடர்ந்து சென்றார்.

காமா அம்மையார் 1931ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் தேதி, பெர்லினிலுள்ள “ஆல்டர் ஹோட்டலில்” செண்பகராமனுக்கும், லட்சுமிபாயிக்கும் இந்து முறைப்படி எளிய முறையில் திருமணம் நடத்தி வைத்தார்.

செண்பகராமனின் வளர்ப்புத் தந்தை என்ற முறையில் “வால்டர் ஸ்டிரிக்லாந்து” கலந்து கொண்டு ஆசிகள் வழங்கினார். திருமணத்திற்கு பின் செண்பகராமன் லட்சுமிபாயுடன் தான் படித்த இத்தாலி, சுவிட்சர்லாந்து நாடுகளுக்கு அழைத்துச் சென்று தன்னுடைய நண்பர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்.

வளர்ப்புத் தந்தை “வால்டர் ஸ்டிரிக்லாந்து” அவருக்கு பெர்லின் பிரதான இடமான “சரோலோட்டன் பர்க்” பகுதியில் இருந்த தன் மாளிகையை திருமண தம்பதிகளுக்கு தன் திருமண பரிசாகக் கொடுத்தார்.

மோதிலால் நேரு பெர்லின் வரும் போதெல்லாம் செண்பகராமன் மாளிகையில் தான் தங்குவாராம். மேலும் மறைந்த பாரத பிரதமர் நேரு அவர்களும், அவரது அருமை மகள் சிறுமி இந்திரா பிரியதர்சினியுடன் (இந்திராகாந்தி) ஜெர்மனி சென்றிருந்த போது, செண்பகராமன் அவ்விருவரையும் மரியாதையுடன் வரவேற்று தமது

*மாளிகையிலேயே தங்க விசேஷ ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.*

*அவர்கள் இந்தியா திரும்பிச் செல்லும் போது, லட்சுமிபாய் சிறுமி இந்திராவுக்கு அவர் விரும்பிய மிகுந்த வேலைப்பாடுகளுடன் கூடிய வண்ணக் கண்ணாடி சரவிளக்கு ஒன்றை பரிசாக அளித்துள்ளார். அச்சரவிளக்கு அலகாபாத்தில் உள்ள 'ஆனந்தபவன்' இல்லத்தில் செண்பகராமனின் நினைவாக வைக்கப்பட்டுள்ளது.*

*ஹிட்லர் ஒரு பத்திரிக்கையாளர்கள் கூட்டத்தில், இந்தியர்கள் சுதந்திரம் பெற தகுதியற்றவர்கள் என்று கூற, செண்பகராமன் வெகுண்டு எழுந்து "ஹிட்லர் தன் கருத்தை திரும்ப பெற்று, தனக்கு மன்னிப்பு கடிதம் தரவேண்டும்" என்று பத்திரிக்கைகள் மூலம் அறிவித்தார்.*

*ஹிட்லரும், செண்பகராமனுக்கும் அப்போதைய ஜெர்மனி ஜனாதிபதி ஹிண்டன் பெர்க்குக்கும் உள்ள*



மாவீரன் வான் செண்பகராமன் அஸ்தியை குமரிக்கடலில் கரைக்க எற்பாடுகள் செய்த மணி, அஸ்தியை கொண்டு வந்த திருமதி லட்சுமிபாய் செண்பகராமன் - 1966

*நெருங்கிய தொடர்பை கேள்வியுற்ற ஹிட்லர் தன் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்று மன்னிப்பு கடிதம் அனுப்பி வைத்தார்.*

*இதனால் அதிர்ச்சியடைந்த நாஜிக்கட்சி தீவிரவாதிகள் ஹிட்லருக்கு தெரியாமல் தந்திரமாக செண்பகராமனை விருந்து ஒன்றிற்கு அழைத்து உணவில் மெல்ல கொல்லும் விஷத்தை கலந்து விட்டார்கள்.*

*இதனால் உடல்நலம் பாதித்த செண்பகராமனை லட்சுமிபாய் இத்தாலிக்கு அழைத்துச் சென்று, தீவிர சிகிச்சையளித்து அவருக்கு பிடித்தமான ஜீரிச் நகரில் நண்பரின் விருந்தினர் இல்லத்தில் சிறிது காலம் தங்கி ஓய்வு எடுத்தார்கள்.*

*செண்பகராமனும் சிறிது சிறிதாக பழைய நிலைமைக்குத் திரும்பினார்.*

*மேலும் இந்த நாஜிக்கள் ஹிட்லருக்குத் தெரியாமல் செய்யும் அட்டூழியங்களை அவருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் மாளிகைக்கு காரில் சென்ற செண்பகராமனை நாஜிக்கள் வழிமறித்து கட்டையால் தாக்கி படுகாயம் அடைய வைத்தார்கள்.*

*இந்தச் செய்தியறிந்த லட்சுமி பாய் அவரை பெர்லினில் உள்ள மருத்துவமனையில் சேர்த்து தீவிர சிகிச்சை அளித்தார்.*

*மருத்துவர்கள் சிகிச்சை பலன் அளிக்கவில்லை என்ற "கை"விரித்து விட செண்பகராமன் லட்சுமிபாயை அருகில் அழைத்து கீழ்க்கண்டவாறு கூறினார்.*

"நான் என் தாய்நாடு இந்தியாவுக்கு ஜெர்மனியிலிருந்து இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன், இந்தியக் கொடி பறக்கும் முதல் போர்க்கப்பலில் தான் திரும்புவேன் என்று சபதம் எடுத்துள்ளேன். ஆனால் அது நிறைவேற சாத்தியமில்லை. இருந்தாலும் நான் இறந்த பிறகு, என் அஸ்தியை பத்திரப்படுத்தி வைத்து, இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு அதை இந்தியப் போர்க்கப்பலில் எடுத்து சென்று, திருவனந்தபுரத்தில் என் தாயின் அஸ்தி கரைக்கப்பட்ட 'கரமனை' ஆற்றில் கரைத்து, மீதி அஸ்தியை நாஞ்சில் நாட்டு வயல்களில் தூவுவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்." என்று கூறினார்.

26.05.1934–ல் தன் இறுதி மூச்சை விட்டார். லட்சுமிபாய் பெரும் போராட்டத்திற்கு பின் ஏழு நாட்கள் கழித்து ஹிட்லர் தலையீட்டால் அவர் ஆணைப்படி இந்து சம்பிரதாயப்படி தகனம் செய்யப்பட்டு, அஸ்தியானது ஒரு உலோக கலசத்தில் வைக்கப் பட்டு லட்சுமிபாயிடம் வழங்கப் பட்டது.

இனிமேலும் ஜெர்மனியில் இருப்பது சாத்தியமாகாது என்று 1936ஆம் ஆண்டு லட்சுமிபாய் பம்பாய் வந்தடைந்தார்.

பம்பாய் பங்குச் சந்தையில் ஜெர்மனி யிலிருந்து கொண்டு வந்த ரொக்க பணத்தை முதலீடு செய்து, சிறிது லாபம் ஈட்டி தன் வாழ்க்கையை நடத்தி வந்தார்.






1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி இந்தியா சுதந்திரமடைந்ததும், செண்பகராமன் அஸ்தி கரைப்பதை அரசாங்க விழாவாக எடுக்க, அப்போதைய பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு, தனிப்பட்ட முறையிலும், செண்பகராமன் நினைவு மன்றத்தின் சார்பிலும் பல கடிதங்கள் எழுதியும் எக்காரணத்தினாலோ நேரு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

1966–ல் அன்றைய பிரதமர் இந்திராவின் உத்தரவின் பேரில் செண்பகராமனின் அஸ்தி, பாரத நாட்டின் முதல் போர்க்கப்பலான INS Delhi, மூலமாக பம்பாயிலிருந்து கொச்சி துறை முகத்திற்கு அரசாங்க மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து திருவனந்தபுரம் சென்று செண்பகராமன் உறவினர்கள் முன்னிலையில் கரமனை ஆற்றில் கரைக்கப்பட்டது. மீதம் இருந்த அஸ்தி குமரி முனையில் கரைக்கப் பட்டு, பின்னர் நாஞ்சில் நாட்டு வயல்வெளிகளிலும் ஹெலிகாப்டர் மூலமாகத் தூவப்பட்டது.

32 மாதங்களே கணவருடன் வாழ்ந்த இப்பெண்மணி, 32 வருடங்கள் (1934 – 1966) அவருடைய அஸ்தியுடன் வாழ்ந்த சரித்திரம் நம் பெருமைமிகு பாரதத்தில்தான் சாத்தியம்.

**– பொ.சேதுசேஷன்**
(செண்பகராமனின் பேரன்)
**98400 21231**

# பஹ்றைனில் தமிழ் கலை அமைப்புகள்



நமக்கும் பஹ்றைன் நாட்டிற்கும் ஏகப்பட்ட ஒற்றுமைகள். குறிப்பாக பஹ்றைன் நாடு முத்துத் தீவு என்று அழைக்கப்படும் ஒரு சிறிய வளைகுடா நாடாகும்.

‘முத்துக்குளித்தல்’ என்பது உலகில் சில இடங்களில் மட்டுமே பிரசித்தி பெற்றவை. அதில் பாரசீக வளைகுடாவில் உள்ள ஒன்று பஹ்றைன் மற்றொன்று தமிழ்நாட்டில் உள்ள தூத்துக்குடி. இந்த இரண்டு இடங்களிலும் முத்து குளிப்பது மிக பிரசித்தம்.

**பக்ரைன் பார்க்கலாமா!**



காலப்போக்கில் பஹ்றைனில் 1930இல் எண்ணெய் வளங்கள் கண்டெடுக்கப்பட்ட பிறகு இங்கு கடல் நீர் மாசுபட்டு போனபின் இந்த முத்துக்குளித்தல் தொழில் தேய்ந்து போனது.

பண்டைய காலம் தொட்டு தமிழன் எந்த நாட்டிற்கு செல்கிறானோ அங்கு கலை இலக்கியம் தமிழர் பண்பாடுகளை சுமந்து செல்கிறான்.

அதுபோல இங்கு தமிழ் அமைப்புகள் பல உருவாகின. அதில் முதன்மையாக ‘டாஸ்கா’ மன்றம் உருவானது. அதாவது தமிழில் தமிழ் சமூக மற்றும் கலை இலக்கிய மன்றம். அதன்பின் பாரதி தமிழ்ச் சங்கம், திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம். அன்னை தமிழ் மன்றம் மற்றும் ஒருங்கிணைந்த தமிழர் கூட்டமைப்பு இப்படி என்று தமிழர் அமைப்புகள் விரிந்து கொண்டே செல்கின்றன.

இவற்றின் முக்கியமான செயல்பாடுகள் என்னவென்றால் கலை இலக்கியம் மற்றும் நம்முடைய பண்பாடுகளை இங்கு உள்ள தமிழர்களிடம் கொண்டு சேர்ப்பது மற்றும் தமிழின உணர்வை ஊட்டுவது.

நம்முடைய தமிழ் நாட்டில்



– சொல்வேந்தர் **S.குகநாதன்**
கொள்முதல் மேலாளர் Yateem
ஆக்சிஜன் கம்பெனி
guhawins@gmail.com

உள்ள பிரபல தமிழ் பேச்சாளர்களையும் கொண்டு பட்டிமன்றம் நடத்துவது. கலை இரவு நடத்துவது மற்றும் தமிழ் சொற்பொழிவாளர்களைக் கொண்டு கலை இலக்கியம் சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்துவது முக்கிய சேவையாகும்.

இங்கு மே தினத்தன்று அனைத்து தமிழ் தொழிலாளர்களை ஒன்றிணைத்து அன்று ஒரு நாள் முழுவதும் அவர்களுடன் கலந்துரையாடுவது மற்றும் அறுசுவை உணவு விருந்து வைப்பது என்று தமிழ் அமைப்புகள் செயல்படுகின்றன.

இங்குள்ள தனியார் தொழில் முனைவோர்களைக் கொண்டு வேலைவாய்ப்பு முகாம் அமைத்து தருதல், தமிழ் தொழிலாளர்களின் பிரச்சனைகளைத் தூதரகம் மூலம் கொண்டு சென்று அவர்களுடைய பிரச்சனைக்குத் தீர்வு காண்பது மற்றும் கடவுச்சீட்டு காணாமல் போனால் அதை உரிய முறையில் பெற்றுத்தருவது, ஏழை தொழிலாளர்கள், பொருளாதார ரீதியில் மற்றும் பின்தங்கியவர்களுக்கு மரணம் நேர்ந்துவிட்டால் அவர்களது உடலை இலவசமாக இந்தியாவிற்கு அனுப்பி வைப்பது என்று பல சமூக சேவைகளை நம்முடைய தமிழ் அமைப்புகள் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கின்றன.

கேரள சமாஜம், ஆந்திரா நலசங்கம், தெலுங்கானா சங்கம், கன்னடா சங்கம் மற்றும் இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களின் சங்கங்கள் அவர்களது மாநிலத்தவர்களின் குறைகளைக் கேட்டறிந்து அவர்களுடைய பிரச்சனைகளை தீர்த்து வைப்பதுடன், தத்தமது மாநிலங்களின் தொழிலாளர்களின் நலனை பேணி பாதுகாக்கின்றன.

சத்குரு ஜக்கி வாசுதேவ் நடத்தும் ஈஷா யோக மையம் மற்றும் வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளக்கலை மன்றம். ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் வாழும் கலை மன்றம் மற்றும் சமய சங்கங்களின் சார்பாக சாய்பாபா பக்தர்கள் சங்கம் ,சத்சங்கம், இஸ்கான் எனப்படும் கிருஷ்ண பகவான் அமைப்பு. ஐயப்பா சேவா சங்கம் போன்ற ஆன்மிக அமைப்புகள் உள்ளன.

ஆன்மிக சொற்பொழிவு மற்றும் விழாக் காலங்களில்



அன்னதானம் செய்வது, இந்தியாவிலிருந்து ஆன்மிக குருமார்களை வரவழைத்து அவர்களைக் கௌரவிப்பது அவர்களைக் கொண்டு கருத்தரங்கம் நடத்தி சமய வழியாக மக்களுக்கு நல்ல கருத்துக்களை எடுத்துச் செல்வது இப்படி செயல்பட்டு கொண்டிருக்கின்றன.

தமிழ்நாட்டில் உள்ள பெரிய கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க., நாம் தமிழர் கட்சி போன்ற கட்சிகளின் கிளைகள் இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள திமுக கட்சியின் அறிவுறுத்தலின்படி ஒரு நூலகம் பஹ்ரைனில் அமைக்கப்பட்டு இருக்கிறது.

முக்கியமாக நம்முடைய மனிதவள மேம்பாட்டிற்கான ஒரு தமிழ் அமைப்பு இங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுதான் அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு செயல்படுகின்ற 'டோஸ்ட் மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனல்' எனப்படும் சொல்வேந்தர் மன்றம்.




செந்தமிழ்ச் சொல்வேந்தர் பேரவை, முத்தமிழ் சொல்வேந்தர் மன்றம், பண்பாளர்கள் சொல்வேந்தர் மன்றம் – இந்த 3 மன்றங்களின் குறிக்கோள் என்னவென்று சொன்னால் உறுப்பினர்களின் பேச்சாற்றலையும் மற்றும் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக்கொள்ள ஒரு ஏதுவான சூழலை உருவாக்கித் தருவதுதான். இதன் மூலம் பல தமிழர்களின் பேச்சாற்றலும் தலைமைத்துவப் பண்பும் வளர்ந்திருப்பதை நான் நாம் கண்கூடாகக் காணலாம்.


எப்படி நம்முடைய சிந்து சமவெளி நாகரீகத்தின் மிச்சங்களாக இப்பொழுது உள்ள ஆப்கானிஸ்தான் கொற்கை, தொண்டி, முசிறி என்ற பெயரைவிட்டு வந்திருக்கிறாமோ அதுபோல நம்முடைய தமிழன் வளைகுடா நாட்டில் தன்னுடைய கலை இலக்கியம் மற்றும் அறிவு சார்ந்த விஷயங்களை சுமந்து வந்திருக்கிறான். அந்த சுமையைத் தாங்கும் சுமைதாங்கியாக இந்த பஹ்ரைன் மண்ணை நாங்கள் பயன்படுத்திக் கொண்டிருக் கிறோம்.

இதனால் 'தமிழன் வளைகுடா நாட்டில் இருந்தான் அவனுக்கான அடையாளங்கள் இதெல்லாம்" என்று நாளை வரலாறு சொல்லும்.

# நேசம் கொண்டு தேசம் போற்று







வெளியுறவுக் கொள்கையில் நிச்சயமாக மோடி அரசு வல்லரசு மற்றும் நல்லரசுதான்.

வல்லரசு என்பதற்கு இலக்கணம் சொன்ன தலையங்கம் நூற்றுக்கு நூறு சரிதான். 'மக்களைக் காப்பதே வல்லரசு' என்பதை திருவள்ளுவரும் சொல்லி இருக்கிறார் "உள்ளே இருப்பவர்க்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும், நெருக்கடியான நேரத்தில் உதவக்கூடிய நல்ல வீரர்களையும் உடையதே அரண்" (குரள் 746) என்பதனால் இந்தியா ஒரு வல்லரசுதான்.

அதே நேரத்தில் தலையங்கம் குறிப்பிட்ட உள் நாட்டு பிரச்சினை களுக்கும் ஓரளவுக்குத் தீர்வு கண்டால் தான் நல்லரசாகவும் மாறமுடியும்!

உதாரணத்துக்கு இந்தியா பல மாநிலங்கள், பல மொழிகள், பல கலாச்சார வித்தியாசங்களைக் கொண்டது. அப்படி இருக்க எல்லாக் துறைகளிலும் ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கல்வி, ஒரே தேர்தல், ஒரே ஆட்சிமுறை என்பது மாநில சுயாட்சியை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சியாகவே எண்ணத் தோன்றுகிறது.

**– மகிழ்நன், 94444 61161**

விலைவாசி உயர்வுகள், வேலையில்லா திண்டாட்டங்கள், லஞ்ச, ஊழல்கள், சாதிமதபூசல்கள், அரசியல்வாதிகளின் அட்டகாசங்கள் என உள்நாட்டில் பல்வேறு பிரச்சனைகள் இருந்தாலும் பலநாடுகளின் நிலைமையை ஒப்பிடும்போது, இந்தியாவை ஒரு 'சொர்க்க பூமி' என்றுதான் கூறவேண்டும்.

இந்தியராய் பிறந்ததற்கும் இந்தியாவில் வாழ்ந்து வருவதற்கும் நாம் மிகவும் புன்னியம் செய்திருக்க வேண்டும். பாரதி இன்று உயிருடன் இருந்திருந்தால், "இந்தியன் என்று சொல்லடா, இறுமாப்புடன் தலைநிமிர்ந்து நில்லடா' என்றே பாடியிருப்பார்.

**– கஸ்தூாரி கதிர்வேல்,**
**96299 3933**

தலையங்கம் குறித்த விமர்சனக் கடிதங்கள்

**ரூ.100/-**
**பரிசு**
வழங்குபவர்
**கார்டூனிஸ்ட்**
**ஸ்ரீகாந்த்**



# கடிதங்கள்

**த**ங்களுக்குள் எத்தகைய பகைமை இருந்தபோதும் அந்நியர்க்கு விட்டுக் கொடுக்காமல் இருப்பது தான் இந்தியாவின் பலம். அந்த ஒற்றுமையால் தான் பொருளாதாரத்தில் பல நாடுகள் சிதைந்து தவிக்கும் பொழுதும் இந்தியா தலை நிமிர்ந்து நிற்கிறது.

– **கருமலைத்தமிழாழன்,** ஓசூர்

**ஆ**யுதம் கொண்டு ஆழிப்பது வல்லரசல்ல, பலவித நெருக்கடியிலும் அழிவிலும் மக்களைக் காப்பதே வல்லரசு என்பதை உணர்த்தி, நேசம் கொண்டு தேசம் போற்ற அறிவுறுத்தியுள்ளதும் சிந்தனைக்குரியதே!

– **அறிவரசன்,** திருலோக்கி

**உ**லக அரங்கில் நம்நாடு வல்லரசு ஆகாவிட்டாலும் பரவாயில்லை. உள்ளூர் வல்லூறுகளின் பிடியில் சிக்கி சின்னாபின்னமாகாமல் இருந்தாலே போதுமானது.

– **செல்வராசு,** சிறுமுகை

**ர**ஷியாவுடன் ஒருகை கோர்த்து, அதன் எதிரி உக்ரைனுடனும் அடுத்த கரத்தை நீட்டும், ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு காலுமாகத் திரிசங்கு நிலை நமக்கு நல்லதல்ல. நமது ராஜதந்திரம் ஒரு கட்டத்தில் கேலிக்கூத்திலும் முடியலாம்.

– **ச.கந்தசாமி,** இராசாப்பட்டி

**அ**ருமையான தலையங்கம், முத்தாய்ப்பே சொந்த மண்ணை நேசிக்க மறுக்கும் அந்நிய சக்திகளின் அடிமைகள் என்ற வரிகள் தான்.

– **சுரேஜ்மி,** மஸ்கட்

**மி**கவும் அருமையான தலையங்கம். படிக்கும் போது சந்தோஷமாக இருந்தது. வாழ்க பாரதம்.

– **ராணி பாலகிருஷ்ணன்,** கோவில்பட்டி

**அ**ருமையான தலையங்கம். பிரதமருக்கு யார் தருவார் இந்த அரியாசனம்!. ஜெய் ஹிந்த்!

– **பத்மாமணி,** சென்னை–89

**வா**ஞ்சிநாதனுக்கு மரியாதை செலுத்திய தேனி விஸ்வநாதனின் தேசபக்திக்கு நன்றி.

– **ச.கந்தசாமி,** சித்தலங்கரை

‘**கா**ஷ்மீர் பைல்ஸ்’ படம் குறித்த விமர்சனம் எத்தனை உண்மைகளை வெளியே கொண்டு வந்துள்ளது. தெ. கணேசனுக்குப் பாராட்டுகள்.

– **ஏகாம்பரம்,** வெள்ளேரி

**அ**ப்பாடா.. உரத்தசிந்தனையிலும் ஜோக்ஸ் பகுதி வந்தாச்சு. பரிசும் கொடுப்பது இன்னும் சிறப்பு.

– **தீபம் திருமலை,** சென்னை 42


**ஞா**னசூன்யம் பதில்களில் மனைவியை கையில் போட்டுக் கொள்ள சொல்லும் ஐடியாக்கள் அருமை.

– **ஷியாமளா,** பெங்களூரு

# கடிதங்கள்

கோவா உலகத் திரைப்பட விழா தொடர் மூலம் பல தரமான படங்களைக் காட்சி படுத்தும் இயக்குநர் பிரபாகருக்கு நன்றி. இத்தொடர் முயற்சி உரத்தசிந்தனைக்கு மற்றொரு மகுடம்.

**– சரஸ்வதி நாராயணன்,** புதுச்சேரி




சாதாரண நடிகர்தான் டெல்லி கணேஷ் என்று நினைத்து கொண்டிருந்த என்னை போன்ற வாசகர்களுக்கு அவரின் திறமையை வெளியிட்ட நம் உரத்தசிந்தனை இதழுக்கு பல கோடி நன்றிகள்.

**– பச்சமுத்து,** சென்னை–20

ஞானசூன்யம் பதில்கள் வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. அபாரம்.

**– கிறிஸ் நித்யானந்தம்,** சென்னை

மதுரை கல்யாண சுந்தரம் பற்றிய செய்தி மிகவும் அருமை.

**– வைத்தியநாதன்,** வேப்பம்பட்டு

'பசி' என்னும் உணர்ச்சி மனிதர்களை என்னபாடு படுத்துகிறது என்பதை ஆழமாகவும். அழுத்தமாகவும் பதிவு செய்துள்ள தாமோதரனின் கதை சிறப்பானது.

**– மு.இராமு,** திருச்சி

'பசி' சிறுகதையில் பணியில் இருக்கிறவர்கள் படுகின்ற அவஸ்தையையும், ஏற்படுகின்ற கோபத்தையும் தீர்க்கும் வடிகாலாக அனைத்தையும் எடுத்துக் காட்டியது.

**– இரா.மோகன்ராஜ்,** விழுப்புரம்

நூலகத்தில் நம் இதழினை ஒதுக்கியது வேதனைக்குரியது. வாசிப்பை நேசிப்போம் என்கிறார்கள். எப்படி வாசிப்பு வளரும்?

**– நல.ஞானபண்டிதன்,** திருப்புவனம்பதுார்

சில ஆண்டுகளுக்கு முன் உரத்தசிந்தனை கூட்டத்தில் திரையுலகம் பற்றி ஜாலியாக கைகளில் தாளம்போட்டு ஆடி, பாடி, பேசியது எல்லாம் நினைவுக்கு வந்தது.

**– இரா.ரெங்கசாமி,** வடுகப்பட்டி

அட்டைப் படத்தில் சிரித்த முகத்துடன் காணப்படும் திரு. டெல்லி கணேஷ் பற்றிய சிறப்பிதழ், அவரைப் போலவே 'கலகல'வென இருந்தது.

**– வே.ந.கதிர்வேல்,** காட்பாடி

திரைப்பட நடிகர் டெல்லி கணேஷ் பற்றிய அற்புதமான இதழை எனது புத்தக அலமாரியில் பத்திரப்படுத்தி விட்டேன்!!

**– எல்.இரவி,** செ.புதுார்

டெல்லி கணேஷ் என்ற மனிதரில் புனிதரை அறிந்துகொள்ளச் செய்த உரத்தசிந்தனை இதழுக்கு மிகவும் நன்றி!

**– இராம.குருமூர்த்தி,** சென்னை




# பக்ரைன் நாட்டில் தமிழ் பண்பாடு

**பக்ரைன் பார்க்கலாமா!**

பக்ரைன் எனும் நாடு சென்னையை விட சற்று பெரிதான நாடு. 2020ன் கணக்குப்படி ஏறத்தாழ 15 லட்சம் ஜனத்தொகையை கொண்ட நாடு.

இந்த பக்ரைன் நாட்டில் 53.2% அரபியர்கள் (அதில் 47.4% பக்ரைனிகள் மற்றும் 5.8% மற்ற தேச அராபியர்) 43.4% ஆசிய மக்கள், 1.4% ஆப்பிரிக்கர்கள், 1.1% அமெரிக்கர்கள், 0.8% ஐரோப்பியர்கள், 0.1% மற்றவர்கள். இந்த பக்ரைன் நாட்டில் கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள்.

பக்ரைன் நாட்டை பற்றிய பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஒரு கவிஞன் எழுதியதை இந்த நாட்டு அருங்காட்சியகத்தில் பதித்து வைத்திருக்கிறார்கள்.



இது புண்ணியம் செய்த புனித பூமி

இங்கே அண்டங்காக்கைகள் கரைவதில்லை

சகுனங்களை காட்டுகின்ற பறவைகள் தீய நிமித்தங்களை காட்டுவதில்லை

ஆட்டுக்குட்டிகளை, வல்லூறுகளும் கழுகுகளும் கொத்திக்கொண்டு செல்வதில்லை

புறாக்கள் கண்களை மூடி தலை மறைத்து தூங்குவதில்லை

சிங்கங்கள் மனிதர்களை கொல்வதில்லை

காட்டு ஓநாய், இங்குள்ள கொடிய விலங்குகள் குழந்தைகளை கடித்துத் தின்னுவதில்லை

இங்குள்ள மக்கள் தலைவலி கண்வலி என்று சலித்துக் கொள்வதில்லை

நான் கிழவன் / கிழவி ஆகிவிட்டேன் என்று இங்கு குறைபட்டுக் கொள்வதில்லை

இது பெண்களுக்கு மிகமிக பாதுகாப்பான தேசம்

எங்கள் நாட்டு சுவர்கள் அழுகுரலை கேட்டதே இல்லை

– இந்த வரிகளில் குறிப்பிட்டபடி இது மிகவும் பாதுகாப்பான தேசம். 2011ல் இந்த தேசம் ஒரு மிகப்பெரிய



- கா.பொன்சங்கரபாண்டியன்
பக்ரைன்/குவைத்
சொல்வேந்தர் மன்றங்கள்
greatpsp@yahoo.com

சவாலை சந்தித்தபோதும், உள்நாட்டு போராட்டங்களை கண்ட போதும் ஒரு நல்ல விஷயம் என்னவென்றால், இந்தியர்களுக்குக் கிடைத்த மரியாதை. போராட்டக்காரர்களும் சரி, அதை ஒடுக்க வந்த ராணுவமும் சரி, இந்திய பிரஜைகளைப் பார்த்தால் அவர்களை நிறுத்தவில்லை, எந்த தொந்தரவும் செய்யவில்லை, அந்த அளவுக்கு நம் மேல் மரியாதை வைத்துள்ளனர்.

## தமிழர்கள் வாழ்வியல்

இங்குள்ள சுமார் ஒன்றரை லட்சம் தமிழர்களில், நிறைய சதவீதத்தினரை நாம் மிக பெரிய பொறுப்புகளில் மிக நல்ல நிறுவனங்களில் பார்க்கலாம்.

நிறைய தமிழ் மக்கள் இங்கு தொழில் நிறுவி, வெற்றிகரமாக நடத்தி வருகிறார்கள். குறிப்பாக சில நிறுவனங்களில் 90% மேல் தமிழர்களுக்கே வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை கொடுத்து வருகிறார்கள். கூலித்தொழிலாளர் முதல் தலைமை செயல் அதிகாரிகள் வரை எல்லா நிலைகளிலும் தமிழ் மக்களை நாம் இங்கு சர்வசாதாரணமாக பார்க்கலாம். இங்குள்ள மளிகை கடைக்கோ, அல்லது மொபைல் போன் கடைக்கோ சென்றால் தயங்காமல் “இது என்ன விலை” என்று தமிழில் கேட்கலாம்.

## தமிழர் சமய வழிபாடு

இந்த பக்ரைன் நாட்டில் கோயில்களும், சர்ச்சுகளும், மிக அதிகம். கோபுரம் வைத்து, கலசம் வைத்து நிறுவப்பட்ட கோயில்கள் இல்லாத போதும், இங்குள்ள கோயில்கள் வில்லா போன்ற அமைப்பில் உள்ள தனி வீடுகளில் உள்ளே சத்தமில்லாமல் இயங்கும். கிட்டத்தட்ட 25 கோயில்கள் இங்கு உண்டு. சில கோயில்கள் தொழிலாளர்கள் கூட்டமாக தங்கும் காம்பௌண்டுக்குள் இயங்கும்.

கிறிஸ்த்துவ மத ஆலயங்கள் இங்கு கிட்டத்தட்ட 200க்கும் மேல் உண்டு. மசூதிகள் கிட்டத்தட்ட 4 தெருவுக்கு ஒன்று என்று உண்டு. எனவே இங்குள்ள தமிழர்கள் தங்கள் இஷ்ட தெய்வங்களை வணங்குவதற்கு போதுமான வசதிகள் உண்டு.

தமிழர் உணவு வகைகள் இங்கு தாராளமாக கிடைக்கிறது. தமிழ் நாட்டு உணவு விடுதிகள் இங்கே உண்டு. ஏன் தமிழ்நாட்டில் தயாராகும் மரச்செக்கு எண்ணெய்யும் கூட இங்கே கிடைக்கிறது.

## தமிழர் பண்பாடு

இந்த பக்ரைன் நாட்டில் தமிழர் களால் பொங்கல் பண்டிகை வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. வெள்ளிக்கிழமைகளில் தொடர்ந்து ஆறு வாரங்கள் வரை ஒவ்வொரு விதமாக கொண்டாடப்படுகிறது.

மண் பானையில் பொங்கல் பொங்க வைத்து, குளவி போட்டு, கும்மி அடித்து கும்மாளமிட்டு குதூகலமாகக் கொண்டாடப் படுகிறது.

மேலும் உறியடித்தல், கயிறு இழுத்தல், பறை அடித்தல், சடுகுடு ஆட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், புலியாட்டம், கரகாட்டம் என தமிழர் பண்பாட்டின் அனைத்து அம்சங்களையும் நிகழ்த்தி வெகு மகிழ்ச்சியுடன் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. 15 வருடங்களாக இந்த கொண்டாட்டங்களை நான் கண்டு மகிழ்ந்து வருகிறேன்.

## தமிழ் மொழி வளர்ப்பு

பக்ரைன் தேசத்தில் தமிழ் பாட திட்டம் எந்தப் பள்ளியிலும் கிடையாது. இங்கு வளரும் குழந்தைகள் தமிழ் மொழி பயிற்சியில் வெகு தொலைவில் இருப்பதால் நுனி நாக்கு ஆங்கிலம் தெறித்து சிதறும் நிலையில் வளர்கிறார்கள் என்பது வேதனைக்குரிய உண்மை.

நிறைய தமிழ் ஆர்வலர்கள் மற்றும் தமிழ் அமைப்புகள், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தமிழ் சிறுவர்களுக்கு தன்னார்வத்துடன் எந்த கட்டணமும் வசூலிக்காமல், இலவசமாக தமிழ் மொழியை கற்றுத் தருகிறார்கள்.

பக்ரைனில் உள்ள சில தமிழ்



சேக்ரட் ஹார்ட் சர்ச், மனாமா

அமைப்புகள் சிறுவர்களுக்கான தமிழ் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, கடிதப் போட்டி, பாட்டுப் போட்டி, என பல போட்டிகள் நடத்தி தமிழ் சிறுவர்களிடம் தமிழின் திறமையை வளர்த்து, தமிழ் பேச, பாட, எழுத, படிக்க என ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி வருகின்றனர்.

பக்ரைன் நாட்டில் 3 சொல்வேந்தர் அமைப்புகள் இயங்குகின்றன. இந்த அமைப்புகள் தமிழர்களின் பேச்சாற்றலையும் தலைமைப் பண்புகளையும் வளர்த்து, சபைக் கூச்சம் தகர்த்து, தன்னம்பிக்கையை வளர்த்து தமிழில் தயக்கமின்றி பேச பயிற்சி கொடுக்கிறார்கள். வருடந்தோறும் பேச்சுப்போட்டிகள் பல நடத்தி, பட்டிமன்றம், பேச்சு மன்றம், வழக்காடு மன்றம், கருத்தரங்கம், கவியரங்கம்,



ஸ்ரீநாத்ஜி ஆலயம்



கிருஷ்ணர் ஆலயம்



ஆய்வரங்கம் என பல தமிழ் சுவை நிகழ்ச்சிகளை நடத்தி தமிழ் பேச்சாளர்களை உற்சாகப்படுத்தி வருகின்றனர்.

## தமிழ் அமைப்புகள்

தமிழ் சங்கங்கள், தமிழ் நற்பணி மன்றங்கள், தமிழ் சமூக சேவை மையங்கள், தமிழ் கலாச்சார மன்றம், தமிழ் கற்று தரும் கூடங்கள், தமிழ் நாட்டு கட்சிகளின் கிளைகள், தமிழ் மொழியில் இயங்கும் மத அமைப்புகள், தமிழ் சொல்வேந்தர் அமைப்புகள் எனப் பல்வேறு வடிவில் பல்வேறு மக்களை அங்கமாக கொண்ட தமிழ் அமைப்புகள் இங்கு ஏராளம் உண்டு. இந்த அமைப்புகள் பலவிதமான சேவைகளைச் சிறப்பாக செய்கின்றன.

## தொழிலாளர் நலன்

ஒவ்வொரு உழைப்பாளர் தினத்திற்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவம், இலவச ஆலோசனை, கலை நிகழ்ச்சிகள், விருந்து என மிகப்பெரிய கொண்டாட்டங்கள் கண்டிப்பாக உண்டு. இந்நிகழ்ச்சி களுக்கு பக்ரைன் நாட்டின் தொழிலாளர் நல அமைச்சர், மற்றும் துறை சார்ந்த தலைவர்கள் வருகை தந்து உழைப்பாளர்களை ஊக்குவிப்பது வழக்கம்.

எண்ணிக்கையில் நிறைந்த பல்வேறு தமிழ் அமைப்புகள் இந்த பக்ரைன் தேசத்தில் இருந்தாலும், அனைத்து அமைப்புகளின் உறுப்பினர்களுக்குள் ஒரு நல்ல நேசத்தையும், ஒற்றுமையையும், தமிழ் உணர்வையும் இங்கே கண்கூடாக காணமுடியும் என்பது பாராட்டப் பட வேண்டிய விஷயமாகும்.

உதாரணமாக உலகப்புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு புரட்சி தமிழ் நாட்டில் ஆரம்பிப்பதற்கு சில மாதங்கள் முன்பே இந்த பக்ரைன் நாட்டில் உள்ள அனைத்து தமிழ் அமைப்புகளும் ஒற்றுமையுடன் ஒருங்கிணைந்து ஒரு மாபெரும் ஜல்லிக்கட்டு கருத்தரங்கம் நடத்தியது இங்குள்ள தமிழர்களின் வரலாற்றில் பொன்னேட்டில் பதிந்துள்ள ஒரு நிகழ்வு.

'பக்ரைனி' எனப்படும் இந்த மண்ணின் மைந்தர்கள் எப்போதுமே தமிழர்கள் மீது தனி பாசமும், நல்ல நம்பிக்கையும், மாசற்ற மரியாதையும், வைத்திருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

சில மாதங்களுக்கு முன்பு ஒரு நிகழ்ச்சியில் இந்நாட்டைச் சேர்ந்த திரு அலி ஷபாஸ் அலி எனும் 7 நாடுகளை உள்ளடக்கிய டோஸ்ட்மாஸ்டர்ஸ் இன் மாவட்ட தலைவர், "தமிழர்கள் தன்னிகரில்லா தலைமைப்பண்புகளையும், நேர்மையும், சிறந்த மதிநுட்பமும் மிக்கவர்கள்" என்று சில எடுத்துக்காட்டுகளுடன் பேசியது தமிழர்களாகிய நாமெல்லாம் பெருமைப்பட வேண்டிய ஒன்று. ■


# பக்ரைனில் தமிழ் ஆ

'திரைகடலோடி திரவியம் தேடு' என்ற புலவன் வாக்குப்படி திரவியம் தேடிய தமிழர்கள், அழகான இந்த முத்து தீவில் அரை நூற்றாண்டுக்கு மேல் தேடிய வாழ்வை தொடங்கினார்கள்.

அழகான வாழ்வை வாழ்வதில் எத்தனையோ நாடுகளுக்கு மத்தியில் தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திய நாடுகளில் முன்னணியில் இருப்பது பகரின் நாடு. இத்தகைய சிறப்புடைய பகரின் நாட்டில் நம் தமிழர்களின் 'தமிழோசை' இந்த நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் என்றென்றும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இயல் – இசை – நாடகம் மூன்றிலும் தமிழ் ஆர்வலர்களால் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்து கொண்டு வருகிறது.

இந்த பகரின் மண் எத்தனையோ நல்ல பல சிறந்த தமிழ் ஆளுமைகளை கொண்டுள்ளது. அவற்றில் சில முக்கிய ஆளுமைகளை பற்றி இங்கே காணலாம்...

திரு. **பொன்னுசாமி**



பக்ரைன் நாட்டில் முதன் முதலாக தமிழ் மன்றம் நிறுவியவர். பக்ரைன் தமிழர்களுக்காக ஆங்கில டோஸ்ட்மாஸ்டர்ஸ் துவங்கியவர். தொழிலதிபர், தமிழ் ஆர்வலர், தமிழர்களுக்காக சேவை செய்பவர்

திரு. **முகமது ஹுசைன் மாலிம்**



பாரதி தமிழ் சங்கம் நிறுவி தமிழ்ச் சேவை செய்து வருபவர். வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறையின் பக்ரைன் பொறுப்பாளர். தொழிலதிபர், தமிழ் ஆர்வலர், தமிழர்களுக்காக சேவை செய்பவர்

**பக்ரைன் பார்க்கலாமா!**




திரு **முகமது சலீம்**



பக்ரைன் குவைத் உள்ளிட்ட மாவட்டம் 20ன், 145 மன்றங்களுக்கான மாவட்ட இயக்குனராக இருந்தவர். தமிழில் சொல்வேந்தர் மன்றம் துவங்க முதல் வித்திட்டவர். ஆங்கில பேச்சாளர், பயிற்சியாளர் மற்றும் மேன்மைமிகு சொல்வேந்தர்.

# ஆளுமைகள்

– கவிஞர் லட்சுமிநாதன்
99620 25367





திரு. **பாலமுருகன்**

முத்தமிழ் சொல்வேந்தர் மன்ற தலைவர். திறன் மிகு தமிழ் பேச்சாளர். கவிஞர், பட்டிமன்ற நடுவர், முத்தமிழ் வித்தகர். தொழிலதிபர் மற்றும் சொல்வேந்தர்.

திரு **செந்தில்**



பக்ரைன் இந்தியன் கிளப்பின் பொழுதுபோக்கு செயலாளர். சிறந்த நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர், பேச்சாளர், பாடகர், நிகழ்ச்சி வடிவமைப்பாளர், தொகுப்பாளர் மற்றும் சமூக ஆர்வலர்.



திருமதி **ஹன்சுல் கனி**

நடன ஆசிரியை, நடன நிகழ்ச்சி வடிவமைப்பாளர், இவரிடம் நூற்றுக்கணக்கான மாணவிகள் பரதம் பயின்று அரங்கேற்றம் நடத்தி உள்ளனர்

திரு. **பொன் சங்கரபாண்டியன்**



பக்ரைன் மற்றும் குவைத் நாடுகளில் உள்ள தமிழ் சொல்வேந்தர் அமைப்புகளின் ஆலோசகர், வழிகாட்டி மற்றும் மதியுரையாளர். நூற்றுக்கணக்கான பிரம்மாண்ட நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பாளர், எழுத்தாளர் மற்றும் மேன்மைமிகு சொல்வேந்தர்.



திரு. **சி.பாலசுப்ரமணியம்**

தமிழ் ஆர்வலர், பேச்சாளர், கதை சொல்லி, சமூக ஊடகங்களில் சிறந்த எழுத்தாளர், பாடகர், தமிழ் ஆய்வாளர், ஆன்மிகவாதி, பட்டிமன்ற பேச்சாளர், வானொலி தொகுப்பாளராக இருந்தவர், முத்தமிழ் வித்தகர் மற்றும் மூத்த சொல்வேந்தர்



திருமதி **பிரேமலதா**

தமிழ் ஆர்வலர், இந்தியன் பள்ளி நிர்வாகி, பேச்சாளர் மற்றும் மேன்மைமிகு சொல்வேந்தர்.

# பக்ரைனில் தமிழ் ஆளுமைகள்



### திரு. **மருது பாண்டியன்**

செந்தமிழ் சொல்வேந்தர் மன்ற தலைவர். பக்ரைன் குவைத் தமிழ் சொல்வேந்தர் மன்றங்களின் தலைமை ஒருங்கிணைப்பாளர். மனவளக்கலை நிபுணர், சிறந்த பேச்சாளர் மற்றும் சொல்வேந்தர்.



### திரு. **அப்துல் கையும்**

பாரதி தமிழ் சங்க நிர்வாகி. கவிஞர், நகைச்சுவை பேச்சாளர், நிகழ்ச்சி தொகுப்பாளர், எழுத்தாளர்.



### திரு. **ருத்ரமூர்த்தி**

தமிழர்களின் நலனுக்காக தன்னையே அர்ப்பணித்து கொண்ட சமூக சேவகர். தமிழர்களின் பல்வேறு பிரச்னைகளுக்காக மருத்துவ உதவி, சட்ட உதவி, பொருளீட்டும் உதவி செய்து வருபவர். இறைவனடி சேர்ந்த தமிழர்களை அவர்கள் குடும்பத்தினரிடம் சேர்க்கும் சிறந்த பணியை செய்து கொண்டு இருக்கிறார்.



### திருமதி **ஷோபனா சிவா**

தமிழ் இசை பாடகி, நிகழ்ச்சி தொகுப்பாளினி, குழந்தைகளுக்கான இசை, நடனம், நாடகம் வடிவமைத்து இயக்குபவர், பேச்சாளர்.



### திரு **குகநாதன்**

சிறந்த தமிழ் பேச்சாளர், தமிழ் ஆய்வாளர், முற்போக்கு சிந்தனையாளர், தமிழில் அரிய பல தகவல்களை சேகரித்து தரும் வித்தகர், தமிழ் ஆர்வலர் மற்றும் மேன்மைமிகு சொல்வேந்தர்.



### செல்வி. **ஷினாஸ் சுல்தானா**

பக்ரைன் வானொலி மற்றும் வலையொளியின் செய்தி வாசிப்பாளர். ஆங்கிலம் மற்றும் தமிழ் புலமை கொண்ட மிக சிறந்த பேச்சாளர். பல முன்னணி பட்டிமன்ற தலைமைகளுடன் கலந்து கொண்ட பட்டிமன்ற பேச்சாளர், நிகழ்ச்சி தொகுப்பாளினி, தமிழ் ஆர்வலர் மற்றும் இளம் சொல்வேந்தர்.





# உறவில் திருமணமா?




## தேன்குரல்

ஆஸ்திரேலியாவில் ‘லோரிகீட்’ என்ற பறவை இனம் உள்ளது. இப்பறவை எழுப்பும் ஒலி வெகு தொலைவுக்கு கேட்குமாம். இப்பறவை ஒரு வகையான மலரில் இருந்து பருகும் தேன்தான் இத்தனை வலுவான குரல் எழுப்பும் ஆற்றலைத் தருகிறதாம்.

## சக்கரம்

மெசபடோமியா நாகரிகத்தில் கி.மு.3500வது ஆண்டில்தான் சக்கரம் கண்டுபிடிக்கப் பட்டதாகக் கருதப்படுகிறது. சக்கரம் கண்டு பிடிக்கப்பட்டது என்பதே அறிவியல் நாகரிக வளர்ச்சியில் ஒரு மைல்கல் ஆனது. முதலில் சக்கரம் மண்பானை செய்வதற்கே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அதன்பின் 300 ஆண்டுகளுக்குப் பிறகு சக்கரங்களைப் பயன்படுத்தி ஒரு பொருளை வேறு இடத்துக்குக் கொண்டு செல்ல முடியும் என்பதைக் கண்டறிந்தனர். கி.மு. 2000ஆம் ஆண் டில் எகிப்தில் சக்கரங்கள் கொண்ட தேர் பயன்படுத்தப்பட்டதற்கான தொல்லியல் ஆதாரங்கள் உள்ளன.



## டவுன் சிண்ட்ரோம்



மார்ச் 21 அன்று ‘டவுன் சிண்ட்ரோம்’ தினமாக கொண்டாடப்பட்டது. டவுன் சிண்ட் ரோம் நோய் என்பது மரபணு குறைபாட்டு நோயாகும். சாதாரணமாக 23 ஜோடி குரோமோசோம்களுடன் குழந்தைகள் பிறக்கும். ஆனால் 21ஆவது குரோமோசோமில் 2க்குப் பதிலாக 3 குரோமோசோம்கள் இருந்தால் ‘டவுன் சிண்ட்ரோம்’ என்ற மரபணு குறைபாட்டு நோயாகிவிடும். ஆயிரத்தில் ஒரு குழந்தைக்கு இப்படி ஏற்படலாம். இதனை குணப்படுத்த சிகிச்சை கிடையாது. இக்குறைபாட்டுக் குழந்தைகளுக்கு சிந்தனைத்திறன், உடல் வளர்ச்சி போன்றவை சீராக இராது. விழிப்புணர்வு மூலமே இக்குழந்தைகள் வாழ்வியலை மேம்படுத்த முடியும். தக்க பயிற்சி, பராமரிப்பு அவசியம். தாமதமான திருமணம், நெருங்கிய உறவில் திருமணம் போன்றவை இக்குறைபாட்டுடன் குழந்தை பிறக்கக் காரணங்கள் ஆகும்.

# பக்ரைனின் தமிழ் கலைஞர்களை உலகத்தோடு இணைக்கும் உரத்தசிந்தனையாளர்

# பொன்.சங்கரபாண்டியன்



சிவகாசியைச் சேர்ந்த பொன். சங்கரபாண்டியன் தற்போது பக்ரைனில் ஒரு எண்ணெய் நிறுவனத்தில் ‘சர்வதேச கொள்முதல் மேலாளராக’ பணிபுரிபவர்.

தமிழ் சங்கம் மூலம் பக்ரைன் வாழ் தமிழ் குழந்தைகளுக்குப் பேச்சுப்போட்டிகள், கதை, கட்டுரை, கலை, இசை, நடனப்போட்டிகள் எனப் பிரம்மாண்டமான நிகழ்ச்சிகள் நடத்தி குழந்தைகளை ஊக்குவித்தவர் பக்ரைன் நாட்டில் பல கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்தியவர்

பொருளாளர் உலகத்தமிழர்கள் (இணையவழி) பேரவை, பக்ரைன் செந்தமிழ் சொல்வேந்தர் பேரவையின் புரவலர், பக்ரைன் முத்தமிழ் சொல்வேந்தர் மன்றத்தின் வழிகாட்டி, குவைத் பாலைவன சொல்வேந்தர் பேரவையின் மதியுரையாளர்

**பக்ரைன் பார்க்கலாமா!**

இந்திய பேனா நண்பர்கள் பேரவையின் பஹ்ரைன் அமைப்பாளர், வளைகுடா தமிழ்ச் சங்க நிர்வாகி.

சென்னை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் அகாடமியின் இயக்குனர். எனப் பல பொறுப்புகளை நிர்வகிக்கும் சிறந்த மனிதவள செயல்வீரர் இவர்.

படப்பை பழனி தற்காப்பு கலை பயிற்சி மைய ஆலோசகரான இவர் Goju-Ryu கராத்தே வீரரும் கூட.

மேன்மைமிகு சொல்வேந்தர் பட்டத்தை அடைந்த இவர், பக்ரைன் நாட்டில் 3 தமிழ் சொல்வேந்தர் அமைப்புகள் துவங்க முக்கியக் காரணமாக இருந்தவர். மற்றும் 2 ஆங்கில சொல்வேந்தர் மன்றங்களும் அரபிக் சொல்வேந்தர் மன்றமும் தொடங்கியவர்.

2019–20 ஆண்டின் மாவட்டம் 20, கோட்டம் D இயக்குனராக தன் 20 மன்றங்களையும் வெற்றி பெறச்செய்து உலக சாதனை நிகழ்த்தியவர்.

பக்ரைன் குவைத் நாடுகளை சார்ந்த மாவட்டம் 20ல் உள்ள தமிழ் சொல்வேந்தர் அமைப்புகளின் தலைமை ஒருங்கிணைப்பாளர். (2020–21) சர்வதேச toastmasters அமைப்பால் நியமிக்கப்பட்ட தமிழ் மொழி பெயர்ப்பாளர்.

தமிழ் உறவுகள் தங்கள் பேச்சாற்றலையும் தலைமைப் பண்புகளையும் தன்னம்பிக்கையையும்



வளர்த்துக் கொள்ளும் விதமாக 500+ நிகழ்ச்சிகளும், பயிற்சி பட்டறைகளும் நடத்தி வருபவர். உலகத்தமிழ் ஆளுமைகளுடன் இணைந்து பல சர்வதேச கருத்தரங்கம், பட்டிமன்றம், கவியரங்கம், ஆய்வரங்கம், எனப் பல தமிழ் நிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டிருப்பவர்.

மேன்மைமிகு சொல்வேந்தர் விருது, சாதனைத் தமிழன் விருது, சிறந்த தமிழ் ஆளுமை விருது, புலம் பெயர் தமிழ் சான்றோர் விருது, சிறந்த கலைச்சுடர் விருது, சிறந்த வாழ்நாள் சாதனையாளர் விருது போன்ற பல விருதுகளை பெற்றிருக்கும் பெருமைக்குரியவர்.

உலகத் தமிழ் அமைப்புகளுடன் சிறப்பு நிகழ்ச்சிகள் 50 நடத்தியும், பன்னாட்டு கருதரங்கங்களில் சிறப்புரை நிகழ்த்தியும், தமிழுக்குச் சேவை செய்வர்.

கல்விச் சேவை, பேரிடர் கால பேருதவிகள், சமூக நல பணிகள், கலை மற்றும் இலக்கியப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்.

பேரிடர் காலத்தில் உரத்தசிந்தனை அமைப்புடன் இணைந்து பாரதி உலா உட்பட பல நிகழ்ச்சிகளை அமைத்து தந்தவர். தில்லி கலை இலக்கிய பேரவையுடன் இணைந்து கடந்த 2 ஆண்டுகளாக தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்தி பக்ரைனில் உள்ள பேச்சாளர்களையும் பாடகர் களையும் வெளிக் கொண்டு வந்த பெருமைக்குரிய உரத்தசிந்தனையாளர். இவரின் தமிழ்த் தொண்டைப் பாராட்டுவோம். greatpsp@yahoo.com

# அவ்வை சண்முகம் 110 ஆவது பிறந்த நாள் விழா



சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றத்தின் சார்பில் தமிழ் நாடக மேதை பத்மஸ்ரீ அவ்வை டி.கே.சண்முகம் அவர்களின் 110ஆவது பிறந்தநாள் விழா நடைபெற்றது. நீயரசர் அரங்கமகாதேவன் விழா சிறப்பு மலரினை வெளியிட்டு சான்றோர்களுக்கு விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார். தொழிலதிபர் நல்லி குப்புசாமி செட்டியார், அரிமா ஜி.அணிலால் ஆகியோர் மலரின் படிகளைப் பெற்றுச் சிறப்பித்தனர். முனைவர் கரு.நாகராசன் சிறப்புரையாற்றினார். மன்றத் தலைவர் டி.கே.எஸ். கலைவாணன் மற்றும் மன்றத் துனைச் செயலாளர் டி.கே.எஸ்.புகழேந்தி ஆகியோர் படத்தில் உள்ளனர்.




# ஞானசூன்யம் பதில்கள்

**ஆசை, பேராசை இரண்டுக்கும் என்ன வித்தியாசம் ?**

**ச .ஜான் ரவி 99445 18127**

இந்தக் கேள்வி பிரசுரமாகணும்னு நினைப்பது ஆசை. ஆனால் முதல் பரிசு கிடைக்கணும் நினைப்பது பேராசை ( சும்மா. ஜோக்குதான் பிரதர்)

ஆசை என்பது இயல்பு. பேராசை என்பது இயல்பை மீறும் வெறி.

ஆசை அதை அடைவதற்கான வழிகளைத் தேடும் பேராசை. கண்மூடித்தனமாய் மாறி இருக்கும் வழிகளையெல்லாம் தொலைக்கும்.



ஆசையாய் தொடங்குவது எல்லாம் பேராசையால் முடிவுக்கு வந்து விடுவது உலக நியதி. (இதுக்கு மேலே என்னிடம் எதிர்பார்ப்பது உங்களின் பேராசை)

**பிச்சை எடுப்பதும் குற்றம் .. பிச்சை போடுவதும் குற்றம் என்று அரசு சட்டம் இயற்றினால் .....?**

**டி.வின்சென்ட்96006 49283**


நம் நாட்டில் தேர்தலே நடக்காது. ஆம்! இலவசங்களைப் பிச்சை போட்டு வாக்குகளுக்காக கையேந்துவது தானே தேர்தல். அதனால் நம் தேசத்தில் அந்த சட்டம் இயற்ற வாய்ப்பேயில்லை.

**● பல்கலைக்கழகங்களில், துணை வேந்தர்களை. நியமிக்கும் அதிகாரம் மாநில அரசின் கைகளுக்க்கு. வேண்டும்!!..என்ற. தமிழக. அரசின் சட்ட திருத்த. மசோதா பற்றி?.**

**கே.ஆர்.ஜி.ஸ்ரீராமன் 9972466443**

முன் யோசனையில்லாத, முட்டாள்தனமான முடிவு. கேட்டால் இதுதான் பகுத்தறிவு, பகலறிவு என்று முழங்குவார்கள்.

ஏற்கனவே ஜெயலலிதா முதல்வராக இருந்த போதே முயற்சித்து மூக்குடைபட்ட முயற்சிதான் இது



துணைவேந்தர் பதவி கட்சி போடும் பிச்சையாக மாறிவிடும் கேவலத்தை வேறு நாம் பார்க்க வேண்டுமா?

'ஒரே நாடு ஒரே கல்வி' என்ற தொலைநோக்குடன் சர்வதேசத் தரத்துக்குக் கல்வியைக் கொண்டு செல்ல மத்திய அரசு முயற்சிக்கையில், இது போன்ற குறுகிய சிந்தனை மாணவர்களின் எதிர்காலத்தை இருட்டாக்கி விடும்.

மத்திய அரசின் பல்கலைக்கழக நிதியிலிருந்து University grants commission சலுகை, சம்பளம் மற்றும் வசதிகளை நிராகரித்து விட்டு, மத்திய அரசின் அங்கீகாரம் இங்கு பெறும் பட்டங்களுக்குத் தேவையில்லை என்று நேர்படத் தெளிவுடன் அறிவித்துவிட்டு. மத்திய பல்கலைக் கழகத்துடன் எங்களுக்கு தொடர்பில்லை என்று நெஞ்சு நிமிர்த்தி சொல்லிவிட்டு மாநில அரசு எத்தனைப் பல்கலைக்கழகங்களை வேண்டுமானாலும் கட்டி, 38ஆவது வட்டச் செயலாளரையோ, அமைச்சர்களின் அடிவருடிகளையோ துணைவேந்தர்களாக நியமித்துக் கொள்ளலாமே?

ஆளுநரின் மேலுள்ள வெறுப்பின் வெளிப்பாடு இது. இதைவிட ஒரு படி மேலே போய், நாங்கள் சிபாரிசு செய்பவர்களில் இருந்துதான் மாநில ஆளுநர் தேர்வு செய்யப் பட வேண்டும் என்றும் பேசுவதாகக் கேள்வி. *(மாணவர்களுடன் எதிர்காலத்தை அஸ்தமனமாக்காதீர்கள் ப்ளீஸ் ப்ளீஸ்)*

**■ பத்திரிகைத்தொழில் லாபகரமானது என்று என் நண்பர் கூறுகிறாரே ?**

**மருத. வடுகநாதன்74025 35462**

"யாரையாவது பழிவாங்கணும்னா அவரை பத்திரிகை நடத்த சொல்வேன்"னு டிவியிலேயும், மேடைகளிலேயும் பல தடவை சொன்னதைக் கேட்ட பிறகுமா அந்த நண்பர் இப்படிச் சொல்கிறார்?

உள்ளங்கைக்குள் உலகத்தைத் தட்டியவுடன் பார்க்கும் காலத்திலா. பத்திரிகை நடத்த முடியும்... அதுவும் லாபத்துடன் நடத்த முடியும் என்று அந்த நல்லவர் நினைக்கிறார்?

**★ ● ■ – குறியிட்ட கேள்விகள் முறையே ரூ.500/–, ரூ.300/–, ரூ.200/– பரிசு பெறுகின்றன.**

**பரிசினை வழங்குவோர்: அரிமா இந்திரராஜன் – கா.பானுமதி தம்பதியர்**



பார்ப்பது அதிகமாகி, படிப்பது குறைந்து, தேவைக்கு அதிகமான விஷயங்கள் மின்னணுத் தொழில் நுட்பக் கருவிகளால் திணிக்கப்பட்ட பிறகுமா பத்திரிகைகளால் ஜெயிக்க முடியும் என்று கனவு காண்கிறார்?

வணிகப் பத்திரிகைகளே இன்று துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று தலைமறைவாகி வருவதைக் கண்ட பிறகுமா பத்திரிகைத் தொழிலில் பணம் கொட்டும் என்று கோணிப்பைகளுடன் காத்திருக்கிறார்? ஆஹா. யாரு சார் அவரு? அவருடைய முகவரியை எங்க பதிப்பாளர்கிட்டே கொடுங்க. நேரிலே போய் கால்ல விழுந்து இந்தா பிடின்னு எழுதிக் கொடுத்துட்டு திரும்பிப் பார்க்காம வரச் சொல்லி அவரை அனுப்பறேன். (யாரு மாட்டுவாங்கன்னு தேவுடுகாக்கிறோம்லே)




**'ஒரே தேசம் ஒரே தேர்தல்..' நமது பாரததேசம் வலிமை பெற வழிகோலுமா?**

**ரவிஜி 9486102762**

இத்தனைக் கோடி மக்கள் இருக்கும் தேசத்தில் அடிக்கடி தேர்தல் என்பது ஆரோக்யமானதல்ல.

ஒரே நேரத்தில் தேர்தல் என்பது நேரம், மனித உழைப்பு, தேர்தல் செலவு அனைத்தையும் குறைக்கும். ஆனால் இது உடனடியாக நடக்கக்கூடிய காரியமுமல்ல.

மாநில அரசுகளிடம் ஒப்புதல், கட்சிகளிடேயே ஒருமித்த கருத்து. இவை உருவான பிறகு தேர்தல் ஆணையம் இது குறித்து யோசிக்கும்.

தேர்தல் செலவு அதற்குக் கார்ப்பரேட்களின் நன்கொடை, அதற்குப் பிரதிபலனாய் அரசுக்கு நெருக்கடி. இவற்றைத் தவிர்க்க... 'ஒரே தேசம் ஒரே தேர்தல்' தான் சிறந்த வழி.

**✶ பள்ளியில் தங்களை மேம்படுத்திய ஆசிரியரை நினைத்து மகிழ்ந்ததுண்டா ?**

**எஸ்.சந்தர் 9952293426**

ஆசிரியர்கள் அறிவுக்கண் திறந்த ஆண்டவர்களல்லவா?

5ஆம் வகுப்பில் ஆங்கிலம் கற்பித்த சாமுவேல்சார், கணக்குடன் கிருத்துவ நீதி போதனைகளைப் போதித்த தேவராஜன், 6முதல் 9 வகுப்பு வரை தமிழை ஊட்டி விட்ட கள்ளக்குறிச்சி ஆராவமுதன் அய்யா, 11 ஆம் வகுப்பில் அறிவியல் பாடத்தை மிக எளிதாய் விளக்கிய ராம. மெய்யப்பன், சரித்திரத்தைக் குடும்பக் கதை போல் பதிய வைத்த அமிர்தலிங்கம் (சோடா புட்டி கண்ணாடி சார்)

குருநானக் கல்லூரியில் கணித வகுப்பை ஜாலியாய் நடத்திய டி.வி.ரமணா (கிரிக்கெட்அம்பயர்), "டேக் டவுன்" ஸ்பெஷலிஸ்ட் கங்காதரன் (கிரிக்கெட் வீரர் குண்டப்பா விஸ்வநாத்

மாதிரி இருப்பார்) இப்படிப்பட்ட ஆசிரியர்களின் முகங்கள் இன்று கூட HD படம் போல் தெளிவாய் தெரிகிறதே. எப்படி மறக்க முடியும்?

விழுப்புரத்தில் 'அரட்டை அரங்கம்' நிகழ்ச்சி நடந்த போது அறிவியல் ஆசிரியர் ராம. மெய்யப்பனை எப்படியோ கண்டுபிடித்து, தேர்வுக்கு வந்த பேச்சாளர்கள் மத்தியில் அறிமுகம் செய்ததைப் பெருமையோடு நினைத்துப் பார்க்கிறேன். (1974ல் அறிவியல் மற்றும் சரித்திரத்தில் நான் தான் பள்ளியில் முதலிடமாக்கும் ஹி... ஹி...)

**? ஞான சூன்யத்திற்கு கவர்னர் பதவி கிடைத்தால்...?**

**ஆர்.காவ்யா: 9952113194**

நிச்சயம் ஏற்றுக் கொள்வேன். "ஆட்டுக்குத்தாடியும் நாட்டுக்கு கவர்னரும் தேவையில்லை"..."கவர்னர் என்பவர் போஸ்ட்மேன் வேலை செய்பவர்"... "நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போடுவதைத் தவிர அவருக்கு வேறென்ன வேலை?" என்றெல்லாம் அன்புடனும், அக்கறையுடனும், கவலையுடனும் இருக்கும் தமிழ்நாட்டுக்கு ஆளுநர் ஆனால் மனம் மகிழ்வேன். (பச்சைத் தமிழன் எனக்குக் கவர்னராகத் தகுதியில்லையா என்ன?



**? இரு மொழி, மும்மொழிக் கொள்கை குறித்து ஞான சூன்யத்தின் கருத்தென்ன ?**

**மு .கமால் பாட்சா 8012377058**




ஞானசூன்யம் பெரிய லட்சியவாதியோ, கொள்கைவாதியோ அல்லன். அடியேன் சாதாரண பாமரத்தனமான எதார்த்தவாதி.

ஆரம்பம் முதல் முதுநிலைக் கல்வி வரை தாய் மொழிக் குறித்த பாடங்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும். தாய் மொழிப் பாடத்திட்டத்தில் 60 சதவீதம் மதிப்பெண் பெறுவது கட்டாயமாக்கப்பட வேண்டும். இது தாய் மொழியைத் தலைமுறைத் தாண்டி வளர்க்கும் முயற்சி.

சர்வதேச அளவில் இன்று கல்வியும், தொழில் நுட்பமும் அசுர வளர்ச்சி பெற்றுள்ளதால் மற்ற பாடங்களை ஆங்கிலத்தில் பயில்வது நல்லது. காரணம் ஆங்கிலம் மட்டுமே உலக அளவிலான இணைப்பு மொழி (அமித்ஷா மன்னிக்கவும்)

அடுத்து எல்லோருக்கும் அவரவர் மாநிலத்திலேயே வேலை

கிடைப்பதும், அயல் நாடுகளில் வேலை கிடைப்பதும் இயலாத காரியம். படிப்புக்கேற்ற தொழிலும், தொழிலுக்கேற்ற படிப்பும் நம்நாட்டில் இல்லை என்பதை முரண்டு பிடிக்காமல் நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

அப்படியானால் தேசத்தில் எங்கு வேண்டுமானாலும் சென்று படிக்க, பயிற்சி பெற, வேலை பெற, தொழில் தொடங்க ஒரு இணைப்பு மொழி இன்று மிக மிக மிக அவசியம்.




பாரதம் பலமொழிகள் கொண்ட தேசம் என்றாலும் பெரும்பாலான மக்கள் பேசும் மொழி இந்தி மற்றும் இந்தியைப் போன்றே உள்ள அதன் வாரிசு மொழிகள்.

எனவே இணைப்பு மொழியாக இந்தியை 3ஆவது பாடமாக, விருப்பப் பாடமாகப் பள்ளிகளில் படிப்பதற்கு மாநிலங்கள் அனுமதிக்க வேண்டும் . (இந்தி தெரியாததால் அரட்டை அரங்கம் போன்று நடிகர் அமீர் கானுடன் இணைந்து ஒரு பேச்சரங்கம் செய்யும் வாய்ப்பை இழந்தவன் நான் )

மனைவி வந்தால் அம்மாவை மறந்து விடுவோம் என்பது எப்படி தன்னையும், தன் தாயையும் ஆத்மார்த்தமாக நேசிக்காதவனின் அவநம்பிக்கையோ... அப்படித்தான் ஒரு மொழி வந்தால் தன் மொழி அழியும் என்பதும்.

இந்தி படிப்பதால் தாய் மொழி அழிந்துவிடும் என்பதெல்லாம் மாணவர்களின் எதிர்கால கனவுகளை கருக்கும் மிகப் பெரிய ஏமாற்று வேலைகளே.(மாணவர்களே பெற்றேர்களே அரசியல் சூழ்ச்சிக்காரர்களை நம்பி ஏமாறாதீர்கள்)

## கலைக்காவலர் ஏ.வி.எஸ்.ராஜா காலமானார்



ஸ்ரீராம் சிட்ஸ் குழுமங்களின் நிறுவனர்களில் ஒருவரான திரு ஏ.வி.எஸ். ராஜாவின் மறைவு வேதனைக்குரியது. தரமான தமிழ்ப் படைப்புகளையும் படைப்பாளர்களையும் கடந்த எழுபதாண்டுகளாகத் தந்து வரும் அமுதசுரபி மாத இதழின் பதிப்பாளர் இவர். இசை நாடகக் கலைக்கும் கலைஞர்களுக்கும் ஏற்றமும் எழுச்சியும் தந்து வரும் ஸ்ரீ கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் அமைப்பின் நிறுவனராகவும் இருந்தவர். அவரது மறைவிற்கு நம் உரத்தசிந்தனை ஆழ்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறது.

# எழுத்தத்தூண்டும் தீபம் திருமலை



*1965ல் தொடங்கிய 'தீபம்' இலக்கிய இதழில் 23 ஆண்டுகள் தன்னை உருக்கிக் கொண்டு உழைத்த மூத்த எழுத்தாளர் பத்திரிகையாளர் தீபம் திருமலை.*

*" தி ரு ம லை இல்லையென்றால் நா.பா. தீபத்தை இத்தனை ஆண்டுகள் நடத்தியிருக்க முடியாது" என்று பலரும் பாராட்டும் அளவிற்கு அப்பத்திரிகையோடு தன்னை இணைத்துக் கொண்டவர் இவர்.*

*தினமணியில் தினமலரில் 10 ஆண்டுகள் நூல் மதிப்புரை எழுதியவர். நவபாரதி பிரசுரம் மூலம் 20 நூல்களை வெளியிட்டு இருப்பவர். எல்லா பதிப்பகங்களுக்கும் உற்ற நண்பர். பல பதிப்பகங்களில் பிழைத் திருத்தம் செய்யும் பணியை பல ஆண்டுகள் ஆர்வத்துடன் செய்தவர்.*

*குழந்தைகளுக்காக நூறு நூல்களை எழுதியிருப்பவர். பல எழுத்தாளர்களின் நூல்கள் வெளியிட கிரியா ஊக்கியாக இருப்பவர்.*


*எல்லா பத்திரிகைகளையும் படிப்பவர், இன்று வரை விமர்சனக் கடிதங்களை அஞ்சல் அட்டையில் எழுதி தான் வாசகராக இருப்பதைப் பெருமையாக நினைப்பவர்.*

*'நம் உரத்தசிந்தனை' காலாண்டு இதழாக ஆரம்பித்த காலத்தில் விருந்து அதன் வாசகராகவும் படைப்பாளியாகவும் இன்று வரை இருப்பவர்.*

*யாரைப் பார்த்தாலும் "எழுதுங்க.. இல்லைன்னா எழுதியிருப்பதை என்னிடம் கொடுங்க புத்தகமாகப் போட்டு விடு வோம்" என்று இவரைப் போல் உற்சாகப்படுத்த யார் இருக்கிறார்கள்?*

*வள்ளியப்பா நினைவுப்பரிசு, ஏவிஎம் அறக்கட்டளைப் பரிசு அனந்தாச்சாரி அறக்கட்டளைப் பரிசு போன்று பல பரிசுகள் பெற்றிருப்பவர். 60 ஆண்டுகளாக பத்திரிகையுலகில் எழுத்தாளராக, நூலாசிரியராக, பலரையும் எழுதத் தூண்டுபவராக, எல்லாவற்றுக்கும் மேலாக தரமான வாசகராக விளங்கும் தீபம் திருமலையை நட்சத்திர வாசகராக நம் உரத்த சிந்தனைப் பாராட்டி மகிழ்கிறது.*

பாராட்டுவதற்கு **98404 79534**



**'நட்சத்திர வாசகர்'**
பரிசுத்தொகை **ரூ.200/–**
வழங்குபவர்:
**ஹரிகோபி,** புதுதில்லி

Printed by **P.V. Vetrimani,** Printed at **Kokilam Printers** Old No.51, New No.145/1, Patel Road, Perambur, Chennai - 600 011 and Published by **E.Mani,** Published from No.18A, Jaganathan Salai (Earikkarai Salai), Kolathur, Chennai - 600 099.
Editor **S.Ganapathy Venkataraman**

செய்திகள்

## பாரதி அறிஞர் விருது



மகாகவி பாரதியாரின் 140வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம் சார்பில் பாரதி உலா மூலம் மகாகவி பாரதியாரின் புகழ் பரப்பிவரும் உரத்தசிந்தனை உதயம்ராம் அவர்களுக்கு பாரதி அறிஞர் விருது வழங்கப்பட்டது. சொல்வேந்தர் சுகிசிவம், எழுத்தாளர் அவ்வை அருள், ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகத்தின் தலைவர் சுந்தரேசன் ஆகியோர் முன்னிலையில்... சென்னை மாநிலக் கல்லூரியின் முதல்வர், பேராசிரியர் முனைவர் இராமன் தலைமைதாங்கி விருதுகளை வழங்கினார்.

## நூல் வெளியீட்டு விழா



மருதம் நெல்லி பாலிடெக்னிக் மற்றும் ஜெயம் கல்லூரி இணைந்து நடத்திய நூல் வெளியீட்டு விழாவில், மகிழினி பதிப்பகம் வெளியிட்ட கவிமுகில் சுரேஷ் எழுதிய "பாரதியின் கண்ணம்மா" நூல் வெளியிடப்பட்டது. உடன் இருப்பவர்கள் இளந்தென்றல் சி.சரவணன், கஷ்மிர் ஜோசப், அறிவொளி, மா.பழனி, மருத்துவர் அய்யா செந்தில், சுபி முருகன், கௌரி லிங்கம், ரவிச்சந்திரன் ஆகியோர்.

# பாரதியின் குயில் பாட்டு - நூல் வெளியீடு



சென்னை ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகத்தின் சார்பில் மகாகவி பாரதியின் 140வது பிறந்தநாள் விழாவில் சென்னை மாநிலக் கல்லூரியின் முதல்வர், பேராசிரியர் முனைவர் இராமன் தலைமையில் முனைவர் ஔவை அருள் எழுதிய “பாரதியின் குயில் பாட்டு” நூலினை சொல்வேந்தர் சுகி சிவம் வெளியிட்டார். ஸ்ரீராம் குழுமத்தின் தலைவர் ‘பத்மபூஷண்’ திரு.ஆர். தியாகராஜன், குழுமத்தின் இயக்குநர் திரு.ஜி.சுந்தரேசன் மற்றும் கல்வியாளர்கள், தமிழறிஞர்கள் நிகழ்வில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

# ஸ்ரீராம் குழுமத்தின் பாரதி விருதுகள்



மகாகவி பாரதியாரின் 140வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம் சார்பில் மகாகவி பாரதியார் புகழ் பரப்பி வரும்டாக்டர் கலைமாமணி சூரியபிரகாஷ், நரம்பியல் மருத்துவர் மெய்கண்டான் பேராசிரியை உலகநாயகி பழநி, கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு, உரத்தசிந்தனை உதயம்ராம், திருவையாறு சிவகுமார் ஆகியோருக்கு பாரதி விருதுகள் வழங்கப்பட்டன. சென்னை மாநிலக் கல்லூரியின் முதல்வர், பேராசிரியர் முனைவர் இராமன் தலைமைதாங்கி விருதுகளை வழங்கினார். சொல்வேந்தர் சுகி சிவம் சிறப்புரையாற்றினார். எழுத்தாளர் அவ்வை அருள், ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகத்தின் தலைவர் சுந்தரேசன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் பொன்னேறி பிரதாப் மற்றும் எழுத்தாளர் பாலசாண்டில்யன் பங்கேற்றனர்.

**NAM URATHA SINTHANAI**, Tamil Monthly Posted at Egmore RMS Pathrika Channel, Posted on 09-15 **MAY 2022**
Postal Regd. No. **TN / TBM / 211 / 2019-21** RNI No. **TNTAM/2002/09122**
Licenced to post without Pre-Payment Licence No. **WPP/No.TN/PMG(CCR)/WPP 622/2019-2021** Publishing : 2nd week of every month

GSTIN : 33BBBPR3029K2ZO

GCA

# GREEN COOLING AIRCON

## AIR CONDITIONER - SERVICE & INSTALLATION



**New No: 21, Old No:11, Mootaikaran Street,**
**Mannady, CHENNAI - 600 001.**

Cell : **98567 15074**

email : **greencoolingaircon1@gmail.com**